BILINGUAL FORTNIGHTLY

ஒரு பேப்பர்
ORU PAPER

Paper - 04 Issue - 86 18 Friday January 2008 ஐரோப்பாவில் ஆகக் கூடிய விலை 1 யூரோ

• நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
• வியாபார, ஆயுள்க் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
• உங்களுக்கு தேவையான Tax Advice, வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை Accountancy Servicesகளுக்கும் நாட வேண்டிய இடம்...

Forward Consultants
1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052

Photo: Kirukkan Ananthan

VISION TRAVEL & TOURS
உலகின் அனைத்து இடங்களுக்கும் மலிவான விலையில் பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளுதற்கு.....
SHIPPING | TRAVEL & TOURS | AIRFREIGHT TO WORLDWIDE
Part of Serendip Lanka Travels
Tel : 020 8772 7991-2 Fax : 020 8772 7993

Sky Wings
TRAVEL AGENTS
Simply the best in Price & Service
Main agents for Sri Lankan Airlines, Qatar Airways, Kuwait Airways
Tel: 020 8672 9111

Hot Fares - Economy
Colombo from £335 + Taxes
Dubai from £205 + Taxes
Madras from £300 + Taxes
Bombay from £237 + Taxes
Delhi from £300 + Taxes
Hong Kong from £370 + Taxes
Cairo from £241 + Taxes
ABTA PROTECTED IATA
Please call us on
020 8866 6006
020 8866 6011
Cheapest tickets Worldwide
United Travel Ltd
428, Rayners Lane, Pinner, Harrow, Middlesex, HA5 5DX

ABBEY TRAINING. NET
✓ OFF Licence/ Restaurant விபரமறிந்து எடுப்பதற்கும் அனைவருக்குமான Personal Licence எடுத்து தருவோம் அதற்கான
✓ NCPLH CERTIFICATE COURSE
✓ Supervisor Course For OFF Licence and Restaurants (DPS)
✓ உங்கள் விபரம் சிறந்ததற்கான புதிய off licence / restaurant premises licence எடுத்து தருகிறோம்.
✓ LIFE IN THE UK - பிரித்தானிய பிரஜை உரிமைக்கான வகுப்புகள்
✓ மொழி Course மலையகத் தமிழர்களுக்கு விரிவுரையாளர்களுடன் நடத்துகிறோம்
38 London Road, Tooting SW17 9HP
தொடர்புகொள்ள: Thavanessan
020 8640 9900 / 07956 913 164 / 07960 665 575

RAJA& CO SOLICITORS
10 Upper Tooting Road, Tooting Bec
London SW17 7PG
Tel:020 8772 4900 Fax:020 8682 9425
We provide following Legal Services:
Conveyancing:-
Buying and Selling
Houses Flats & Business
Criminal Cases
Civil Litigation
Family
Immigration
We hold Legal Aid Franchise in Immigration & Crime

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
Had an accident – Not your fault
Driver / Passenger – within last 3 years
• Personal Injury Compensation (eg. back, neck & Shoulder pain etc)
• Repair / Total Loss Value of your vehicle
• Loss of Earnings
• Hire Car for Mini Cab Drivers
• Replacement Car = Credit Hire (terms & Conditions apply)
Your Premium will not be affected
NO WIN - NO FEE
Tel:020 8665 7667 Fax: 020 8684 7177
Mob: 07950 953 514 Call Free: 0800 032 6790

Mortgagelink
The National Mortgage Network
Why Rent... When You can Buy?
எந்த விதமான Deposit இல்லாமல் வீடு வாங்க வேண்டுமா?
வாடகை வீடுகளில் வசிப்பவர்கள் சொந்தமாக வீடு வாங்கி வாழ விரும்புகிறீர்களா? கவலை வேண்டாம்
தற்போது கீழ்கண்ட இடங்களில் வீடுகள் கைவசம் உள்ளன.
Mitcham, Thornton Heath, Peckham, South Norwood, Croydon, Eastdown Park, Streatham, Sydenham, Penge, Catford.
Mob: 07930 626 585 | Tel: 020 8946 5566
Your home is at risk if you do not keep up repayments on a mortgage or other loans secure on it.

உங்கள் அனைத்து தகவல் தேவைகளுக்கும்..
ASK TAMIL.COM™
No.1 British Tamil Business Directory
www.asktamil.com

Whatever your stage of life
பல்கலைக்கழக அனுமதிக்கும் வேலைவாய்ப்பிற்கும்
AAT-Courses
Foundation, Intermediate & Technicians Levels
Sage-Line50 / Payroll / Office Applications
aat
@ TR TEC
Alperton
Gants Hill
Tooting
AAT Open Day- Sat & Sun 02 & 03 February 2008
And 11+ Exam , Maths, Science,Accounts & ICT Classes
Tel: 020 8554 2963 (H/O Mon-Fri 09.30 –15.30)
பயிற்சியில் 17 ஆண்டுகள் அனுபவமிக்க தமிழர் நிறுவனம்

ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

உங்கள் வீட்டில் மீன்குழம்பு ருசித்த போதெல்லாம்
நினைவிற்கு வந்த பெயர்

கஜன் திருக்குட்டி

இப்போது மீண்டும் புதிய வளத்துடனும்
புதிய பொலிவுடனும் வந்திருக்கிறோம்.

உங்கள் தொடர்ந்த
ஆதரவுக்கு நன்றி
கஜன் திருக்குட்டி

RAVE CHANTHIRA
Mitcham Lane, Streatham
SW16 6QB
Tel: 020 8696 9393

ANGELS

Mortgages + Loans
Sales + Lettings
Insurance + Building Insurance

Properties and Financial Services Ltd.

Commercial Mortgage
Decision – Same day

5% - 10%
Deposit paid

- ☑ Repossessions stopped
- ☑ Mortgage/Loan cleared
- ☑ Eviction stopped
- ☑ Urgent cicrcumstances

74 Lee High Road
Lewisham SE13 5PT
Tel: 020 8852 1683
Fax: 020 8852 1621
email: info@angelsproperties.co.uk
web: www.angelsproperties.co.uk

தரமான சேவை நிறைவான கட்டணம்

ACCA

- ☑ Tax Returns - Buy to Let properties
- ☑ Tax Returns - HSMP Visa Holders
- ☑ Solicitors Accounts / Bank Reconciliation
- ☑ VAT Returns / Payroll / PAYE
- ☑ Company Formation
- ☑ CGT & Death Tax Advice
- ☑ Business Plan & Cash-flow Forecast

Qualified & experienced accountancy professionals
Free initial visit to your premises and consultation
Practical training for students & Book keepers

J K ACCOUNTANTS

CALL: 0208 553 9891

Chartered Certified Accountants - Chartered Management Accountants

845A Romford Road, Manor Park, London E12 5JY - Email : jkaccountants@talktalk.net

"காருக்கு டயர் அழகு"

புதிய மலிவு டயர்கள் மாற்றிக் கொடுக்கப்படும் மற்றும் கார் சேர்வீஸ்
உட்பட சகல கார் திருத்த வேலைகளுக்கும் எங்களை நாடுங்கள்

- Wheel Balancing
- Wheel Alignment
- New & Second Hand Rims
- Shock Absorbers
- Batteries
- Exhaust
- Brakes
- Services
- MOT Work

Open 7 Days a Week
Mon - Sat 8:30am - 7pm
Sun 9:00am - 6pm

New & Part - Worn Tyres, Sold and Fitted
Punctures Repaired while you wait

British & Foreign Cars

Continental GOODYEAR MICHELIN PIRELLI DUNLOP

TYRE CHECK
Auto Spares- Accessories

368 High Street North, Eastham, E12 6PH
Tel: 0208 586 08 86, Fax: 0208 470 47 45
Mob: 07956 353 774, T Suresh@tiscali.co.uk

"WEAKNESS GONE.. ENERGY ON.."

கண்டிப்பாக ஆண்களுக்கு மட்டும் **FOR MEN ONLY**



HERBAL 1-TOP CAPSULE

ULTIMATE HERBAL APHRODISIAC
AND THE NON-SURGICAL SOLUTION
FOR MALE PROBLEMS &
IMPOTENCE MANAGEMENT
For Rejuvenation & Virility

£ 30

இது உறுதி · இன்றைய இரவு இனிமையானது · இனிவரும் இரவுகளும்

Useful As An Adjuvant For Fatigue & Stress, To Increase Potency And Youthful Vigour Of A Man And To Check Ageing & Seminal Debilities

To Tone up the under-developed penile muscles & nerves for improved performance

MUSCULA MASSAGE OIL FOR MEN
"RECHARGE YOUR LIFE"

Mascula Massage Oil Is Special Massage Oil For Men Extracted From Rare & Precious And Time Tested Herbs To Improve Blood Circulation And Strengthen Nerves Of Male Organ. £ 20

Trade/Mail Order : **PENTAVOX (U.K.) Ltd.**
P.O. Box 409, 46 Mandeville Road, Northolt, Middx UB5 9AJ, TEL : 020 88 33 44 93

புரையேறு

கேணலுக்கு பிடித்த கிலி

கடந்த சனிக்கிழமையும், ஞாயிற்றுக் கிழமையும் லண்டனில் சில தமிழர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டங்களில் பேசுவதற்காக வர விருந்த முன்னாள் இந்திய இராணுவ கேணல் கடைசி நேரத்திலை வரேல்லையாம்.

ஏற்கனவே ஒரு முன்னாள் கேணல் இங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கிற நிலையிலை தானும் வந்தால் மாட்டிக் கொண்டு விடுவேனோ என்று இவர் வரேல்லையாம்.

போர் குற்றத்துக்காக இவருக்கு மேலையும் சட்டம் தன் கையை நீட்டாது எண்டு உறுதியாய் சொல்லேலாது.

— வதனன் / லூரசியம்

நல்ல காலம் பிறக்குது

உங்களுக்கு இருந்தாப் போலை என்ன நடந்தது?

நாங்களும் கத்திக் கத்திப் பாத்திட்டுக் களைச்சுப் போயிருக்க திடீரெண்டு ஓசியை எடுத்திட்டியள். அப்ப உங்களுக்கும் நல்ல காலம் பிறக்குது போலை, அதுமட்டுமில்லை. பேப்பரும் இப்ப திறமா வருது

ஆனாலும் ஒரு சின்னச் சந்தேகம். ஐரோப்பாவைப் போல இங்கையும் பேப்பரைக் காசாக்கிப் போடுவியளோ எண்ட சந்தேகம் தான்.

— காந்தன் / மிச்சம்

நீங்கள் தான் நடுநிலமையான ஆக்கள்

உண்மை நடுநிலமை எண்டு பம்மாத்துக் காட்டிக்கொண்டு அவனவன் வீட்டுக் கோடியில் சிறுநீர் கழித்தாலே அதை செய்தியாய்போட்டு திருப்திப்படுகிற சில பத்திரிகைகள், சிவலிங்கம் செய்த மோசடிபற்றி எதுவுமே எழுதவில்லை. இதுதான் சொல்லிறது 'தனக்கு தனக்கு எண்டால் சுளகும் படக்கு படக்கு என்று அடிக்குமாம்' என்று.

— சேந்தன் / வோல்தம்ஸ்ரோ

இப்பதான் இது கொமியுனிற்றி பேப்பர்

சீட்டு, வட்டி என்று ஆக்களை ஏமாற்றி காசுபறிக்கிறவர்கள் பற்றி 'சீட்டு சிவலிங்கம் சிவப்புச் சிவலிங்கமான கதை' என்ற செய்தி கட்டுரையில் எழுதியிருந்தீர்கள்.

சமுதாயத்தில் இருக்கிற அழுக்கானவர்களை வெளிபடுத்திமற்றவர்களை விழிப்படைய வைத்தமைக்கு நன்றி. உங்கள் பணி தொடரட்டும்.

— சிவா / வெம்பிளி

நல்ல மாற்றம்

ரமிலை வளர்க்கும் ஒரு பேப்பர் ரான ஒரு பேப்பர் காரன், காரிகைகள் அறிவது, முதலில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்

காரணம் எனது தலையீடோ அல்லது வேறுயாரின் தலையீடோ தெரியாது. ஒரு பேப்பர் ரின் ஓசி என்ற சொல் ஈசியாக மாற்றம் பெற்றுள்ளது.

அடுத்தது ஒரு பேப்பர் காரரை மதம் சார்ந்திராதவர்கள் என்று, கூறமாட்டேன். ஏனெனில் அதிகளவில் இஸ்லாம் மதத்திலும் அடுத்தபடியாக கிறிஸ்தவ மதத்திலும் மூட நம்பிக்கைகள் இருக்கும் போது இந்து மதத்தைப் பற்றியே தாக்குகிறார்கள்.

அதே நேரம் நான் கொடுத்த கருத்துகளை மூலாதாரமாக்கி சேயோன் அவர்கள் சென்ற இதழில் மதங் கொத்திகளைப் பற்றி எழுதியிருப்பது சந்தோசத்தைத் தருகிறது.

— வேங்கை

அரசியல் அருமை

கடந்த நான்காம் திகதி வெளி வந்த பத்திரிகையில் பல காத்திரமான அரசியல் கட்டுரைகள் வெளி வந்திருந்தன.

வழமை போலவே சபேசனின் அரசியல் அலசல் அருமை.

அத்துடன் புதிதாக ஒரு பேப்பர் ரில் எழுதியிருந்த இதயச்சந்திரன் அவர்களது கட்டுரையும் பயனுடையதாய் அமைந்திருந்தது. இது போன்ற கட்டுரைகளைத் தொடர்ந்தும் பிரசுரிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

— கலா / பாரிஸ்

சிலப்பதிகாரம் அத்தனை பழையதா?

தமிழால் பொங்குவோம் என்ற கட்டுரையில், திரு. இரவி அருணாசலம் அவர்கள் சிலப்பதிகாரம் என்ற காப்பியத்தை இற்றைக்கு 1500 ஆண்டுகளுக்குமுன்னர் எழுதப்பட்ட நூல் என வர்ணித்திருந்தார்.

நானறிந்து சிலப்பதிகாரம் என்பது 17வது நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல். அதற்கு உதாரணமாக, 'கடல் சூழ் இலங்கையின் கஜபாகு மன்னனும் வந்தான்..' என சிலப்பதிகாரத்தில் வரும் வரிகளைக் குறிப்பிடலாம்.

கஜபாகு மன்னன் இலங்கையை ஆண்டது 1500 ஆண்டுகளுக்கு முன் அல்ல என்பதை கவனத்தில் எடுத்தால், இதிலுள்ள தவறு வெளிப்படும்.

— வித்தி / பின்னர்

மீண்ட நினைவுகள்

அன்பின் ஒரு பேப்பர் ஆசிரியருக்கு

நான் தங்களின் 04/01/08 திகதி வெளியிடப்பட்ட ஒரு பேப்பர் வாசித்தேன்.

அதில் சிறி எழுதிய எழும்படி பெண் பாவாய் என்ற கட்டுரை வாசித்தேன். அதை வாசிக்கும் பொழுது எனக்கு அந்த நாள் ஞாபகம் வந்தது. ஏனெனில் அவர் எழுதியது போலவே நாங்களும் காலையில் எழுந்து திருவெம்பா பாடப் போய் தேநீர் குடித்த அனுபவங்கள் ஞாபகத்திற்கு வந்தது. அக்கட்டுரை எழுதியவருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றிகள்.

அதுபோலவே இன்னொரு கட்டுரை கானா பிரபா எழுதிய ஊர்ப்பொங்கல் வாசித்தேன். அதுவும் எனக்கு பழைய நினைவுகளை மீட்டித் தந்தது. அதில் கூறப்பட்டது போலவே நாங்களும் பால் பொங்கும் பொழுதும் பிறிம்பாக வெடிகளைச் சேர்த்து கொழுத்தி வெடித்த ஞாபகம் மீண்டும் வந்தது.

எனவே இப்படியான கட்டுரைகளைத் தொடர்ந்தும் ஒரு பேப்பர் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்துடன் நான் வாசிக்கும் பேப்பர்களில் ஒரு பேப்பர் ரை மட்டுமே முழுமையாக விரும்பிப் படிப்பேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

— ஆனந்தன் / சவுத்ஹோல்

காலத்தின் தேவை

சோதிடர்களே எம்மைச் சோதிக்காதீர்கள் என்ற கட்டுரை காலத்தின் தேவை.

இம்முறை தமிழர் திருநாளாம் தைப் பொங்கலை கனடாவில் ஒரு நாளும் இங்கிலாந்தில் வேறோரு நாளும் கொண்டாட வைத்துக் கூத்துப் பார்க்கும் இந்தப் பித்தலாட்டக்காறர்களை ஒதுக்கி வைத்து விட்டு எமக்கென்று ஒரு நேரசூசியை வகுத்து செயற்பட வேண்டிய காலம் வந்து விட்டது.

உலகெங்கும் வாழும் தமிழர்கள் ஒரே நாளில் இந்த விழாக்களைக் கொண்டாடும் போது தான் எமது மக்கள் மத்தியில் ஒற்றுமை அதிகரிக்கும். உரியவர்கள் கவனத்தில் கொள்வார்களா?

— பொன்னுத்துரை/ ஈஸ்ட்ஹாம்

புதிய வழியில் கலாநிதிப் பட்டங்கள்

கலாநிதிப் பட்டங்கள் என்பது கல்வி சார்ந்ததாக, சமூகம் சார்ந்ததாக, கலை இலக்கியம் சார்ந்ததாக அமையலாம். இதுவரை கல்வி சார்ந்ததான கலாநிதிகளைத் தான் நமக்குப் பரவலாகத் தெரிந்திருக்கிறது. ஆனாலும் அது கௌரவமாக பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று. கல்வி சார் சமூகத்தினை ஒரு உச்ச நிலைக்கு நாம் உயர்த்திய நிலைப்பாடாகும். அதுவும் பல்கலைக் கழகம் சார்ந்ததாக இருத்தலே சிறந்த்து. பலராலும் மதிக்கப்படும் அல்லது நீண்டகால சமூக வாழ்வியல் கலை இலக்கிய சமர்ப்பித்தலின் அர்ப்பணித்தலுக்காக வழங்கினால் அது பயன்பாடாகும்.

கலை இலக்கிய வாழ்வில் தங்களின் வாழ்வினை அர்ப்பணித்த எமது மாணிக்கங்களை மறத்தலின்றி, மறுத்தலின்றி ஏற்றுக்கொள்கின்ற பக்குவம் கலாநிதிப் பட்டங்களுக்கு அல்லது அவ்வாறான பட்டங்களால் ஏற்பட வேண்டும்.

வி. வி. வைரமுத்து, பூந்தான் யோசப், கே. வி. நடராஜன், அ.செ. முருகானந்தன், மயிலங்கூடலூர். பி. நடராஜன், டொமினிக் ஜீவா, சி.வி. வேலுப்பிள்ளை, என்.எஸ்.எம்.ராமையா, கோகிலம் சுப்பையா, வ.அ.இராசரத்தினம், அ.ந.கந்தசாமி, சில்லையூர் செல்வராஜன், அங்கையன், நீலாவணன், மகாகவி, கே.வி.எஸ்.வாஸ், ஈழத்து ரத்தினம், பார்வதிநாத சிவம், அன்புமணி, அகஸ்தியர், சித்திஅமரசிங்கம், பஸீர் காரியப்பர், புதுவை ரத்தினதுரை, எஸ்.பொ, மு.பொ, மு.தளையசிங்கம், இன்னும் இன்னும் பட்டியல் நீளும்.

மாறாக பணம் பண்ணும் நிறுவனங்கள் சில முளைத்து கலாநிதிப்பட்டங்கள் தருவதாக தாங்களே அறிவித்துவிட்டு அவர்களிடமே பணமும் கேட்டுப் பெறுகின்ற நிலைமை பல விதத்திலும் சந்தேகங்களை ஏற்படுத்தவே செய்யும். கலாநிதிப் பட்டம் பெற்றுக்கொள்ளும் சுயமும் கூட சந்தேகப்படும். பிறகு வாழ்வியலின், கல்வியியலின் மீதான கோபங்கள் விமர்சனத்திற்று உள்ளாகலாம்.

அண்மையில் அவுஸ்திரேலியா சென்று வந்த நண்பர் கூடச் சொன்னார் குறிப்பிட்ட ஒரு நண்பர் இந்தியா சென்றுவிட்டார். திரும்பி வரும்போது கலாநிதிப் பட்டத்துடன் தான் வருவார் பாவம் எத்தனை இலட்சங்களை உறிஞ்சி விட்டார்களோ என்றும் அங்கலாய்த்துக் கொண்டார்.

இப்போது இலங்கையில் இருந்து உயர் கல்வி நிறுவனம் ஒன்று கலாநிதிப் பட்டம் வழங்குவதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். கூடவே அமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்தெல்லாம் பேராளர்கள் வருவதால் பெருந்தொகைப்பணம் தரும்படி கேட்கிறார்களாம். ஏங்கோ இடிக்கிறது. பணம் கொடுத்து அந்தப் பட்டம் பெறுவது கௌரவமானதா? முன்னர் பெற்றுக் கொண்டவர்களினதும், இனி பெற இருப்பவர்களினதும் பட்டங்கள் மீதான சந்தேகங்கள் வலுப்பெற வாயப்புண்டு. கல்லூரி அல்லது நிறுவன வளர்ச்சி நிதிக்கு பணம் கேட்பது தவறில்லை. ஆனால் கலாநிதி பட்டத்திற்கென பணம் வாங்காது தகுதி வாய்ந்தவருக்கு பட்டம் கொடுப்பதற்கு ஏனையவர்களிடம் நிதி கேட்பதும் தவறில்லை. கலாநிதி பட்டம் கொடுப்பதாக ஒருவரை அவமானத்திற்குள்ளாக்கக் கூடாது. எவ்விதமான பட்டம் கொடுத்தாலும் சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தில் அவதானமாக இருத்தல் அவசியம். சிந்திப்போமா?....

- இராகவன் (இலண்டன்)



நன்றி : தினக்குரல்

MONEY IN MINUTES TO SRI LANKA

MCG
Open 7 Days

India, USA, Canada, Australia
Transfers to
over 120 Countries

FAST CASH
SEND TODAY - COLLECT TODAY

இலங்கைக்கான பணமாற்றுச் சேவை
நம்பிக்கை நாணயமிக்க மிகத் துரிதமான சேவை
குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்கு பெற்றுக்கொள்ளவோ அன்றி அங்குள்ள உங்களது எந்த வங்கிக் கணக்கிலும் வைப்பு செய்ய கூடியதான வசதிகள்.

HSBC COMMERCIAL BANK HNB
PEOPLE'S BANK SEYLAN BANK LIMITED සම්පත් බැංකුව SampathBank BOC BANK OF CEYLON

Head Office : 125 - 127 Bramley Road,
Oakwood, London N14 4UT

Transfer Hotline
020 8886 4488
www.cecfastcash.com

PAY AT
BARCLAYS
நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் பணத்தை பாதுகாப்புடனும் விரைவுடனும் அனுப்ப அருகில் உள்ள BARCLAYS இல் பணத்தை வைப்புச் செய்த பின் எமை அழையுங்கள்

A/C NAME : C.E.C.LTD
A/C NO : 70713945
SORT CODE : 20-36-47
BRANCH : HANOVER SQ.

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, JANUARY 18, 2008, ISSUE 86

இது பங்கேற்கவேண்டிய தருணம்

சிறிலங்கா அரசாங்கம் போர் நிறுத்த உடன்பாட்டிலிருந்து உத்தியோகபூர்வமாக விலகிக் கொண்ட சிலமணி நேரத்திலேயே இலங்கைத் தீவில் உள்ள மக்கள் அழிவுகளை சந்தித்துள்ளார்கள். மொனராகல மாவட்டத்தில் பயணிகள் பேருந்து மீது நடாத்தப்பட்ட தாக்குதலும், நேற்றய தினம் கிளிநொச்சி கனகபுரம் பகுதியிலுள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது நடாத்தப்பட்ட மோசமான விமானக்குண்டுத் தாக்குதல்களும் தீவு எதிர்நோக்கியுள்ள பாரிய மனித அவலத்தை கோடிகாட்டி நிற்கின்றன.

தாங்கள் போரில் வென்று வருகிறோம் என்ற நினைப்பு சிங்கள மக்களுக்கு இருக்கும்வரை சிறிலங்கா அரசின் போர் முயற்சிகளுக்கு அவர்கள் தமது ஆதரவினை வழங்குவார்கள். அங்கு குறைந்த எண்ணிக்கையாக இருக்கிற சமாதான ஆர்வலர்களினால் இந்நிலையில் எந்த மாற்றத்தையும் கொண்டுவர முடியாது.

ஒருதலைப் பட்சமாக போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியவர்கள் என்ற வகையில் சிறிலங்கா அரசானது மேற்குலக அரசுகளினது கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது. சிறிலங்கா அரசின் இராணுவத்தீர்வு முயற்சியை கருத்தளவிலாவது ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் அவை சிறிலங்கா அரசுடன் முரண்பட்டு நிற்பது தவிர்க்க முடியாதது ஆகிவிட்டது. இருப்பினும் அவை உடனடியாக சிறிலங்கா மீது பாரிய அழுத்தங்களை மேறகொள்ளும் சாத்தியக் கூறுகள் தென்படவில்லை.

தாங்கள் வழங்கிய இராணுவ உதவிகளைக் கொண்டு சிறிலங்காப் படைகள் குறுகிய காலத்திற்குள் விடுதலைப் புலிகளின் போரிடும் வலிமையை அழித்துவிடும் என்பதில் மேற்குலக அரசுகளுக்கு ஓரளவு நம்பிக்கையிருக்கலாம். அங்கு போர் நீடித்துச் சென்றால் சிறிலங்கா மீதான அழுத்தங்கள் அதிகரிக்கப்பட்டு அது உலக அரங்கில் தனிமைப்படுத்தப்படும். இப்போது சிறிலங்காவுக்கு ஆதரவு வழங்கி வரும் அண்டை நாடுகளினால் அப்போது எதுவும் செய்ய முடியாத நிலையேற்படும்.

சர்வதேச சமூகத்தின் ஆதரவினை நியாயத்தின் பக்கம் திருப்புவதிலும், சிறிலங்கா அரசின் இராணுவத்தீர்வு முயற்சியை தோற்கடிப்பதிலும் உலகத் தமிழர்கள் தம்மாலான முயற்சிகளில் ஈடுபட வேண்டிய தருணம் வந்துவிட்டது. சிறிலங்கா அரசுக்கு பொருளாதார பலத்தை பெற்றுக் கொடுக்கக் கூடிய நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டு வந்தால் அதனை இனி நிறுத்திக் கொள்வோம்.

இவ்விடயத்தில் சிறிலங்கா அரசுக்கு வருவாயை பெற்றுக்கொடுக்கும் சிறிலங்கன் எயர்லைன்ஸ் விமான சேவையை புறக்கணிக்குமாறு பிரித்தானிய தமிழர் பேரவை விடுத்துள்ள வேண்டுகோள் பொருத்தமான நடவடிக்கையாக உள்ளது. இதுபோன்ற போராட்டங்களுக்கு புலம்பெயர்ந்து தமிழர்கள் தங்களது முழு ஆதரவையும் நல்கவேண்டும்.

ஒரு பேப்பர் ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

வணக்கம்!

பொங்கல் இண்டைக்கோ அல்லது நாளைக்கோ எண்ட குழம்பமிருந்தாலும் பொங்கி மகிழந்திருப்பீர்கள். எங்களுக்கும் மறவாமல் பொங்கல், பலகாரங்களை கொண்டு வந்து தந்து அசத்தி விட்டீர்கள். நெஞ்சார்ந்த நன்றி.

ஐரோப்பாவில் பேப்பர் விநியோகத்தில் ஏற்பட்ட சில சிரமங்கள் காரணமாக போனமுறை பேப்பர் எல்லா இடமும் அனுப்பேலாமல் போயிடுத்து. இப்போது ஐரோப்பாவில் ஒரு பேப்பர் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதால், பேப்பரை விற்பதற்கும் விநியோகிப்பதற்கும் விரும்புவர்கள் லண்டனிலுள்ள எங்கள் தலைமை பணியகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். அதுபோல் வடஅமெரிக்காவில் சந்தாதாரகி ஒரு பேப்பர் ரை அஞ்சலில் பெற்றுக் கொள்ள விரும்புவோர் ரொறான்ரோவிலுள்ள எமது பணியகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தமிழ்க் கடைக்கு சாமான் வாங்க போகேக்கை மறக்காமலிருக்கிறதுக்காக லிஸ்ட் எழுதிக் கொண்டு போறனிங்களோ? அப்பிடி எழுதிக் கொண்டு வாற ஆக்களிலை பலர் அந்த லிஸ்டிலை தவறாமல் ஒரு பேப்பர் ரையும் சேர்க்கினம் எண்டு சில வர்த்தகர்கள் உவகையுடன் எங்களுக்கு சொல்லிச்சினம். இதை கேட்க இரவிராவாய் முழித்திருந்து பேப்பர் அடிக்கிற அலுப்பு போயிட்டுது. ஆக்கள் சீரியசாய் இருக்கேக்கை நாங்களும் சுறுசுறுப்பா இருக்கோணும் எண்ட உசார் வருகிறது.

ஒரு பேப்பர் ருக்கு ஆக்கங்களை அனுபேக்கை கொஞ்சம் இலகுவான மொழியிலை எழுதுங்கோ. இது ஈசியாய் வாசிக்கிறதுக்கான பேப்பரல்லோ! உங்கடை வித்துவத்தை எழுதிற மொழியிலை காட்டாதேங்கோ.. எங்களுக்கு நீங்கள் எழுதிற சங்கதியள் விழுங்கேல்லை எண்டால் தொடர்ந்து வாசிக்காமல் ரீசைக்கிளிங் கூடைக்கிள்ளை போட்டிடுவம்.

Kids Paperக்கு ஆக்கங்களை அனுப்பும் சிறுவர்களை பாராட்டி அவர்களை ஊக்கப்படுத்துங்கள். உங்களது குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்துவதை ஒரு பேப்பர் விருப்பத்துடன் வரவேற்கிறது. ஆகவே பாடசாலைகளில், விளையாட்டுத்துறையில், கலைத்துறையில் அவர்கள் வெளிப்படுத்தும் திறமைகளை எங்களுக்கு அறியத்தாருங்கள். நாங்கள் அவற்றினை பிரசுரிப்பதன் மூலம் அவர்களை மேலும் ஊக்கப்படுத்தலாம் எண்டு நம்பிறம்.

அதுபோல் சமூகத்தில் உங்களை அறிந்தவர் தெரிந்தவர் பெறும் சிறப்புக்கள் பற்றியும் (இன்ரநெற்றிலை பட்டம் வாங்கிறவை தவிர) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். அதுக்காக பொன்னாடை போர்க்கிறவை போர்க்கப்படுகிறவை போன்ற விபரங்களை எங்களுக்கு அனுப்பாதீங்கோ!

அவுஸ்திரேலியாவில் ஒரு பேப்பர் ரை வெளியிடுமாறு பலரும் எங்களை கேட்டுக் கொண்ருக்கிறார்கள். தோதான பாட்னர் கிடைத்தால் வெகுவிரைவிலேயே அங்கும் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வோம்.

அடுத்த பேப்பர் காதலர் தின சிறப்பிதழாக வெளிவரும். எனவே உங்களுக்கு காதலித்த அனுபவமிருந்தால் அந்த சுகஅனுபவங்களை ஒரு பேப்பர் மூலமாக மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். கண்டிப்பா உண்மையான பெயர்களை, இடங்களை குறிப்பிடவேண்டாம். அப்பிடி எழுதினீங்கள் எண்டால் நாங்கள்தான் வேண்டிக்கட்ட வேண்டிவரும்.

மீண்டும் சந்திப்போம்.

ஒரு பேப்பர் காரன்கள்+காரிகள்

EDITORIAL

Betrayal and Bitterness

This week we saw the formal burial of the Norwegian facilitated Cease Fire Agreement (CFA) in Sri Lanka. This CFA between the Tamils and the Government of Sri Lanka (GOSL), which must have saved more than ten thousand Tamils' lives during its lifetime, was finally unilaterally abrogated by the GOSL.

The day before the CFA was due to formally end, the United Nations High Commissioner for Human Rights, Louise Arbour, reminded the GOSL and the Tamil Tigers of their obligations under international law to respect human rights. She warned that rights abuses "by any party could entail individual criminal responsibility under international criminal law, including by those in positions of command."

Rejecting this warning as "pathetically unenforceable threats," GOSL said it "will not be deterred by thinly veiled threats attempting to undermine the morale of its military, deter its military campaigns and save separatist terrorism from elimination."

On the day of this unilateral abrogation of CFA more than twenty civilians, including three school children, were killed and more than sixty were wounded in a bomb blast in the Sinhala South.

The next day fighter bombers of the GOSL bombed a densely populated area in the Tamil North and injured seven civilians.

Thus what we are observing is the slow, violent and increasingly certain disintegration of Sri Lanka.

Is this state of affairs the fault of the Sri Lankans alone? Or does the International Community (IC) share this bloody burden too?

The IC does not seem to think so, as its press releases indicate a no blame theme.

European Union and Canadian ban of the Tamil Tigers disturbed the balance of power

But we, the Tamils do not think so. We ask the IC to force itself to confront an uncomfortable truth: events in Sri Lanka are to a good degree side effects of the ICs wrong foreign policy.

When the CFA was signed in 2002 there was military parity on the ground, thus allowing a balance of power between the GOSL and the Tamils. The Armed Forces of the GOSL were fought to a standstill by the Tamils and the economy of the GOSL was in recession for the first time in its modern history.

We Tamils paid very dearly to achieve this balance of power and history taught us that we had to maintain it at any cost. This is because we learnt bitter lessons in dealing with the GOSL in the past and thus knew that once the balance was disturbed in favour of the GOSL the next war would be initiated by the GOSL.

Tamils paid very dearly to achieve balance of power

In the meantime the GOSL busied itself doing exactly what we feared.

Within a year of signing the CFA the GOSL organised an International Donor Conference in United States knowing well that the Tamil side would not be able to attend as there were proscribed in the US. By doing so the GOSL started the diplomatic war of attrition in order to disturb the balance towards itself.

The IC was well aware of this Machiavellian strategy and decided to go along with it.

When informed observers pointed out the importance of the maintenance of the established balance as the bedrock of the peace process the post 9/11 US and others in the West were not in a mood to listen. They openly sided with the GOSL both diplomatically and economically, and also started to rebuild Sri Lankan Armed Forces. Thus the US led the disturbance of the balance in favour of the GOSL.

Emboldened by its successes the GOSL carried on with its overt and covert means in undermining the balance of power throughout the next four years while talking peace.

The European Union (EU) and Canadian ban of the Tamil Tigers in 2006 completed this grand plan of GOSL. At that time Mr. Hanssen-Bauer, who was the Norwegian Special Envoy, described the EU move as negative and counter productive. He further said that it damaged the chances of renewed peace talks.

Thus within four years the GOSL carried out many outstanding manoeuvres which reversed all the gains of the Tamils. The GOSL won almost all the battles its Armed Forces failed to win.

Finally in 2008, when it no longer had need for the CFA, the GOSL unilaterally terminated it.

Thus Sri Lanka is back to a disastrous war which will essentially involve the entire island, not just the Tamil Northeast.

The IC expresses its sadness and surprise at this turn of events.

Then why did the IC support the undermining of the peace process?

Some of us may think that the IC does not consider Sri Lanka as strategically important, thus this behaviour.

International Community shares the bloody burden too

While others believe that, Sri Lanka is strategically a vastly important prize for the IC, as important as Afghanistan or Iraq could ever be.

The cynics among us point out, that from the outset, what the IC wanted was the weakening of the Tamil side. Because in 2001 the GOSL was militarily and economically impotent the IC wanted time to rebuild the GOSL, they say. It never intended to be the neutral facilitator who was there to bring peace to the people of Sri Lanka.

Whatever the reason the overt and covert support of the IC to the GOSL has set the wheels in motion for a terrible war. That will very soon destabilise the whole of Sri Lanka. The Sri Lankan economy already teetering on the edge of disintegration, will surely crumble, while not forgetting the huge cost of life that this war will bring.

In the meantime those of us that believed that the IC would be Sri Lanka's saviour are left feeling betrayed and bitter.

போர் வலுச் சமநிலை குழம்பியதால் வந்த வினை

இன்றுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் உத்தியோக பூர்வமாகச் செயலிழக்க இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நான்காம் ஈழ யுத்தம் மும்முரமாகக் கட்டவிழப் போகின்றது. அதன் கோரமும், அகோரமும் எப்படி அமையும் என்பதை எண்ணிப் பார்க்கவே அச்சமாக இருக்கின்றது.

இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்ட காலத்திலேயே, இவ்வாறு அதை முறிக்கும் நிலை வரலாம் என்று கருதப்பட்டதாலேயே, யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுவதற்கான ஏற்பாடுகள் பற்றிய வழிமுறையையும் அதில் குறிப்பிட்டிருந்தனர்.

அந்த யுத்த நிறுத்த உடன்பாடு நின்று, நிலைத்துத் தாக்குப் பிடிப்பதற்கான அடிப்படை விவகாரம் ஒன்று குறித்து, அந்த உடன்பாடு செய்யப்பட்ட காலத்தில் இருந்தே திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்டு வந்தது.

யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்படுவதற்கும் அது தொடர்வதற்கும் அதில் சம்பந்தப்பட்ட தரப்புகளான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுத் தரப்புக்கும் இடையில் இருக்கும் இராணுவ வலுச் சமநிலை தொடர்ந்தும் மாறாமல் பேணப்படுவது அவசியம் என யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவரும், நோர்வே அனுசரணைத் தரப்பும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்தமை நினைவுகொள்ளத் தக்கது.

அந்த இராணுவ வலுச் சமநிலை குழம்பிப் போனதே இன்றைய அவல நிலைக்கு யுத்த நிறுத்த ஒப்பந்தம் தூக்கிக் கடாசப்படும் நிலைமை ஏற்பட்டமைக்கு பிரதான காரணம் என்பது தெட்டத் தெளிவு.

இன்றுடன் செல்லாக்காசாகும் இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டவர்கள் இருவர். இலங்கை அரசு சார்பில் அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க ஒருவர். மற்றவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன்.

இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை செல்லுபடியற்றதாக்கும் தற்போதைய அரசின் முடிவு, உத்தியோக பூர்வமாக அனுசரணைத் தரப்பான நோர்வேக்கு அறிவிக்கப்பட்டபோது, மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இருவர் சார்பிலும் ரணில் விக்கிரமசிங்க சார்பில் அவரது கட்சியான ஐ.தே.கட்சியினாலும், வே. பிரபாகரன் சார்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினாலும் வெளியிடப்பட்ட இரு வேறு அறிக்கைகளில் ஒரு விடயம் பொதுவாக அமைந்திருந்ததை நாம் அவதானிக்க முடியும்.

அரசுப் படைகள் இராணுவப் பின்னடைவுகளைச் சந்தித்து, புலிகளை போரியல் ரீதியாகத் தோற்கடிக்க முடியாது என்பதை உணர்ந்தபோதே இந்த யுத்த நிறுத்தத்துக்கு அப்போது அரசு இணங்கி வந்தது என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இப்போது தெரிவித்திருக்கிறார்கள்.

அதேபோல வடக்கில் பல முக்கிய படை நிலைகளைப் புலிகள் கைப்பற்றி, கட்டுநாயக்கா விமான நிலையம் போன்ற பொருளாதார இலக்குகளைத் தாக்கி, பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்திய நிலையிலேயே இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாத்து, பேச்சு மூலமான ஒரு தீர்வைக் காணும் நோக்கோடு இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் அப்போதைய ஐ.தே.கட்சி அரசு ஒப்பமிட்டது என அக்கட்சி இப்போது கூறுகின்றது.

ஆக, பல இராணுவப் பின்னடைவுகளை இலங்கை அரசுப் படைகள் சந்தித்து, பெரும் இக்கட்டு நிலையில் அரசுத் தரப்பு இருந்தபோதே வேறு வழியின்றி அப்போதைய அரசு யுத்த நிறுத்தம் என்ற அமைதி வழித் தீர்வை நாடியது.

அத்தகைய நிலையுடன் அமைதி முயற்சிகள் குழம்பாமல் தொடர்ந்திருக்க வேண்டுமாயின் அன்றைய இராணுவ வலுச் சமநிலை தொடர்ந்தும் அதே மாதிரிப் பேணப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் அரசும், புலிகளும் சம தரப்பு அந்தஸ்தோடு செய்து கொண்ட யுத்த நிறுத்தம், அந்த சமதரப்பு அந்தஸ்தில் தொடரும் சமயத்தில் பல்வேறு மேற்கு நாடுகள் புலிகள் இயக்கம் மீது தடை விதித்து, அதன் தர நிலையைத் தாழ்த்தி, அதன் மூலம் அரசு புலிகள் இடையேயான சம அந்தஸ்து நிலைப்பாட்டைப் பங்கப்படுத்தித் தவறிழைத்தன.

அதேசமயம், யுத்த நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த கொழும்பு அரசு தனது இராணுவ போரியல் திறமைகளை வளர்த்து விருத்தி செய்யக் கூடியதாக நேரடியாகவும், பொருளாதார அபிவிருத்தி என்ற பெயரில் மறைமுகமாகவும், சில நாடுகள் அளவுக்கு அதிக மாகவும் உதவியமை, நிலைமையைக் குழப்பக் காரணமாகின.

இதனால் யுத்த நிறுத்த காலத்தின் ஆரம்பத்தில் அரசு புலிகள் இடையே சமனாக இருந்த இராணுவ வலு நிலைமை இப்போது தனக்கு சாதகமாக முற்றிலும் சாய்ந்துவிட்டது எனக் கொழும்பு அரசு நம்பிக்கையுடன் கருதும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது. அதனால்தான் அது போரியல் வெறி பிடித்து, யுத்த சந்நதம் கொண்டு, போர்முரசு அறைகின்றது.

ஆகவே, இவ்வாறு யுத்த நிறுத்தத்தை தூக்கிக் கடாசி, போரியல் போக்கில் முனைப்போடு கொழும்பு தீவிரம் கொண்டு அலைவதற்கு கொழும்பு அரசை வைவதில் அர்த்தமில்லை. அந்த வழியில் கொழும்பு செல்வதற்கான சூழலை விளைவுகளைச் சிந்திக்காமல் புலிகள் மீது கண்மூடித்தனமாகத் தடை விதித்தும், கொழும்பின் இராணுவச் செயல் போக்குத் திட்டத்துக்கு பின்னூட்டல் ஒத்தாசை வழங்கும் விதத்தில் பல்வேறு உதவிகளைச் செய்தும் விவகாரத்தைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிய நாடுகளைத்தான் முதலில் வையவேண்டும். அவையே இந்தப் போரியல் சமவலு நிலையைக் குழப்பி, யுத்த நிறுத்தத்தை அர்த்தமற்றதாக்கின என்பது கண்கூடு.

- உதயன்

Editorial: Eelamnation.net

An open declaration of genocide and war against the Tamils

President Rajapakse, like Adolf Hitler believing his own propaganda, believes his own lies. He believes the lie that there are numerous Tamil rebels killed on a daily basis. These killed are not rebels but innocent farmers, fishers, women and children going about their work. The Tigers said to be killed do not go about wearing stripes. He believes that the Tamil speaking people in the east have been liberated. He believes that the Tamils in the north are waiting for him, to be liberated. He believes that power will be devolved on the Tamil speaking people.

> It does not take even a third grade leadership with a second class brain to realise that assassinations are not the answer for vexed political questions.

The withdrawal from the peace accord of 2002, the consequent disbanding of the international monitoring mission, the killing of a Tamil member of parliament from a mainstream opposition party, Maheswaran and the threatened assassination of another in Mano Ganesan are a declaration of war against the Tamil people which from now on will define the history of Sri Lanka.

It is the credibility of both Mano Ganesan an internationally acknowledged champion of human rights and the late Maheswaran, in fearlessly exposing the injustices against the Tamil people and the numerous instances of human rights violations against the Tamil people, that the Sri Lankan government fears. It does not take even a third grade leadership with a second class brain to realise that assassinations are not the answer for vexed political questions.

> It will leave indelible scars never to be healed for decades.

Mano Ganesan now in hiding has stated: "Government's game plan is very clear. First, it publishes utter falsehood. It orchestrates direct threat to my life as my personal security is being endangered by 'LTTE arms supplier label' attributed to me. It could bring hatred from unsuspecting innocent people and could be used by communal elements against me. Next, it withdraws my security and puts me into a vulnerable situation". In the case of Maheswaran too, his security was withdrawn. The withdrawal of security is always an ominous sign.

As if there is only one of its kind in Sri Lanka we are asked to believe that the pistol used in the killing of Maheswaran was the same kind as that used by the LTTE. We are tired and sick of listening to stories that the killings of Lakshman Kadirgamar, the Tamil journalist Taraki, Ketheesh Loganathan (who protested the killings of the 17 aid workers) and the TNA Tamil parliamentarians were being investigated. In analysing the circumstances of the killings it is also necessary to look at the motives and the consequences. Who has stood to benefit the most? We can again give the guarantee that nothing will come out of these investigations. We will not hold our breath even for the outcome of the "investigation" into Maheswaran's killing. We are now concerned for the safety of the alleged assailant who is said to be in custody.

> In analysing the circumstances of the killings it is also necessary to look at the motives and the consequences.

The elimination of the Tamil parliamentarian, who was not a proxy of the LTTE in parliament, as in the case of the late Paramajasingham in December 2005 and later Ravi Raj, is clear indication that the war is not solely directed against the LTTE but wholly against the Tamil people. If Rajapakse thinks that the Tamils could be defeated in the war he is mistaken. Even with the remote possibility of this happening in the short run the warfare between the Sinhalese and the Tamil people will never end. It will leave indelible scars never to be healed for decades. Unfortunately it will turn into a war between the Sinhalese people and the Tamil speaking people. It is for this reason that the international consensus has always been for a political solution.

> It gives the LTTE the licence and the freedom go for an all out war against the southern establishment and it leaves no anchorage for any respite for any international mediation.

The abrogation of the peace process will have other far reaching consequences. Under the guise of fighting terrorism the Sri Lankan government will pursue its unrelenting programme of genocide and other human rights abuses on a much greater scale, on the other hand it gives the LTTE the licence and the freedom go for an all out war against the southern establishment and it leaves no anchorage for any respite for any international mediation. The country will descend into absolute chaos never to return. Rajapakse has squandered and drained off, even the last drugs of statesmanship, left in Sri Lankan leadership.

Where are those "moderates" who were telling us that the Rajapakse government was fighting only the LTTE militancy? Hello, hello.

வெங்குருதி தனில்
கமழ்ந்து வீரம்
செறிகின்ற தமிழ்
எங்கள் மூச்சு

ஒரு பேப்பர் ORU PAPER

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
லண்டன்
சேயோன் - அ.இரவி
மணி - அகிலன்
கனடா
தயா - பொன்.விவேகானந்தன்
பாரிஸ்
சிறி
ஜேர்மனி
சபேசன் - சாந்தி
சுவிஸ்
ரேமன் - சந்துரு
பொறுப்பாசிரியர்
- கோபி -
மக்கள் தொடர்பு
பாலா
விளம்பரம்
கௌரி - சிந்து
அச்சு
குமார் (ஜெர்மனி)
வடிவமைப்பு
jasmine studio
முகப்பு வடிவமைப்பு
seven zero graphics
விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - கிரி
தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்
நிதி – நிர்வாகம்
முருகானந்தன்
வழங்கல்
உதயகுமார்-ராஜன்-கரன்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 8640 4604
020 8286 9327
பாரீஸ் 01 7289 8165
சுவிஸ் 043 500 0277
தொலைநகல் (Fax)
020 8640 6972

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3LJ
Surrey

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month. The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

அஞ்சுகிறேன் அய்யனே!

அஞ்சுகிறேன். நடக்கிற காரியம் சிலது நல்ல தாகப் படவில்லை. வாழ்வை கெடுக்கிற காரியம் ஆகிவிடுமோ என அஞ்சுகிறேன். வாழ்வென நான் சொல்ல வருவது என் தனிப்பட்ட வாழ்வை அல்ல.

சொல்கிறேன். எங்கள் தேசிய விடுதலைப் போராட்ட வாழ்வு வியர்வையாலும், உதிரத் தாலும் எழுதப்பட்டது மாத்திரமல்ல. உயிரால் எழுதப்பட்டது. ஓர்மத்தால் வனையப்பட்டது..

மேலும் போராளிகள் எவரும் மக்களுக்குப் பணிந்தவர்கள். ஆனால் எதிரிக்குப் பணிந்த வர்கள் அல்லர், பயந்தவர்களும் அல்லர்.

ஒவ்வொரு போராளியையும் மனதால் வணங்கு கின்றேன். மாவீரர்கள் யாவரையும் கைகூப்பி வணங்குகின்றேன். ஏன்?

என்றால் சொல்கிறேன், அவர்கள் மகத் தானவர்கள், உன்னதமானவர்கள். ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உயரிய தியாகம் கொண்டவர்கள். ஓர்மமானவர்கள், வீரமிக்கவர்கள். உறுதியில் இறுகினவர்கள். மேலாக மக்களை நேசிப் பவர்கள். மனிதாபிமானிகள். அவர்களிடம் இருக்கக்கூடிய ஒரேயொரு பெரும் சொத்து உயிர். அதனையும் மக்களுக்காக, விடுதலைக் காக இழக்கச் சித்தமாக இருப்பவர்கள், இருந்தவர்கள்.

நினைத்துப் பார்க்கிறேன், என்னால் இயலுமா இது? என் தோள் மூட்டில் சிறு சிராய்வாவது வந்ததா? இரத்தம் கண்டேனா நான்? முரசு கரைந்த போதும், முள் கீறிய போதும் கண்ட இரத்தத்தைத் தவிர எப்போதாவது என் இரத்தத்தை நான் கண்டேனா?

ஹெலி படபடவென சுற்றி வரும்போது, மரத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு ஹெலியின் சூடு உடம்பில் படாதவாறு சுற்றிச் சுற்றி வந்தேன். அதன் பிறகு ஒரே ஓட்டம். புறமுதுகு காட்டி ஓடினேனோ, பிடரியில் குதி அடிபட ஓடினேனோ ஏதோ ஒரு ஓட்டம். இங்கு வந்து இறங்கினேன். அப்படி இறங்கியும் ஆண்டுகள் பலவாயிற்று.

போராளி என்ற சொல்லை உச்சரிக்கவே எனக்குத் தகுதி இல்லை. அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஆயிரமாயிரம் கதைகள் உள்ளன, இருந்தன. அத்தனை கதைகளும் ஆகாவென்று வாயடைக்க வைக்கும் கதைகள். ஒரு போராளியின் ஒரு கதையே காவியமாய் விரியும். அத்தனை வீறார்ந்த, உன்னதம் தோய்ந்த, மகத்துவம் பெற்ற கதைகள்.

சுற்று மாறுதலுக்காக

எழுதுவது: சேயோன்

உன்னத தலைவர் எம்மிடம் உள்ளார். இப்படி ஓர் தலைவரை இதுவரை எந்த விடுதலை இயக்கமும் கண்டதில்லை என்னும்படிக்கான தலைவர் அவர். தோள் கொடுக்க நெஞ்சு நிமிர்த்திய தளபதிகள் துணை நிற்கின்றனர். இப்படி ஓர் இயக்கத்தில் இணைகின்ற போராளிகளுக்கு இயல்பாகவே வீரம் வரும், ஓர்மம் வரும். வீழார், வெல்வர்.

இவ்வளவும் இருக்கையில் என்ன கவலை? சொல்கிறேன், நமது தேசிய விடுதலைப் போராட்டம் தனிநபர்கள் சிலரின் சொந்தமல்ல. ஒரு சிலரின் சொத்துமல்ல. அது தமிழ் மக்களின் சொத்து. ஈழத்துத் தமிழ் மக்கள் யாவரினதும் சொத்து. தமிழ் தேசியத்தை ஒரு சிலர் 'குத்தகை' எடுக்கவுமில்லை.'குத்தகை' மனோபாவத்துடன் யாரும் நடக்கவும் முடியாது.

சரியாகச் சொன்னால் ஈழத்தமிழர் எல்லோரி னதும் குத்தகைக்காணி அல்ல, சொந்தமான காணிதான் தமிழீழம்.

இப்போருக்காக, தேச மீட்புக்காக, ஈழத் தமிழர் அனைவரும் பங்கு செய்ய வேண்டும்.பலர் செய்கிறார்கள். அவரவர் தகுதிக்கேற்ப, வளத்திற் கேற்ப, திறமைக்கேற்ப, கொள்ளளவுக்கேற்ப (Capacity) இயலுமானதை செய்கிறார்கள், செய் தார்கள், இன்னும் செய்யக் காத்திருக்கிறார்கள்.

காத்திருப்போரை நாம் அணைக்க வேண்டும். கண்டும் காணாமலும் போவோரை நாம் அழைக்க வேண்டும். எம் வட்டத்தைப் பெரிதாக்க வேண்டும். எம் கைகளை அகல விரிக்க வேண்டும். அனை வரையும் அரவணைக்க வேண்டும். இது எனது போராட்டம் மாத்திரமல்ல, உனதும் போராட்டம் என்று உரக்கச் சொல்ல வேண்டும்.

அஞ்சுகிறேன் அய்யனே, நாங்கள் எங்கள் கடமையிலிருந்து நழுவுகிறோமோ என அஞ்சுகிறேன். எமது தேசிய விடுதலைப் போரை நிகழ்த்தும் இயக்கம் பரிசுத்தமானது. எங்கள் தலைவரோ அதி உத்தமர். இயக்கத்தையும் தலைமையையும் இட்டு நாம் பெருமைப்பட எவ்வளவோ உண்டு. ஆயிரமாயிரம் ஆண்டுத் தவத்தின் பலன்தானோ நமது தலைவரும் நமது இயக்கமும் என்று பெருமிதம் கொள்கிறேன்.

எம் பெருமை ஏதுக்கும் சிறுமை நேரக்கூடாது. அதிகாரம் என்பது ஆட்களை அடக்க அல்ல. அட்டகாசமோ, அடாத்தோ செய்வதற்கு அல்ல, ஒரு காரியம் சரியாக நேராக, ஒழுங்காக செய்வதற்குத்தான் அதிகாரம். அது பிரம்பு அல்ல, பிழைபடாது இருப்பதற்கான வரம்பு.

தேசிய விடுதலையில் அக்கறை கொண்டோர் ஆரும் எதுவித்தத்திலும் நோகக் கூடாது, விட்டு விலத்திப் போகக்கூடாது. எல்லோரையும் அணைக்க வேண்டும். வர விரும்பாதோரையும் வருந்தி அழைக்க வேண்டும்.

எமக்கொரு தேசம் விரைவாக வேண்டும். விடுதலை அதி விரைவில் கிட்ட வேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டும். ஆரும் அஞ்சக்கூடாது, அதிகாரப் பிரம்பு கண்டு ஆரும் விலத்தி ஓடக்கூடாது.

இதுவே என் வேண்டுகோள், பெரு விருப்பும் அதுவே. விரைவில் கிட்டும் விடுதலை.

ஆன்மீகம் அறிவோம் அன்பாய் வாழ்வோம்

பரஞ்சோதி
(நம்பிக்கை ஒளியிலிருந்து)

ஆன்மீகம் என்பது உடல் அழுக்கையும் மன அழுக்கையும் போக்கும் ஓர் அற்புதமான இலவச மருத்துவமனை என்றால் அது மிகையாகாது.

ஆன்மீகத்தைப் பரப்பவே மதங்கள் தோன்றின. அன்பையே போதிக்கும் அனைத்து மதங்களிலும் பொதிந்து கிடக்கும் ஆன்மீக மருத்துவ முறைகள் ஏராளம்! ஏராளம்!. ஆனால், இன்றைய சமுதாயம் ஆன்மீகம் என்ற பாதையில் இருந்து நாகரீகம் என்ற பெயரில் நரகமான வாழ்க்கைக்கு மாறிக் கொண்டு இருக்கிறது.

நம்மை நாமே நாகரீகம் என்ற பெயரில் ஏமாற்றிக் கொண்டு இருக்கிறோம். நாகரீகத்தால் நமக்கு கிடைத்த நன்மையைக் காட்டிலும் பல மடங்கு தீமைகள் தான் கிடைத்துள்ளது. நாம் எப்படியெல்லாம் மாறிக்கொண்டு இருக்கிறோம் என்று சிந்தித்தால் ஏமாறிக்கொண்டு இருக்கிறோம் என்பது நன்கு புரியவரும்

'வரும் முன் காத்தலே நலம்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே'

என்கிறார் திருமூலர்.

இன்று தோன்றும் நோய்களைக் குணப்படுத்த மருந்து கொடுக்கின்றனர். அன்றைய பெரியோர் களோ நோய்களை தவிர்க்கவே ஆன்மீகம் வாயி லாக தியானம், யோகாசனம் போன்றவற்றை அளித்தனர். சற்று ஆழ்ந்து சிந்தித்தால் இவை விளங்கும்.

இஸ்லாமிய அன்பர்களின் இறைவழிபாட்டில் முக்கிய அம்சம் தினமும் ஐந்து முறை தொழுதல், ரமழானில் ஒரு மாதம் நோன்பிருத்தல். மேற்கூறப்பட்ட இரண்டு விசயங்களைக் கடைப் பிடித்தாலே போதும், மனதையும் உடலையும் ஆரோக்கியமாய் வைத்துக் கொள்ள முடியும்.

தொழுகை செய்கையில் பல்வேறு நிலைகளில் உடலை மாற்றுவர் அதன்மூலம் உடலின் தசைகள் மற்றும் நரம்புகள் நன்றாகச் செயல் படுகின்றது. அசைவ உணவையே பிரதான மாய் அவர்கள் உண்டாலும் நன்கு ஜீரணமாகி விடுகிறது. மேலும் உண்ணா நோன்பு மூலம் தங்கள் உடலில் உள்ள தேவைக்கதிகமான கொழுப்பினை கரைத்தும் விடுகின்றனர். இஸ்லாத்தில் இருந்து சில துளியைத்தான் இங்கு குறிப்பிட்டேன்.

கிறிஸ்தவ சமயத்தில் கூட்டுப்பிரார்த்தனைக்கு முக்கியத்துவமான இடமிருக்கிறது.மனதினை ஒருமுகப் படுத்துவதற்கும் செம்மைப் படுத்துவ தற்கும், திடப் படுத்துவதற்கும் இது உதவுவதுடன் ஆரோக்கியமான வாழ்விற்கும் இன்றியமை யாததாக இது விளக்குகிறது.

நம்மை நாமே நாகரீகம் என்ற பெயரில் ஏமாற்றிக் கொண்டு இருக்கிறோம். நாகரீகத்தால் நமக்கு கிடைத்த நன்மையைக் காட்டிலும் பல மடங்கு தீமைகள் தான் கிடைத்துள்ளது.

கூட்டுப்பிரார்த்தனை மற்றும் பஜனை எனப்படும் இறைவன் புகழை ஆடிப்பாடி மகிழ்தல் மூலம் அளப்பரிய மனவலிமை கிடைக்கிறது. இதை இன்றைய உளவியலரும் ஒத்துக் கொள்கிறார்கள். அசனம் என்னும் சமபந்தி விருந்து சமுதாய பாகுபாடுகளை அகற்றி ஒற்றுமை உணர்வை உணர்த்துகிறது.

மிகத் தொன்மையான இந்துமதக் கொள் கைகளை எடுத்துக் கொண்டால் அதில் ஆயிரம் ஆயிரம் மருத்துவமுறைகள் காணப்படுகின்றன. ஆயுர் வேதம், ஆயுள் வேதம் என்று கொண்டா டப்படுகிறது. ஒவ்வொரு கடவுளும் ஒவ்வொரு மருத்துவராய் செயல்படுகின்றனர்.

உதாரணமாக ஞானக்கடவுள் விநாயகரை கருத்தில் கொண்டால் அவர் பெரும் பாலும் நீர் நிலைகளில் அரச மரமும், வேம்பு மரமும் இணைந்த இடங்களில் வீற்று இருப்பார். இவ்விர ண்டு மரங்களின் சேர்க்கை சுற்றுப்புறத்தில் உள்ள நச்சுக் கிருமிகளை நீக்கும் தன்மை வாய்ந்தது.

தோப்புக்கரணம் போடும் போது நமது உடலின் ஆதாரமாக விளங்கும் மூலாதாரச் சக்கரம் உற்பத்தி செய்யும் மின்காந்த அலைகள் சுவாதிஷ்டானம், அனாஷகதம், மணிபுராகம், விசுத்தி, ஆக்ஞா சகஸ்ராரம் என்ற சக்கரங்களின் மூலமாக சிரசை அடைகிறது. பின்னர் தலையைக் குட்டிக் கொள்வதன் மூலம் உடல் முழுதும் பரவுகிறது.

மூளை செல்கள் புதுப்பிக்கப் படுகின்றது. ஞானம், புத்திசாலித்தனம் பெருகுகிறது (சிலர் ஏதேனும் யோசனை செய்கையில் தலையை சொறிவதை காண்போம். அதன் பின் விளக்கம் இதுதான்)

குழந்தைப்பேறு அற்றவர்கள் பழனி சென்று முருகனை தரிசித்தால் பாக்கியம் அடைவர்கள் என்றார்கள். காரணம் மலையேறும் போது கர்ப்பப்பை தசைகள் சுருங்கி விரிந்து வலு வடைகிறது. சுத்தமான காற்றால் உடலும் மனமும் புத்துணர்ச்சி அடைகிறது. கர்ப்பப்பை அழுக்குகள் வியர்வையினால் வெளியேறி விடுகின்றன. குழந்தைப் பேறும் வாய்க்கிறது.

பழங்கால கோயில்கள் வாஸ்துவை அடிப்படை யாகக் கொண்டு கட்டப்பட்டவை. மேலும் மந்திரங்கள், அபிஷேகங்கள், கற்பூர ஆராதனை கள் இவற்றினால் கோயில் கொடி மரங்களின் அமைப்பினால் ஒரு நேர்மறையான சக்தி கோயிலில் நிரம்பிக் காணப்படும். ஆகையால் தான் நாம் ஆலயம் சென்றால் நம் ஆ(ன்மா) லயமாகிறது.

அனைத்து மதங்களும் போதிக்கும் சில முக்கிய விடயங்களான அதிகாலை எழல், குளிர்நீரில் குளித்தல், தினசரி வழிபாடு மற்றும் தியானம், பஜனை பாடுதல், உபவாசம்(விரதம்), மந்திர உச்சாடனை செய்தல், பாத யாத்திரை என்பவை உடல் நலத்தை வலுப்படுத்துவதற்கு இன்றியமையாதன.

ஆகவே மதங்கள் எனப்படுவது மனிதனை நல்வழிப்படுத்தவே உருவானது. அனைத்து மதங்களும் அன்பையேபோதிக்கிறது. எம்மதமும் நல் மதமே! அனைத்தும் சம்மதமே!

ஆன்மீகம் நம் உடலையும் உள்ளத்தையும் கட்டிக்காக்கவே பயன்படுகிறது.

ஆன்மீகம் அறிவோம்!
அன்பாய் வாழ்வோம்!

சிங்களம் சந்திக்கப் போகும் விளைவுகள்

அரசியல் அலசல்

அலசுபவர்: வி.சபேசன்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னமேயே கொலை செய்யப்பட்டு பிணமாகிப் போய்விட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் தற்பொழுது அடக்கமும் செய்யப்பட்டு விட்டது. கொலை செய்ததும் சிங்கள அரசுதான். அடக்கம் செய்ததும் சிங்கள அரசுதான்.

விடுதலைப் புலிகள்தான் முதலில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறினார்கள் என்றும், அதிகள விலான யுத்தநிறுத்த மீறல்களை விடுதலைப் புலிகள் மேற்கொண்டார்கள் என்றும் சிறிலங்கா அரசும், அதனுடைய ஒட்டுக் குழுக்களும் பிரச் சாரத்தை மேற்கொண்டு வருகின்றார்கள். ஆனால் இது எந்த வகையிலும் உண்மை இல்லை.

பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்த காலத்தி லேயே சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து விடு தலைப்புலிகளின் வணிகக் கப்பல்களை சிறிலங்கா அரசு மூழ்கடித்தது. அத்துடன் விடுதலைப் புலி களை பிளவுபடுத்தும் முயற்சிகளை மேற் கொண்டது. தாம்தான் கருணாவை விடுதலைப் புலிகளிடம் இருந்து பிரித்ததாக ரணில் விக்கிரமசிங்க ஒப்புதல் வாக்குமூலமே கொடுத்து விட்டார்.

அத்துடன் கருணா குழு என்ற பெயரில் பல தாக்குதல்களை விடுதலைப் புலிகள் மீது சிறி லங்கா இராணுவம் நடத்தியது. இதன் பிறகு மாவிலாறு பிரச்சனையின் போது பேச்சுவார்த்தை மூலம் ஒரு சுமூக தீர்வு காணப்படும் நிலைமை இருந்தும், சிறிலங்கா அரசு வான்தாக்குதல்களை நடத்தியது. பின்பு நில ஆக்கிரமிப்புக்களை செய்தது. எல்லா வகையிலும் சிறிலங்கா அரசுதான் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறியது.

கருணாவை விடுதலைப் புலிகளிடம் இருந்து பிரித்ததாக ரணில் விக்கிரமசிங்க ஒப்புதல் வாக்குமூலமே கொடுத்து விட்டார்.

அதே வேளை அதிகளவிலான யுத்தநிறுத்த மீறல் களை விடுதலைப் புலிகளே மேற்கொண்டார்கள் என்று சிறிலங்கா அரசு சொல்கிறது. அத்துடன் கண் காணிப்புக் குழுவின் அறிக்கைகளிலும் விடு தலைப் புலிகளே அதிக யுத்தநிறுத்த மீறல்களை மேற்கொண்டதாக கணக்குகள் இருக்கும்.

அதே வேளை அதிகளவிலான யுத்தநிறுத்த மீறல் களை விடுதலைப் புலிகளே மேற்கொண்டார்கள் என்று சிறிலங்கா அரசு சொல்கிறது. அத்துடன் கண் காணிப்புக் குழுவின் அறிக்கைகளிலும் விடு தலைப் புலிகளே அதிக யுத்தநிறுத்த மீறல்களை மேற்கொண்டதாக கணக்குகள் இருக்கும்.

இப்படி விடுதலைப்புலிகள் மீது அதிகமான யுத்த நிறுத்த மீறல் கணக்கு வந்த விதம் வேடிக் கையானதும், மோசடியானதும் ஆகும்.

விடுதலைப்புலிகள் அரசியல் நடவடிக்கை களுக்காக சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் பணியகங்களை திறந்து, தமிழீழ தேசியக் கொடியினை ஏற்றிய போது, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிக் கொடி ஏற்றுவது போர்நிறுத்த மீறல் என்று கண்காணிப்புக் குழு கணக்கு வைத்தது. விடுதலைப் புலிகள் ஒவ்வொரு முறை கொடி ஏற்றிய போதும், விடுதலைப் புலிகளின் 'யுத்த நிறுத்த மீறல்களின்' எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போனது.

மறுபுறம் ஒட்டுக்குழுக்களின் பெயரில் சிறிலங்கா இராணுவம் நடத்திய தாக்குதல்கள் எதுவும், சிறி லங்கா இராணுவத்தின் யுத்த நிறுத்த மீறல்களாக கணக்கிடப்படவில்லை. கருணா குழுவின் பெயரில் சிறிலங்காப் படையினர் தாக்குதல் நடத்திய போதும் சரி, உத்தியோகபூர்வமாக துணைப் படை யினருக்கான ஊதியத்தை பெறுகின்ற மற்றைய ஒட்டுக் குழுக்கள் தாக்குதல் நடத்திய போதும் சரி, இவைகள் எதுவும் சிறிலங்கா இராணுவத்தின் யுத்தி நிறுத்த மீறல் கணக்கில் வரவில்லை.

இப்படியான பாரபட்சத்தோடுதான் கண்காணிப் புக் குழுவும் மேற்குலக நாடுகளும் நடந்து கொண்டன. இந்த நாடுகள் சிறிலங்கா அரசுக்கு சார்பாக நடந்து கொண்டும், இந்த நாடுகளின் அனு சரணையோடு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை சிறிலங்கா அரசு ரத்துச் செய்து விட்டது.

வன்னி மீது மிகப் பெரும் தாக்குதலை நடத்துவ தற்காகவே சிறிலங்கா அரசு யுத்த நிறுத்தத்தில் இருந்து விலகியிருப்பதாக சொல்லப்படுகின்றது. வன்னி மீது பல முனைகளில் சிறிலங்கா அரசு ஒரு பெரும் தாக்குதலை நடத்துவதற்கான ஏற்பாடு களை செய்து வருவது உண்மைதான். ஆனால் யுத்த நிறுத்தத்தில் இருந்து விலகாமலே வன்னி மீதான பெரும் தாக்குதலை சிறிலங்கா அரசால் நடத்தியிருக்க முடியும்.

கிழக்கை சிறிலங்காப் படைகள் ஆக்கிரமித்த போது மேற்குலக நாடுகள் வாயை மூடிக் கொண்டு தான் இருந்தன. அத்துடன் அந்தத் தாக்குதல் களுக்கு மறைமுக ஆசீர்வாதங்களையும் வழங்கியிருந்தன.

விடுதலைப்புலிகள் பலவீனம் அடைந்தால் தான் தம்முடைய அழுத்தங்களுக்கு கட்டுப்படுவார்கள் என்ற நம்பிக்கையில் இதனைச் செய்தன.

பத்து மாதங்களுக்கு மேலாக சிறிலங்காப் படை யினர் மன்னார் பகுதியில் பல படை நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின்றார்கள். மடுவைக் கைப்பற்றி, அதன் பிறகு பூநகரி நோக்கி நகரும் திட்டத்தோடு இந்த நடவடிக்கைகள் தொடர்ச் சியாக மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளையும் மேற்குலக நாடுகள் கண்டிக்க முன்வரவில்லை.

தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்க ளிற்குப் பிறகு பேச்சுவார்த்தைக்கு தலைமை வகித்த பிரிகேடியர் தமிழ்செல்வன் சிறிலங்கா அரசு வான்தாக்குதல் மூலம் கொலை செய்த போதும் கூட இந்த மேற்குலக நாடுகள் மௌன மாகத்தான் இருந்தன.

ஆகவே வன்னி மீது சிறிலங்கா அரசு பல முனைகளில் ஒரு மிகப் பெரிய தாக்குதலை ஆரம்பிக்கின்ற போது, இந்த மேற்குலக நாடுகள் எதுவுமே சொல்லப் போவதில்லை. அந்த வகையில் வன்னி மீதான தாக்குதலுக்காகவே சிறிலங்கா அரசு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருந்து விலகியது என்ற கருத்து முற்று முழுதாக சரியான ஒன்றல்ல.

கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகளை விரட்டி விட்டதாக தம்பட்டம் அடித்த சிறிலங்கா அரசு, கிழக்கின் அம்பாறைக்கு எல்லையாகவுள்ள மாவட்டங்களில் சண்டை செய்ய வேண்டிய நிலைமையில் உள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தமானது விடுதலைப் புலிக ளுக்கு சர்வதேசரீதியாக சில அங்கீகாரங்களைத் தேடிக் கொடுத்தது. விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தை அங்கீகரித்திருந்தது. பயங்கரவாத இயக்கம் என்று விடுதலைப் புலிகளை பட்டியல் இட்டிருந்தாலும், மேற்குலக நாடுகளோடு ராஜ தந்திர உறவுகளை வெளிப்படையாக பேணுவ தற்கும் வழி செய்தது.

விடுதலைப் புலிகளின் நிர்வாகம் 'உள்ளக இறைமையை' கொண்டிருக்கிறது என்பதை புரிந்துணர்வு ஒப்பந்தம் அங்கீகரித்துள்ளது என்ற விடயத்தையும் நாம் முன்பொரு கட்டுரையில் பார்த்திருந்தோம்.

தமிழர் தரப்பு பெறக்கூடிய இவ்வாறான அங்கீ காரங்களை இல்லாமல் செய்யும் பொருட்டும், ஜேவிபி போன்ற கட்சிகளை திருப்தி செய்யும் பொருட்டும், யுத்தமயப்படுத்தப்பட்டுள்ள சிறிலங் காவின் அரசியலுக்கு தொடர்ந்து தீனி போட வேண்டிய அவசியத்திலும், சிறிலங்கா அரசு புரிந் துணர்வு ஒப்பந்தத்தில் இருந்து விலகியுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் முடிவுக்கு வந்த அன் றைய தினம் (16.01.07) சிறிலங்காவின் பிரதேசத் திற்குள் வருகின்ற மொனராகலை மாவட்டத்தில் இரண்டு கிளைமோர் குண்டுகள் வெடித்தன. நான்கு சிங்கள விவசாயிகள் சுட்டுக் கொல்லப் பட்டார்கள். மொனராகலை மாவட்டத்தில் உள்ள காட்டுப் பகுதியில் வைத்து சிறிலங்காவின் அதி ரடிப் படையினர் தாக்குதலுக்கு உள்ளானார்கள்.

மொனராகலையில் வெடித்த ஒரு கிளைமோரில் பயணிகள் பேருந்து ஒன்று சிக்கிக் கொண்டது. அதில் 26 சிங்களப் பொதுமக்கள் கொல்லப் பட்டார்கள். 60இற்கும் மேற்பட்டோர் காயமடைந் தார்கள். இந்தத் தாக்குதலை சிறிலங்கா அரசு தன்னுடைய பரப்புரைக்கு பயன்படுத்தியது. விடு தலைப்புலிகள் அப்பாவி மக்களை கொலை செய்வ தாக கூக்குரல் இட்டபடி தன்னுடைய பரப்புரையை முன்னெடுத்தது. காயமடைந்த சிங்கள மக்களுக்கு ரத்தம் தேவைப்படுவதாக அவசர அறிவுப்புகளை மேற்கொண்டு நிலைமையை பூதாகரமாக காட்ட முனைந்தது.

கிழக்கை சிறிலங்காப் படைகள் ஆக்கிரமித்த போது மேற்குலக நாடுகள் வாயை மூடிக் கொண்டு தான் இருந்தன. அத்துடன் அந்தத் தாக்குதல்களுக்கு மறைமுக ஆசீர்வாதங்களையும் வழங்கியிருந்தன.

ஆனால் இப்பொழுது சிங்கள மக்கள் கூட சிறி லங்கா அரசின் பரப்புரைகளை நம்புவது இல்லை என்பதுதான் உண்மை. விடுதலைப் புலிகள் அப்பாவி மக்களை இலக்கு வைக்க மாட்டார்கள், இது சிறிலங்கா அரசின் திட்டமிட்ட சதி என்று சிங்கள மக்கள் பேசிக் கொள்கிறார்கள். அவ்வாறு விடு தலைப்புலிகள் இத் தாக்குதலை நடத்தியிருந்தால் கூட, இலக்குத் தவறியே பொதுமக்கள் பலியாகி யிருப்பர்கள் என்ற கருத்தே அவர்களிடம் நிலவு கின்றது. பொதுமக்களின் பேருந்துகளை தமது தேவைகளுக்கு பயன்படுத்தும் சிறிலங்காப் படை யினரே இந்தத் தாக்குதலுக்கு காரணமானவர்கள் என்றும் அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

பேருந்து மீதான தாக்குதலையடுத்து சிறிலங் காப் படையினரின் கவச வாகனம் ஒன்றும் கிளை மோர் தாக்குதலுக்கு இலக்கானது. இதில் நான்கு படையினர் காயமடைந்தனர். அடுத்த நாள் அதி காலை காட்டுப் பகுதியில் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்ட சிறிலங்காவின் அதிரப்படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒருவர் காயமடைந்தார்.

கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகளை விரட்டி விட்டதாக தம்பட்டம் அடித்த சிறிலங்கா அரசு, கிழக்கின் அம்பாறைக்கு எல்லையாகவுள்ள மாவட் டங்களில் சண்டை செய்ய வேண்டிய நிலைமையில் உள்ளது. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஏற் கனவே பல தாக்குதல்கள் இடம்பெற்றன. தற் பொழுது பக்கத்தில் இருக்கின்ற மொனராகலை நோக்கியும் மோதல்கள் நகர்ந்துள்ளன.

இதையடுத்து மொனராகலையில் உள்ள சிங்கள வர்களை ஆயுதபாணிகள் ஆக்குவதற்கு மகிந்த வின் அரசு முடிவு செய்துள்ளது. அங்குள்ள கிராம வாசிகளுக்கு 500 துப்பாக்கிகளை வழங்கும்படி மகிந்த உத்தரவிட்டுள்ளார். ஆனால் விரைவில் சிறிலங்காவில் உள்ள அனைத்து சிங்கள மாவட்டங் களிலும் இதே போன்ற ஒரு நடவடிக்கையை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு மகிந்த தள்ளப் படுவார் என்று எதிர்பார்க்கலாம்.

வன்னி மீதான பெருந்தாக்குதலுக்காக கிழக்கில் இருந்து சிறிலங்காப் படைகளை நகர்த்த வேண்டிய தேவை சிறிலங்கா அரசுக்கு எழுந்துள்ளது. ஒரு வருடம் யுத்தம் செய்து பல இழப்புக்களுக்கு மத்தி யில் கைப்பற்றிய பகுதிகளை கைவிட்டு செல்ல வேண்டிய நிலையில் சிறிலங்காப் படைகள் தற்பொழுது நிற்கின்றன. வன்னி மீது தாக்குதலை ஆரம்பிக்கின்ற போது, கிழக்கின் பல பகுதிகளை மீண்டும் விடுதலைப்புலிகளிடம் இழப்பதோடு, சிங் கள மாவட்டங்களிலும் தாக்குதல்களை சந்திக்க வேண்டிய நிலையில் மகிந்த அரசு நிற்கின்றது.

தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கத் துடிக்கின்ற மகிந்தவின் அரசு தன்னுடைய பகுதிகளையே காப்பாற்ற முடியாது தடுமாறும் நிலைக்கு தள்ளப்படப் போகிறது. ஆயுத மயப்படுத்தப்பட்ட சிங்கள இனத்தின் மத்தியில் தோன்றப் போகும் குழப்பங்கள் தமிழர்களின் விடுதலைக்கான போராட்டத்தை மேலும் முன்னோக்கி நகர்த்தப் போகின்றது.

இந்த நிலையில் புலம்பெயர்ந்த மக்கள் தமது வேறுபாடுகளை களைந்து விட்டு, விடுதலைக்காக ஒன்று பட்டு உழைத்தால், எமது விடுதலை மேலும் விரைவுபடும்.

எழுச்சிதான் எமக்கு வேண்டும் ஏக்கங்கள் தேவையில்லை

ஒரு பேப்பர் ORU PAPER

சாட்சிகளை வெளியேற்றுவதே சிங்களத்தின் நோக்கம்

'போரைத் தீவிரப்படுத்துவதற்கு முன்னதாக கண்காணிப்புக் குழுவைச் செயலிழக்கச் செய்து அதன்மூலம் வடக்கு- கிழக்கில் தமிழர்களுக்கு நிகழப்போகும் பேரழிவுகளுக்குச் சாட்சிகள் இருக்கக்கூடாது என்பதில் அரசாங்கம் கவனமாகவுள்ளது

அதன் காரணமாகவே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்கிறது என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ் நெற் இணையத் தளத்திற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

அந்தப் பேட்டியின் ஒரு பகுதி...

16 ஆம் திகதி முதல் போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்திருக்கும் இலங்கை அரசின் நோக்கம் என்னவாக இருக்கும்?

பதில்: ஒப்பந்தம் காகித அளவில் மட்டுப் படுத்தப்பட்டுள்ள போதிலும் கண்காணிப்புக் குழுவானது மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் காத்திரமான அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றது என்பதை மறுக்க முடியாது.

கிழக்கில் அரங்கேறிய அரசின் செயற்பாடுகளை அது வெளிக்கொணர்ந்ததை மறுக்க முடியாது. நாட்டின் இறைமையைப் பாதுகாப்பது என்ற போர்வையில் போரை தீவிரப்படுத்துவதற்கு முன்பதாக கண்காணிப்புக் குழுவை செயலிழக்கச் செய்து அதன்மூலம் வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கு நிகழப்போகும் பேரழிவுகளுக்கு சாட்சிக்காரர்கள் எவரும் இருக்கக் கூடாது என்பதில் அரசு கண்ணாயிருக்கிறது.

கேட்பாரின்றி எதையும் செய்யவும் வட, கிழக்குப் பற்றிய அறிக்கைகளை தான் மட்டுமே வெளியிடவுங்கூடிய சூழலையே அரசு ஏற்படுத்த விரும்புகின்றது.

போர் நிறுத்த ஒப்பந்தமும் கண்காணிப்புக் குழுவும் மேற்குலகின் படைப்பு என்ற மாயை கொண்ட சிங்கள தேசியவாதிகளை மகிழ்விக்கவும் அதன்மூலம் ராஜபக்ஷ அரசின் வாக்குப்பலத்தை காப்பாற்றவும் அரசு நாட்டம் கொண்டுள்ளது.

சாட்சிகளை அகற்றுவதும் வட, கிழக்குச் செய்திகளை தான் மட்டுமே வெளியிடுவதும் அரசின் நோக்கமாயின் அங்குள்ள ஒரேயொரு செய்தி மார்க்கம் கண் காணிப்புக் குழு மாத்திரமல்லவே?

நீங்கள் சொல்வது ஓரளவு சரியென்றாலும் வலுவும் தகமையும் கொண்ட ஒரேயொரு அமைப்பு கண்காணிப்புக் குழு மாத்திரமே. அனைத்துலக அரச சார்பற்ற அமைப்புகள், ஊடகத்தாபனங்கள், குடிசார் சமூக ஆர்வலர்கள், சமயத் தலைவர்கள், அறிஞர்கள் மற்றும் அரசியல்வாதிகள் அங்கிருப்பினும் அவற்றின் செயற்பாடுகளை அரசு கடந்த இரண்டாண்டுகளாக நசுக்கி வருவது கண்கூடு.

ஆதலால் அவ்வமைப்புகள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் செயற்பட முடியாத நிலை தோன்றியுள்ளது. அவற்றுட்பல ஏலவே வடகிழக்கிலிருந்து வெளியேறிவிட்டன.

சாட்சிகளை அகற்றி செய்திகள் பற்றிய தனது பாணியை மட்டுமே வெளியிடுவதில் குறியாகவுள்ள அரசு இத்தீவில் கண்காணிப்புக் குழு இயங்குவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டாது.

போரை தீவிரமாக முன்னெடுத்து தமிழ் மக்களின் ஒவ்வொரு உரிமையையும் மீறி யுத்த தீர்வையே திணிக்க விரும்பும் அரசு அதன் மூலம் சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்று தனது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள விரும்புகிறது.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு சுதந்திரமான சாட்சிகளை அகற்றுவதும் தகவல் வழங்குவதில் தனியாட்சி செலுத்துவதும் அரசுக்கு இன்றியமையாததாகும்.

அரச நடவடிக்கைகளால் உதாரணமாக அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதான நடவடிக்கைகளால் வட, கிழக்கு மக்கள் முகங்கொடுக்க நேர்ந்துள்ள பாரதூரமான மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது?

குறித்த மனிதாபிமானமற்ற கொடுமைகள் வட, கிழக்கில் இடம்பெறுவது பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடிக்கடி அனைத்துலக சமூகத்திடம் குரல் கொடுத்து வருகின்றது.

எனினும், இக்கொடுமைகள் அரசின் யுத்தத் தீர்வுஎன்ற தந்திரோபாயத்தின் பெறுபேறுகளே. கிழக்கு யுத்த நடவடிக்கைகளின் பின்னர் மனிதாபிமான உதவி அமைப்புக்களை அங்கு செல்லவிடாது அரசு தடுத்தமை அனைத்துலக சமூகத்திடம் நாம் எழுப்பிய மேற்குறித்த குரலை உறுதிப்படுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் இன்றுவரை சொல்லொணாத்துயரம் அனுபவித்து வருகின்றனர். அரசு திட்டமிட்டுள்ள வடக்குத் தாக்குதல் இதுபோல் மட்டுமன்றி மிகவும் மோசமான மனிதாபிமானமற்ற கொடூரங்களை தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்தப் பின்னணியில் பார்க்கும்போது புலம் பெயர்ந்த தமிழர்களால் மேற்கொள்ளப்படும் மனிதாபிமான உதவிகளை நசுக்கும் விதத்தில் சில நாடுகள் செயற்படுவது மிகுந்த விசனத்துக்குரியது.

அனைத்துலக அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் அனைத்துலக சமூகத்தால் உதவ முடியாத நிலை தோன்றியிருக்கும் வேளையில் புலம்பெயர்ந்த தமிழர்களின் மனிதாபிமான உதவி அமைப்புகளையும் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதிலிருந்து தடை செய்வது எவ்வகையிலும் நியாயமாகாது.

குறித்த நாடுகளின் நோக்கங்கள் எவ்வாறு இருப்பினும் அவை இலங்கை அரசுக்கு ஊக்கமளிப்பவையாக அமையுமேயன்றி துயருறும் மக்களுக்கு எவ்வகையிலும் துணைபுரியா.

ஆதலால், பாதிக்கப்பட்டுள்ள ஈழத்தமிழ் மக்களுக்கு உதவுவதற்கு புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் மனிதாபிமான உதவி அமைப்புகளையாவது அனுமதிக்குமாறு நாங்கள் மேற்கூறிய நாடுகளை மேலும் மேலும் வினயமாக வேண்டுகின்றோம்.

இச்சூழலில் தமிழ் மக்களின் நிலைமை என்ன?

அடிப்படையில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் ஒன்றும் புதியனவல்ல. எனினும், ராஜபக்ஷ அரசு பதவியேற்ற பின்னர் இலங்கை அரசின் தமிழர் விரோத நடவடிக்கைகள் என்றுமில்லாதவாறு மோசமாக இடம்பெறுகின்றன.

இவையெல்லாம் அனைத்துலக சமூகத்தின் கண்முன்னே நிகழ்கின்றன. அச்சமூகம் வெறும் அறிக்கைகளை வெளியிடுவதோடு நின்று விடுகின்றதேயல்லாமல் அவை இலங்கை அரசை நெருக்குவதாக அமைவதில்லை. ஆதலால், தமிழ் மக்களுக்குள்ள ஒரேயொரு வழி தமதுரிமைக்காக தீவிரமாக போராடுவதே.

எனினும், இலங்கை அரசின் தற்போதைய ஒரு தலைப் பட்சமான யுத்த மூலமான தீர்வுத்திட்டத்தை கைவிடுமாறு இலங்கை அரசுக்கு நெருக்குதல் கொடுக்கும்படி அனைத்துலக சமூகத்தினை தொடர்ந்து வற்புறுத்துவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் ஈடுபடும்.

நன்றி : தமிழ் நெற்

ஈழத்துக் கவிஞர் இராஜேந்திரகுமாரின் வரிகளுக்கு ஜபார் பாலக்காடின் இசையில்
பிரபல பின்னணிப்பாடகர்கள் ஜெயச்சந்திரன், மாணிக்கவிநாயகம், ஸ்ரீராம் மற்றும் சிறந்த பின்னணிப் பாடகர்களுடன்
ஈழத்துச்சின்னக்குயில் உதயா இணைந்து வழங்கும் பன்னிரண்டு முத்தான பாடல்களுடன்
அகதியின் குரல் இசைத்தட்டு வெகு விரைவில் உங்கள் கையில்...

அகதியின் குரல்

VOICE OF REFUGEE

INNOCENT

பாவப்பட்டவர்

Rajendrakumar

சொந்த நாடின்றி துடிதுடிக்கும் ஈழமக்களின் வடுக்களின் வெளியீடே அகதியின் குரல்.
இது தமிழரின் குரல் எங்களின் குரல் உலகெங்கும் வெகு விரைவில்

பாவத்தின் கரங்கள் பாதியில் கைவிட கல் தோன்றா மண் தோன்றா காலத்தில்
உருவான மொழி அகதி என்ற அந்தஸ்த்தோடு உலகம் சுற்றி வருதே. எங்கள்
வரைபடம் உலகம் முழுவதும் தானா. உலகம் முழுவதும் வேண்டாம்.
எங்கள் நிலத்தில் வாழ விடு.

பல சிரமங்களுக்கு மத்தியில்
வெகு விரைவில் உங்கள்
கைகளில். உங்கள் ஆதரவு
தான் எங்களை மென் மேலும்
வளர்க்கும்

Produced by:
Akabina's Creation Ltd.
E_mail: susiraj@yahoo.co.uk
Tel: **07946343251**

பிரித்தானிய தமிழர் அமைப்பு வேண்டுகோள்

சிறிலங்கன் எயர்லைன்ஸை புறக்கணியுங்கள்

போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகி தமிழ் மக்களுக்கு எதிரான போரை தீவிரப்படுத்தியிருக்கும் சிறிலங்கா அரசுக்கு வருமானத்தை பெற்றுக் கொடுக்கும் சிறிலங்கா எயர் லைன்ஸ் விமானங்களில் பயணிப்பதை தவிர்க்க வேண்டுமென பிரித்தானிய தமிழர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக கடந்த செவ்வாய் (15 ஜனவரி) தைப்பொங்கல் தினத்தன்று மதியம் மத்திய லண்டனில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றினை நடாத்திய இவ்வமைப்பு தனது இந்த வேண்டுகோளை பிரித்தானிய மக்களிடம் தெரிவிக்குமாறு அங்கு திரண்டிருந்த ஊடகவியலாளர்களைக் கேட்டுக் கொண்டது.

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவர் திரு. ஐவன் பேதுருப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் மருத்துவர் இராஜயோகேஸ்வரன், கிங்ஸ்ரன் உள்ளூராட்சி சபை உறுப்பினர் திரு. யோகன் யோகநாதன் ஆகியோர் கலந்துகொண்டு, தமது அறிக்கையினை வெளியிட்டதுடன், ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தனர்.

பிரித்தானியாவின் பிரபலமான The Guardian பத்திரிகையின் நிருபர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த திரு. ஐவன் பேதுருப்பிள்ளை சிறிலங்கா எயர்லைன்ஸ் விமான சேவையை புறக்கணிக்கும்படியான தமது வேண்டுகோளை தனித்து தமிழ்மக்களிடம் மட்டுமல்லாமல் முழு பிரித்தானிய மக்களையும் நோக்கி விடுப்பதாகத் தெரிவித்தார்.

உல்லாசப்பயணிகளும் சிறிலங்காவைத் தவிர்த்து வேறு இடங்களில் விடுமுறையைக் கழிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

பிரித்தானியாவிலுள்ள தமிழ் பிரயாண முகவர் நிறுவனங்களில் ஒன்றான SkyWings மேற்படி கோரிக்கையை சாதகமாகப் பரிசீலிப்பதாக உறுதியளித்திருப்பதாகத் தெரிவித்த மேற்படி அமைப்பினர் மற்றைய முகவர் நிறுவனங்களும் தமது கோரிக்கையினை செவிமடுக்கும் என நம்பிக்கை தெரிவித்தனர். இது போன்ற முன்னெடுப்புகளை கனேடிய தமிழ் கொங்கிரசும் மேற்கொள்ள விருப்பதாக அறியக் கிடைக்கிறது.

பிரித்தானியாவிலுள்ள பல தமிழ் அமைப்புக்களின் கூட்டமைப்பாக விளங்கும் பிரித்தானிய தமிழர் பேரவையின் ஊடகக்குறிப்பின் சுருக்கத்தினை இங்கு தருகிறோம்:

சிறிலங்கா விமானசேவையின் கொழும்புக்கும் மற்றைய இடங்களுக்குமான பறப்புக்களில் பயணம் செய்வதைப் புறக்கணிக்குமாறு பிரித்தானிய தமிழர் பேரவை தமிழர்களிடையே பரப்புரையினை மேற்கொண்டுள்ளது

பிரித்தானியாவில் 300,000 இலங்கைத் தமிழர்கள் வாழ்கின்றார்கள். இவர்களில் 30,000 பேர் அளவில் ஒவ்வொரு ஆண்டும் இலங்கைக்குத் தங்களின் உறவினர்களைச் சந்திக்கச் சென்று வருகிறார்களென மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு இலண்டனில் இருந்து பயணம் செய்பவர்களால் மட்டும் சிறிலங்காவுக்கு சுமார் 12 மில்லியன் பவுண்ஸ் வெளிநாட்டுப் பணம் வருமானமாக கிடைக்க அது சிறிலங்காவின் யுத்தநிதியில் சேர்கிறது.

சிறிலங்கா விமான சேவை சிறிலங்காவின் தேசிய விமான சேவை அது ஈட்டும் வெளிநாட்டு நாணய வருமானம் மத்திய வங்கி மூலம் பெறப்பட்டு பயங்கரவாத்திற்கு எதிரான யுத்தம் என்ற பெயரில் புனையப்பட்ட போர்வையின் கீழ் சிறிலங்கா நடாத்தி வரும் யுத்தத்தினைத் தொடர்வதற்கான ஆபத்தான யுத்த தளபாடங்களை வாங்குவதற்குப் பயன்படுத்தப் படுகிறது.

அரச பயங்கரவாதம் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற பெயரில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள புலம் பெயர் தமிழர்கள் தங்களால் இந்த யுத்தத்திற்கு சிறிலங்காவுக்கு எதுவும் வழங்கப்பட மாட்டாதென உறுதியாக இருப்பினும் மறைமுகமாக சிறிலங்கா விமான சேவைகளின் சர்வதேச செயற்பாடுகளின் மூலம் இந்தக் காசு அவர்களிடம் இருந்து பெறப்படுகிறது.

தமிழர்களை ஒடுக்குவதற்கு ஆண்டொன்றுக்கு 1000 மில்லியன் பவுண்ஸ் அளவில் செலவிடுகிறது. தன்னுடைய இராணுவ ஆளணியை கிட்டத்தட்ட 200,000 ஆக உயர்த்தியுள்ளது. இது தற்பொழுது உள்ள பிரித்தானிய படையில் உள்ளவர்களின் தொகையை விட அதிகம்.

20 மில்லியன் மக்களைக் கொண்ட இச்சிறு தீவினை ஈவிரக்கமற்ற வகையில் ஆட்சி செய்யும் சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கம் தமிழர்களை அடிமைகளாகவும் இரண்டாந்தரக் குடிமக்களாகவும் நடாத்திக் கொண்டிருக்கிறது.

இலண்டனில் இருந்து பயணம் செய்பவர்களால் மட்டும் சிறிலங்காவுக்கு சுமார் 12 மில்லியன் பவுண்ஸ் வெளிநாட்டுப் வருமானமாக கிடைக்க அது சிறிலங்காவின் யுத்த நிதியில் சேர்கிறது.

சிறிலங்கா அரசாங்கம் தன்னிச்சையாக 16 ஜனவரி 2008 இலிருந்து சிறிலங்கா யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினால் மேற்பார்வையிடப்பட்டு வந்த யுத்த நிறுத்த உடன்பாட்டை இல்லாதொழித்து நோர்டிக் நாடுகளைச் சேர்ந்த சிறிலங்கா யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவையும் அவர்களின் நாடுகளுக்கு திருப்பி அனுப்பி வைத்துள்ளது.

சிறிலங்கா அரசாங்கத்தின் இந்த திடீர் செயற்பாட்டின் மூலம் சமாதான வழியிலான அரசியல் தீர்வுக்கான அனைத்து வழிமுறைகளையும் அது தூர வீசியுள்ளது.

சிறிலங்காப் படைகளினாலும் துணைக் குழுக்களாலும் சித்திரவதைப்படுத்தப்பட்ட கடத்தப்பட்ட குண்டு வீச்சுக்கு உள்ளாக்கப்பட்ட குடிமக்களுக்காகவும் அரசாங்கப் படையினராலும் அதன் துணைக் குழுக்களாலும் கொன்றழிக்கப்பட்ட 42 அரச சார்பற்ற பணியாளர்களுக்காகவும் உயிரிழந்த அப்பாவி மக்களுக்காகவும் ஐக்கிய நாடுகள் சபை அனைத்துலக அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் சிறிலங்காவில் மனித நேயத் துறையில் பணி புரிந்த பணியாளர்கள் அனைவரும் மிகக் கடுமையான எதிர்ப்பினைச் சிறிலங்காவுக்குத் தெரிவித்தனர்.

2007ல் கடமையில் இருந்த 7 ஊடகவியலாளரைக் கொன்றழித்ததின் மூலம் சிறிலங்கா ஈராக் சோமாலியாவுக்கு அடுத்ததாக உலகில் அதிக அளவில் ஊடகவியலாளரைக் கொன்றழித்த நாடுகளின் வரிசையில் 3வது இடத்தினைப் பெற்றுள்ளது.

கடந்த இருவருடத்தில் மட்டும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் இருவர் கொழும்பில் வைத்துக் கொல்லப்பட்டுள்ளனர். அரசாங்கத்தின் ஆதரவைப் பெறும் துணை இராணுவக் குழுவே தமிழ்த் தலைமையை ஒடுக்கும் அல்லது அழிக்கும் துர்நோக்கில் இதனைச் செய்தது என்ற குற்றச்சாட்டு அரசாங்கத்தின் மேல் வெளிப்படையாகச் சுமத்தப்பட்டுள்ளது.

தற்பொழுது அனைத்துலக சமூகம் சிறிலங்கா அரசாங்கத்தின் மேல் அதனுடைய மனித உரிமை மீறல்களுக்கு தடைகளை விதிப்பது உட்பட இருதரப்பினரையும் சமமாக கருதுகிற அணுகுமுறையுடன் செயற்படுவது பேச்சுக்கள் மூலம் அமைதித் தீர்வு காண்பதற்கான சிறந்த பங்களிப்பாக அமையுமென நாம் கருதுகின்றோம்.

எங்களுடைய தமிழ் உடன்பிறப்புக்களையும் எதிர்காலத்தில் பயணங்கள் செய்வதற்கு திட்டமிடுபவர்களையும் பிரயாண முகவர்களையும் சிறிலங்கா விமான சேவையில் பயணிக்கும் பொழுது நாம் செலுத்தும் பணம் எங்களுடைய சொந்த மக்களை அவர்களுடைய சொந்தத் தாயகத்தில் சிறிலங்கா கொல்வதற்கான ஆயுதங்களை சிறிலங்கா வாங்குவதற்கு பணம் கொடுப்பதற்குச் சமானமானதாகிறது என்பதைப் புரிந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

மற்றைய விமான சேவைகளில் கொழும்புக்குப் பயணிக்கும் பொழுது தரிப்பிடங்களில் தங்கிச் செல்வதால் காலதாமதம் ஏற்படுமாயினும் நாம் சிறிலங்காவுக்கு இரத்தக் காசு கொடுப்பதை நிறுத்த வேண்டுமென்பதால் நீங்கள் சிறிலங்காவின் விமான சேவை அல்லாத மற்றைய விமான சேவைகளைப் பயன்படுத்துவதை நாம் போற்றி வரவேற்கிறோம்.

எமது சக பிரித்தானியக் குடிமக்களுக்கும் இந்த வேண்டுகோளை நீடித்து அவர்களையும் அவர்கள் சிறிலங்கா விமான சேவைகளுக்கு கொடுக்கும் பணம் சிறிலங்காவில் வாழும் தமிழர்கள் மரணமடைவதற்கும் அழிவுகளைச் சந்திப்பதற்கும் காரணமாகிறது என்பதனைச் சிந்தித்து சிறிலங்கா விமான சேவைகளைப் புறக்கணிக்குமாறு வேண்டுகின்றோம்.

ஐரோப்பாவிலும் கனடாவிலும் அமெரிக்கா அவஸ்திரேலியா இந்தியா போன்ற நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புக்கள் இந்தப் புறக்கணிப்புக்கு எமக்குப் பலத்த ஆதரவு தருவதினால் உலகளாவிய நிலையில் சிறிலங்கா விமான சேவைகள் மேலான புறக்கணிப்பு இடம்பெறும்.

சிறிலங்கா அரசாங்கம் சிறிலங்காவில் வாழும் தமிழர்கள் மேலான எல்லாவிதமான மனித உரிமை மீறல்களையும் நிறுத்தும் வரை இந்தப் புறக்கணிப்புப் போராட்டத்தை நாங்கள் தொடரவுள்ளோம்.

- தகவல் பிரிவு / ஒரு பேப்பர்



INSIGHT SYSTEMS

பிரஜாவுரிமை பெறுவதற்குரிய **LIFE IN THE UK** பாட வகுப்புக்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படுகின்றன. கிழக்கு லண்டன் பகுதியில் இதுவரை கற்பித்த மாணவர்களில் 98%ற்கு மேலானவர்களை தேர்ச்சியடைய வைத்துள்ள பெருமைக்குரிய அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் இலகுமுறையில் கற்கை நெறி. குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை. தமிழில் உதவிக் குறிப்புக்கள். ஒவ்வொரு வகுப்பு முடிவினிலும் அத்தியாய முடிவினிலும் பயிற்சிப் பரீட்சைகள். வெகு விரைவில் கம்பியூட்டர் வகுப்புக்களும் ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்புகளுக்கு: **07908 866 300**

நோர்வேயில் சிறப்பிடம் பெறும் இராஜன்

நோர்வே நாட்டில் தொழில் பெற்று தத்தமது துறைகளில் முன்னணி வகிக்கும் பத்து வெளிநாட்டவர்களில் ஒருவராக ஈழத்தவரான திரு. இராஜன் செல்லையா தெரிவு செய்யப் பட்டிருக்கிறார்.

நோர்வேயில், வேலைவாய்ப்பு பெறுவதில் வெளிநாட்டவர்கள் எதிர்நோக்கும் தடைகளை கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழுவினரே தொழில்துறையில் தடம் பதித் துள்ள 10 வெளிநாட்டவர்களை வருடாவருடம் தெரிந்து விருது வழங்கி வருகிறார்கள். இவ் விதமான சிறப்பிப்பு மூலம், இவர்களினை முன் மாதிரியாகக் கொள்வதன் மூலம் மற்றைய வெளிநாட்டவர்களை ஊக்குவிக்க முடியும் எனக் கருதும் இக்குழு 2007ம் ஆண்டுக்கான விருதினை பெறும் பத்துப் பேரில் ஒருவராக ஊடகவியலாளர் இராஜனை தெரிவு செய்துள்ளது.

1983ல் தனது 21வது வயதில் உயர்கல்வி கற்பதற்காகச் நோர்வேக்குச் சென்ற இராஜன் ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானிடவியல் துறையில் கல்வி கற்று பட்டம் பெற்றார். கடந்த பத்தாண்டுகளாக NRK எனும் நோர்வேயின் தேசியத் தொலைக்காட்சியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக பணிபுரிந்து வருகிறார்.

ஒஸ்லோவிலிருந்து வாரத்தில் சில மணி நேரம் ஒளிப்பரப்பான தமிழ் வானொலியொன் றினை ஆரம்பித்து நடாத்தி வந்த இராஜன். அவ்வொலிபரப்பில் நோர்விஜிய மொழியில் தாயகம் பற்றிய நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்கினார்.

தமிழ் தொலைக்காட்சி இணையத்தின் (TTN) உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றிய அவர் நிலவன் செல்லையா என்ற பெயரில் அரசியல் ஆய்வுகளை ஐபிசி வானொலியூடாக நடாத்தியிருக்கிறார்.

NRK தொலைக்காட்சியில், தற்கால பல்கலாச்சாரச்சூழலில் வெளிநாட்டிலிருந்து வந்து குடியேறியவர்களின் கலாச்சாரங்களின் சந்திப்பு பற்றியதான "Migrapolis" என்ற வாராந்த சஞ்சிகை நிகழ்ச்சியின் தயாரிப்பு குழுவில் இராஜனும் பணியாற்றி வருகிறார். இது நோர்வேயில் வாழும் பல்வேறுபட்ட இனத்தவரால் விரும்பிப்பார்க்கப்படும் ஒரு நிகழ்ச்சி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

2001ம் ஆண்டில், நோர்வே சுதந்திர நாள் நிகழ்வுகளை NRK தொலைக் காட்சியில் தொகுத்து வழங்கும் வாய்ப்பு இராஜனுக்கு கிடைத்தது. வெளிநாட்டு குடியேறியான ஒரு ஊடகவியலாளர் இது போன்ற முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியை தொகுத்து வழங்கியமை அதுவே முதல் தடவையாகவிருந்தது.

நோர்வேயில் வளர்ந்து வரும் தமிழ் இளைய வர்களுக்கு முன்னுதாரணமாக திகழும் இராஜன் தாயகம் நோக்கிய சமூகப் பணிகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்.

தமிழ் ஊடகத்துறையானது வெறுமனே பிரச்சாரத்துக்கானது என்பதைக் கடந்து முழுமையாக செயற்பட வேண்டும் என விரும்பும் அவரது அநுபவத்தையும் ஆற்ற லையும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் ஊடகங்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

புலம் பெயர் தேசத்தில் தேசிய அளவில் சிறப்புப் பெறும் இராஜனுக்கு ஒரு பேப்பர் தனது வாழ்த்தினை தெரிவிக்கிறது.

மாவட்ட நீதிபதியாக தமிழர்



ஈழத்தவரான திரு. குகதாசன் தம்பிப்பிள்ளை டென்மார்க்கில் மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள் குழுவிற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார். டென் மார்க்கிலுள்ள இரண்டு மாவட்ட நீதிமன்றங்க ளில் ஒன்றான மேற்கு மாவட்ட நீதிமன்றத் திற்கு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து நீதிபதியாக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பத்திரிகையாளராகவும் கணணி தொழில்நுட்ப வியலாளருமாக பணியாற்றி வரும் இவர் சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் செயலாளராகவும் தமது பணியை செய்து வருகின்றார்.

டென்மார்க் ஊடகவியலாளர் சங்கத்திலும் பெல்ஜியத்திலுள்ள சர்வதேச ஊடகவிய லாளர் சம்மேளனத்திலும் உறுப்பினராக உள்ளார். நகர சபை தெரிவுக்குழுவால் கடந்தவருடம் தெரிவுசெய்யப்பட்டு இவர் கடந்த நவம்பரில் நீதி அமைச்சின் நீதிமன்ற தெரிவுக் குழுவால் நீதிபதியாக நியமனம் பெற்றார். நகர நீதிமன்றங்களில் தீர்க்கப்படாத வழக்குகள் மற்றும் மேன்முறையீட்டு வழக்கு கள் விசேட வழக்குகள் இம் மாவட்ட நீதிமன்ற ங்களில் நடைபெற்று வருகின்றன.

RISING SUN

TRADITIONAL SRI LANKAN RESTAURANT & BAR

HOPPER GET-TOGETHER

Sri Lankan Menu with Hoppers, all the varieties,
"You mention, we serve".

Buffet £7.50

Fridays & Saturdays
from 5.00 pm till late,
Sundays
from 12.30 after-noon to 10.00 pm



அழகான அமைப்பு இதமான இடம்
அருமையான சூழல் அன்பான உபசரிப்பு
உறவினர் நண்பர்களை கூட்டி வாருங்கள்
உறவும் நட்பும் இன்னும் பெருகும்.

Please book early to avoid disappointment.
Take-away available.

Free car park.
Just two-minutes walk from Sudbury Hill tube-station.

Bar Open all 7 days of week, (12pm-till late)

Call 020 8422 2575 / 07784 430 704 www.risingsunhotels.com
138 Greenford Road, Sudburry Hill, Harrow. HA1 3QL

The Lord Hill
BAR AND RESTAURANT



Sri Lankan and South Indian menu available.

Bar open Sunday - Thursday till late, 1.00 am, Friday and Saturday till 3.00am

Hall available for private parties

Take Away Available

Rooms available for
School and Community gatherings...

From Uxbridge Tube Station only 0.7 miles. Bus 222 or U5

Tel: 01895 232822 Mobile: 07939 162 097, 07788 870 769

Address: 34 Cowley Mill Road, Uxbridge, Middlesex. UB8 2QD

தாலி அறுப்பா? அவிழ்ப்பா?

டிசம்பர் 7ம் திகதி வெளிவந்த ஒரு பேப்பர் ரின் 83வது இதழில் ஜேர்மனிக்கான எமது செய்தியாளர்களில் ஒருவரான திருமதி. சாந்தி ரமேஸ் வவுனியன் எழுதிய 'தாலி பெண்ணுக்கு வேலியா சோலியா?' என்ற கட்டுரையை பிரசுரித்திருந்தோம்.

இக்கட்டுரை தொடர்பாக தமது அதிருப்தியை ஜேர்மனியை சேர்ந்த திருமதி சுதானந்தன் அவர்கள் எமக்கு கடிதம் மூலம் தெரிவித்திருந்தார். அக்கடிதத்தினையும், அது தொடர்பில் சாந்தியினது விளக்கத்தையும் இங்கு பிரசுரிக்கிறோம்

- ஆசிரியர்

திருமதி சதானந்தனின் கடிதம்

சென்ற நவம்பர் மாதம் ஒரு பேப்பர் என்னும் பத்திரிகையில் வெளிவந்த 'தாலி அறுப்பும் கூறை பறிப்பும்' என்ற கட்டுரையை அதில் தொடர்புடைய பாதிக்கப்பட்ட பெண்ணான நான் கூறுகிறேன். உண்மையில் அக்கட்டுரையை வாசித்ததும் மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். அக் கட்டுரையில் இடம் பெற்ற சம்பவங்கள் அனைத்தும் எனது கணவரின் இறுதி க்கிரியைகளில் நடைபெறவில்லை. இந் நிகழ்வானது சாந்தி ரமேஷ் வவுனியன் என்பவரால் பொய்யாக வெளியிடப்பட்டது. தனது சொந்த பகமை காரணமாகவும் தனது சொந்த பழிவாங்கல் காரணமாகவும் அக்கட்டுரையை எழுதியுள்ளார். அவரை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

ஒரு மனிதர் இறந்த பின் அதற்கான கிரியைகளை எமது இந்து கலாச்சார முறைப்படி எப்படி நடத்தி முடிக்கிறார்களோ அவ்வாறே நானும் எனது கணவரின் இறுதிக்கிரியைகளை நடத்தி முடித்தேன். இதை நான் எவரின் திணிப்பிலோ அல்லது எவரின் வற்புறுத்தலினாலேயோ செய்யவில்லை என்பதை ஆணித்தரமாகக் கூறவிரும்புகிறேன்.

தனது கணவன் இறந்த பின் ஒரு மனைவியானவள் தனது தாலியையும், கூறையையும் கழற்றி வைப்பதுண்டு. தாலியை கழட்டும் போது சிரித்த முகத்துடனோ அல்லது புன்னகையுடனோ கழட்டி வைப்பதில்லை தனது மனக்குமுறலை வெளிவார்த்தைகள் மூலம் கதறியழுதே அதை செய்வதுண்டு. அதனை விளங்காமல் அக்கட்டுரையை எழுதியவர் எழுதியுள்ளார்.

இந் நிகழ்வினை சாந்தி ரமேஷ் வவுனியன் என்பவர் மற்றவர்களால் அது கட்டாயத்தின் பேரில் கழட்டப்பட்டதாக பொய்க்கட்டுரை எழுதியுள்ளார். அதில் எந்த உண்மையுமில்லை. எனது நண்பிகளை தனது சொந்தப் பிரச்சினை காரணமாக பழிவாங்கும் நோக்கத்துடனேயே எனது கணவரின் மரணவீட்டில் எடுத்த முயற்சியே அது. தயவு செய்து பழிவாங்கும் படலங்களை இப்படியான நிகழ்வுகளில் நிகழ்த்த வேண்டாம் என அக்கட்டுரை எழுதியவருக்கு கூற விரும்புகிறேன்.

தயவு செய்து பத்திரிகை ஆசிரியர்களுக்கு ஒரு விண்ணப்பம். இப்படியான கட்டுரைகள் உண்மையில் நடந்த நிகழ்வுகளா என்பதனை சம்பந்தப்பட்டவர்களிடம் அறிந்த பின்னரே அக்கட்டுரைகளை பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

- திருமதி சுதானந்தன்

சாந்தி ரமேஷ் வவுனியனின் விளக்கம்

எனது கட்டுரை தொடர்பாக தனது மறுப்பினை ஜேர்மனியை முகவரியாகக் கொண்ட திருமதி. சுதானந்தன் என்பவர் எழுதியுள்ளார். அக்கடிதத்தை திரு. எஸ். மகேசன் என்பவர் பிரித்தானியாவிலிருந்து பதிவுத்தபாலில் ஒரு பேப்பர் ருக்கு அனுப்பி வைத்துள்ளார். அவ்விருவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது கட்டுரையை வைத்துப் பலவாறான சர்ச்சைகளும் மிரட்டல்களும், கொலை அச்சுறுத்தல்களும் எனது வீட்டுக்கதவு வரை வந்திருந்தன. தாலிகழற்றிவைப்பு என்பது எமது பண்பாடு, அந்தப்பண்பாட்டை மீறுவோர் தண்டனைக்குரியோர், இந்தப் பண்பாட்டு மீறலை நியாயப்படுத்தி எழுதிய நானும் அதனை வெளியிட்ட ஒரு பேப்பர் ரும் தண்டிக்கப்படவுள்ளதாகவும் தொடர்ந்து அச்சுறுத்தல்கள் வந்திருந்தன.

நான் எழுதியது போல சம்பவத்துடன் தொடர்புபட்ட மரண வீட்டில் நடக்கவில்லையெனவும் அவையெல்லாம் பொய்யெனவும் மன்னிப்பு கேட்காவிடில் குடும்பத்துடன் கொலை செய்யப்படுவேன் எனவும், அல்லாவிடில் சம்பவத்துடன் தொடர்புபட்ட பெண்ணின் கைப்பட 'நீ எழுதியது பொய்' என எழுதுவிப்போம் எனப் பல ஆண்களின் தொலைபேசித் தொல்லைக்கு நான் ஆளாக நேர்ந்தது.

மேற்படி நிகழ்வானது ஒரு சம்பிரதாயம் எனவும் கழட்டு கழட்டென நிகழ்ந்த கட்டாயப்படுத்தலை என்னை விடுங்கோ விடுங்கோ என அழ அழ கழற்றப்பட்ட தாலியால் தனது வாழ் நாளில் மறக்க முடியாத துயராயுள்ளது இதைக் கேட்க ஒருவருமே எனக்கில்லாமல் போய் விட்டார்கள் என சம்பந்தப்பட்ட பெண் என்னிடம் அழுது ஓய்ந்ததும் அடுத்தடுத்த கட்டாயத் திணிப்புக்கள் அவரது வாழ்வில் குறுக்கீடுகள் வந்த பின்னர்தான் மேற்படி விடயத்தை பத்திரிகையில் எழுத வேண்டிய துர்ப்பாக்கியம் நிகழ்ந்தது.

ஒரு ஊடகம் சார்ந்த எனக்கு நான் நேரில் கண்டதை நூற்றிற்கும் மேற்பட்டோர் முன்னிலையில் நிகழ்ந்த கொடுமையை பல வெளி நாட்டவர்களே எதிர்க்கும் அளவிற்கு நடைபெற்ற ஒரு கட்டாயப்பறிப்பை வெளிப்படுத்த வேண்டிய கடமைப்பாடு இருந்தது. நானும் சேர்ந்து பார்த்துவிட்டு பேசாமல் இருந்திருந்தால் உண்மையான ஒரு ஊடகக்காரியாய் இருக்கும் தகுதியை இழந்திருப்பேன்.

எனது கட்டுரையின் நோக்கம் யாரையும் தனிப்பட்ட விதத்தில் தாக்குவதாக இருக்கவில்லை.

'என்ரை தாலியை விடுங்கோ....உங்களுக்கு உங்களுக்கெண்டு வந்தால்தான் என்ரை நிலை விளங்கும்' என கதறக் கதற பறிக்கப்பட்ட கட்டாயப் பறிப்பு இனிமேல் எங்கள் சமூகத்தில் வேண்டாம் என்ற நோக்கிலேயே கட்டுரை அமைந்ததே தவிர மற்றும்படி யாரையும் புண்படுத்தவல்ல. வீட்டுக்குள் இது நிகழ்ந்திருந்தால் பிரச்சினையில்லை ஒரு பொது மண்டபத்தில் பலர் முன்னிலையில் நிகழ்ந்த கொடுமையை எப்படி மறைக்க?

சடங்கு என்ற பெயரில் ஒரு மனிதவுயிரை வதைப்பதையே கண்டிப்பதாய் அமைந்தது. கணவனே இல்லையாம் பின் தாலியை அவன் நெஞ்சில் கழற்றிப் போட்டதும் அவன் உயிர் பிழைப்பானா? அப்படியாயின் கட்டாயப்படுத்தல் அவசியம் என வாதிடலாம்.

இறப்பின் துயரில் இருக்கும் ஒரு பெண்ணின் உணர்வுகள் மதிக்கப்படாமல் மிதிக்கப்படுதலை எதிர்த்துக் கேட்க அன்று அங்கிருந்த பெண்கள் துணிந்திருந்தால் திருமதி. சுதானந்தன் இப்படியொரு கடிதத்தை எழுதும் நிலை வந்திருக்காது. யேர்மனியில் இருக்கும் திருமதி.சுதானந்தனால் வாசிக்க முடிந்த கட்டுரையை வெளியிட்ட ஒரு பேப்பர் ரின் முகவரி கிடைக்காமல் நான்காவது நபரான திரு. மகேசன் கையில் கவனமாய் கிடைக்கப் பெற்று ஒரு பேப்பர் ருக்கு வந்திருப்பதிலிருந்தே சம்பந்தப்பட்ட பெண்ணின் நிலையை இங்கே மேலதிகமாக விளக்கத் தேவையில்லை.

இவ்விடயத்தில் கொதித்தெழுந்தவர்கள் யாருமே கட்டுரையை முழுமையாக வாசிக்காமல் எனது கட்டுரை பற்றி தொல்லைப்பட்டுக் கொண்டார்கள். மேற்படி கட்டுரையில் சம்பவ இடம் பெயர் முகவரிகள் எதுவும் எழுதப்படவில்லை. கண்ணால் கண்ட ஒரு கட்டாயப் பறிப்புப் பற்றியே குறிப்பிட்டிந்தேன்.

அச்சம்பவத்துடன் தொடர்புடைய நபர் தானென தனது கண்டனத்தை தனது பெயர் முகவரிகளுடன் எழுதியிருக்கும் திருமதி. சுதானந்தன் அவர்களே! சரி நான் எழுதிய சாவுக்குரியவர் உங்கள் கணவராகவே இருக்கட்டும், கட்டாயத்தாலி பறிப்பு உங்களுக்கானதாகவே இருக்கட்டும். அவ்விதமிருப்பின் 24.11.07ல் நடந்த உங்களுடன் தொடர்புபட்ட மரண நிகழ்வில் கதறக்கதறத் தாலி கழற்றுவிக்கப்பட்டதும், மற்றும் அங்கு நடைபெற்றதாக நான் குறிப்பிட்ட சம்பவங்கள் யாவுமே உண்மையானவை. அதில் எந்தவித கற்பனையோ கதைகட்டலோ இல்லை யாவற்றுக்குமான ஆதாரங்கள் சாட்சியங்கள் என்னிடம் இருக்கின்றன.

ஒரு மரண வீட்டில் யார் மீதும் சொந்தப் பிரச்சனையென்று எனக்கு எதுவும் இருக்கவுமில்லை, இருப்பதுமில்லை. எல்லோரும் எனக்கு மனிதர்களே. நீங்கள் குறிப்பிடும் அந்த நண்பிகள் யார் என்று தெரியவில்லை.

எனினும் சிலவேளை அப்படி யாராவது இருப்பின் அவர்களுக்குச் சொல்லி விடுங்கள். எங்கிருந்தோவெல்லாம் மரணவீட்டுக்கு வந்தவர்களெல்லாம் எனக்குப் பகைவர்களில்லை நிறைய நண்பர்கள் உறவினர்கள் வந்தார்கள். அவர்கள் யாவரும் வலுக்கட்டாயமாக ஒருவரின் சொந்த விருப்பின்றி தாலி கழற்றுவித்ததை கண்ணால் கண்டார்கள். அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன.

சரி நான் எழுதியது பொய்யாக இருந்தால் உங்கள் அனுமதியின்றி உங்கள் வீட்டு மரண நிகழ்வை பகைதீர்க்கும் களமாக பாவித்திருந்தால் தாராளமாக நீங்கள் என்மீது சட்ட நடவடிக்கை எடுக்கலாம். உண்மையில் உங்கள் மீது கரிசனை கொண்டவர்கள் சட்டத்தின் முன் என்னை நிறுத்தலாம்.

நான் எழுதிய கட்டுரையின் நோக்கம், ஒரு இழப்பிற்கான விலை இன்னொரு உயிரை வதைத்தல் இல்லை. இனிமேல் சம்பிரதாயம் என்று சொல்லி மனிதரை வதைத்தலை எதிர்த்தலும் இப்படியானதொரு சம்பிரதாயத்தை எம்மிடையே இல்லாது செய்வதுமே.

- சாந்தி ரமேஷ் வவுனியன்

வாசகர் கடிதம்

புலம்பெயர் இளைஞர்களும் தமிழ் தேசியமும்

தமிழ் தேசியப் பற்றிலும் இங்கு வாழும் தமிழ் இளையோர்கள் ஆளுமை உள்ளவர்களாக வளர வேண்டும் என்ற ஆவலில் இக்கடிதத்தை வரைகிறேன்.

எமது தமிழ் இளைஞர்களை ஆக்கபூர்வமானவர்களாகவும் தேசியப் பற்றுள்ளவர்களாகவும் உருவாக்குவதற்கு பல நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் இங்கு சொல்லும் வேலைத் திட்டங்கள் ஆவன.

தமிழ் பாடசாலைகள் யாவும் ஒருங்கிணைப்பட வேண்டும். ஜேர்மன் போன்ற நாடுகளில் தமிழ் ஆலயம் இருப்பது போன்று தமிழ் தேசியப் பாடசாலைகள் அமைக்கப்படவேண்டும்.

இங்கு பிறந்த பிள்ளைகளுக்கு நாம் யார்? எங்கிருந்து வந்தோம், ஏன் நாம் இங்கு வந்தோம், எமது போராட்டம் ஏன் ஆரம்பிக்கப்பட்டது போன்ற விடயங்களை அறிந்து கொள்ளும் வகையில் புத்தகங்கள் எழுதப்பட வேண்டும்.

இங்குள்ள பல இளைஞர்கள் வீட்டுச்சுமை காரணமாக கல்வியை தொடர முடியாமல் முழுநேர வேலையை செய்கிறார்கள். இவர்களுக்கு தொழில் சார்பு வகுப்புப் பட்டறைகள் அமைத்து பல்வேறு தொழில் சார்பு அறிவுகள் ஊட்டப்படல் வேண்டும். அத்துடன் சொந்த வியாபாரம் செய்ய விரும்புபவர்களையும் ஊக்கப்படுத்தி அவர்களுக்கான உதவிகளை செய்தல். நாம் இங்கு பலமான சமுதாயமாக இருந்தால் தான் நம் தமிழீழமும் பலமாக அமையும்.

மாவீரர்களின் கனவும் அதுவே எதிர்கால சந்ததி ஆளுமை உள்ள சமுதாயமாகவும் எல்லோரும் வியந்து பார்க்கக்கூடிய இனமாக வாழ வேண்டும் என்பதே. தேசியத் தலைவரின் கவலையும் புலம்பெயர் வாழும் இளைய சமுதாயம் பற்றியதே.

தமிழ் தேசியம் பேசுபவர்கள் ஒழுங்கான அத்திவாரம் இடாவிட்டால் இங்குள்ள எமது இளையோர் இன அடையாளம் அற்றுப் போவார்கள். இங்குள்ளவர்கள் கோயில் கட்டியும் பரதநாட்டிய அரங்கேற்றங்களை அரங்கேற்றியும் எமது கலை நிகழ்ச்சிகளை நடத்தியும் எமது இளையவர்களை தமிழ் பற்றாளர்களாக வளர்த்து விட முடியாது.

இங்கு பிறந்த பிள்ளைகள் தன்னை யார் என்று அடையாளம் காணத் தவறினால் அவர்கள் மேற்கத்திய கலாச்சாரத்தில் மூழ்கி அடையாளம் அற்றுப் போவார்கள்.

- தமிழ் பற்றாளன்

SRI SIVASAKTHI ASTROLOGICAL CENTRE

Pandit Laxsmana Shastry
Specialist Astrologer

அகிலன் என்டர்பிரைசஸ்
(Near Lakshmis Jewellers)
274 High Street North,
Easthamn, London E12 6SA

Tel: 07939 095 099
07507 089 785

உலகத்தில் சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம், துன்பங்கள் நன்மை தீமைகள், பற்றிய விபரங்களைக் கூறுவார்.

இவரை ஒருமுறை சந்தியுங்கள்: கைரேகை, பெயர் இராசி, லட்சுமி கடாட்சம், பொருள், அரசியல், உத்தியோகம், கல்வி, வியாபாரம், திருமணம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை காதல் கலியாணம், விசா பார்த்து சொல்லப்படும். நிலம், வீடு, யோகம் அதிஸ்ட நம்பர்கள் கோர்ட் வழக்குகள், எதிரிகளினால் மந்திரம், சூனியம், பேய், பிசாசு கண்திருட்டி, பரிகாரம் செய்வார்.

உடன் சந்தியுங்கள்.

Opening Hours: 9.30 am-8.30pm-7days

He speaks English, Tamil, Telegu, Malayalam, Kannada and Hindi.

அனைத்து தமிழ் உள்ளங்களுக்கும் உளம் நிறைந்த தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

12 | JANUARY 18 - JANUARY 31, 2008 ■ ■ ■

Some Pulp Fiction Writers with Fetid Tools

By Sachi Sri Kantha

One should not be surprised that with the advent of internet, we are being bombarded with the weekly fiction of Tamil fiction writers, whose canvas is mainly limited to LTTE's personalities. B. Raman, Col. R. Hariharan (Retd.), N. Sathiya Moorthy and last but not the least D.B.S. Jeyaraj have been the major names in this game of fiction writing. Here are four samples from these fiction writers, about Thamilselvan which in my opinion tell something about the incestuous thoughts of these LTTE gossip mongers.

(1) "Even before his death, the political head was No. 3 in the pecking order of the LTTE. The relationship between Prabhakaran and the late Anton Balasingham, LTTE's sole ideologue and predecessor of Thamilchelvan at the negotiating table, was on a closer and more equitable plane than Thamilchelvan..." – Col.R.Hariharan (Retd.), South Asia Analysis Group, Note No. 413, Nov.7, 2007.

(2) "Thamilselvan, the presumed No.3 in the pecking order of the LTTE leadership after Prabakaran and Pottu Amman, the chief of the intelligence wing of the LTTE, was the only leader not involved in any major act of terrorism either in Sri Lankan or Indian territory..." – B. Raman, South Asia Analysis Group, Paper No. 2456, Nov.15, 2007

(3) "To a good measure, the death of LTTE political wing leader S P Tamilselvan has taken the wind out of the 'Anuradhapura attack'. On past occasions, heavy LTTE attacks on State targets -- military and/or economic -- had the knack of stalling the Sri Lanka Army (SLA) on its track. This had eventually triggered a political re-thinking on the part of the Sri Lankan State and Government, and also the southern Sinhala polity. Not this time round..." – N. Sathiya Moorthy, Director, Chennai Chapter of Observer Research Foundation (ORF), an Indian policy think-tank; Colombo Daily Mirror, Nov.12, 2007.

(4) "The nickname for him among comrades was 'Thagadu' meaning sneaker colloquially. Former tiger colleagues say that Thamilchelvan eliminated 'competition' by getting potential rivals sidelined through his sneaking to Prabakharan. He was responsible for the downfall of many colleagues including Dominick a former Jaffna political commissar. Dominick apparently had cracked a joke 'critical' of Prabakharan among his comrades. Thamilchelvan secretly recorded it and promptly passed it on to Prabakharan...." – D.B.S.Jeyaraj, [in his web-blog on S.P. Thamilselvan], Nov.3, 2007.

His main tools of embellishments are innuendos, inappropriate comparisons and inappropriate inferences based on hearsay

This breed of fiction writers are the non-Japanese equivalents of what Japanese call derisively as *'madogiwa zoku'* [the window-beside tribe]. The *madogiwa zoku* phrase is tagged to the guys characterized by the following commonalities; (1) over 50 – nearing retirement – and 'good for nothing' in either productivity or performance value for companies. (2) alienated to the peripheral office space, due to their incompetence (3) thus, spend their whole time watching the window space for any external action, not excluding leaf fall, rain and snow.

Having retired from active service, B. Raman and Hariharan are in the post- *madogiwa zoku* phase now. And they still get their thrill in engaging in their pet peeve of hierarchy ranking. Historically, the game of hierarchy ranking was an invention of European monarchy watchers and papacy watchers. It spread to the Indian subcontinent and the Indian bureaucratic clods took to this game like the proverbial duck taking to water. The amusing point is that only those who service the passive - stagnating fields thrill themselves in this hierarchy ranking, and for the Indian bureaucratic clods, this is a holy exercise day after day. Contrastingly, in the dynamic fields (such as science, entertainment, music and sports), hierarchy ranking is a futile exercise and hardly taken seriously. The working premise here is that the talent abounds and it is objectively difficult to rank many who are equally apt in their chosen specialty. Those who make their names in the dynamic fields know that they are 'the best' only as demonstrated by their performance in the most recent research paper, record, album, and game. Thus *madogiwa zokus* like Raman and Hariharan make fools of themselves in indulging in their pet peeve of hierarchy ranking to LTTE, which has proved itself as a vibrant institution in its short span of existence, unlike the century-old vapid Indian bureaucracy.

B.Raman's fetish is about LTTE leader Pirabhakaran's impending mortality. He has lately developed a penchant for 'decapitation strikes'. But most of what he dish out in his routine intelligence analyses has the imprimatur of an already decapitated crank. One of my B.Raman favorites is that Pirabhakaran is sickly, and suffering from hypertension and diabetes. This dispensation is served with an illusion that Raman is the physician consultant of Pirabhakaran. Technically speaking, any man who is over 50 has a nominal probability of being diagnosed with hypertension and diabetes.

Jeyaraj's expertise in LTTE fiction-writing, is of a special grade. His main tools of embellishments are innuendos, inappropriate comparisons and inappropriate inferences based on hearsay. In the above-cited anecdote, Jeyaraj had labored valiantly to push the point that it was because of Thamilselvan's penchant for passing an off-color 'joke' to Pirabhakaran, that Dominic - one time LTTE spokesman for Jaffna district - lost his clout and had to quit LTTE.

I, for one, doubt that whether this would have been the valid and sole reason for Dominic to quit LTTE. First, Jeyaraj may have heard only one side of the story, from the grieved party. Secondly, it makes one wonder whether Pirabhakaran is such a humor-less dimwit, which contradicts the evidences presented by those who have met the LTTE leader face to face. Thirdly, it also insinuates Thamilselvan as a Nixonian type, in taping conversations secretly, without prior consent. Fourthly, if the third item has to be believed, that 'critical joke' on Pirabhakaran should have been repeated ad nauseam by Dominic, which would have allowed Thamilselvan to make a recording. How else one could align the possibility that Thamilselvan anticipated the 'critical joke' on Pirabhakaran from Dominic and quickly turned on the tape recorder switch which he had hid in his shirt pocket or elsewhere.

(edited for space)

SPOTLIGHT

By

Charles Somasundrum

Democratic traditions sometimes go in the other direction

The well known singer M.I.A., who has carved a niche in the young music scene, for her '*eclectic range of hip-hop, dance hall and electronic music*' as much as for her vibrant coloured attire, has released her latest album *Kala* revealing, according to David Dye '*her unique political perspectives.*'

Few may be aware of M.I.A's background. Young M.I.A. is none other than the daughter of the well known Tamil activist A R Arulpragasam better known as Arular after whom an earlier album of M.I.A. was named. This young lady achieved fame by being banned from travelling to the United States purely because of her father's political views!

Tamils of the Diaspora should be aware that this young lady has stuck to her political ideals that she learnt from her father.

The USA that banned M.I.A. is in the midst of its four yearly 'jamboree' that the two parties, the Democrats and the Republicans hold, to select their president. Few persons, including some Americans I have met, are aware that their president is not directly elected as in most other countries. No. The US president is elected by an 'Electoral College' which in turn is directly elected by the people. It is this 'College' that elects the president. There is very little serious political consideration involved in the process. Often, the outcome depends on the amount of money a candidate has at his disposal. This pays for intense media publicity; posters; flags; bands and tinsel and the like – one long carnival! The tax deductible money for all this, comes from the many firms and business around the country, who in turn expect 'favours' if their candidate were to be elected.

Martin Kettle writing in the Guardian says '*the dynamics of its* (America's) *domestic politics are increasingly discordant with those of other developed democracies. US party politics has become so polarised that the country's ability to solve its own domestic problems, much less those of the world, has been hugely compromised.*'

This is the country that has made itself the 'Policeman of the World', assisted by tame groups like Tony Blair's Britain, or Howard's Australia along with tamer stooges like Musharaff's Pakistan.

This is the country that has dared to *proscribe* the freedom fighters of Eelam and have provided weapons to the 'terrorist' government of Sri Lanka through Israel. They conveniently forget, that the Eelam freedom fighters are only doing what George Washington, their first president did when he sought to break away from the Britain of George III.

Martin Kettle concludes, '*while other democratic traditions have tended to become more pragmatic and consensual, those of the U.S. have gone in the other direction.*'





ஸ்ரீ கணபதி ஜோதிட நிலையம்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நட்சத்திரம் அர்ஜுனா ராஜு குருஜி ஜெங்கம்மா



கைரேகை, சாமுத்திரிகா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாம நட்சத்திரம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை மிகவும் துல்லியமாகக் கணித்து வழங்குவார். இவரை ஒரு முறை சந்தித்துப் பாருங்கள். பெயர் வசிகம், தொழில் வசிகம், கையெழுத்து வசிகம், காதல் வசிகம், கணவன் மனைவி பிரச்சனை தீர, திருமணப் பிரச்சினை தீர, தொழில் முடக்கம், வியாபார வசிகம், உத்தியோகத்து தடை நீங்க, குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்தியக் கோளாறு, அனைத்து விதமான தோசங்களுக்கும் பரிகாரம் வழங்கப்படும். ஆயுர் வேத மருந்துகள் சகல விதமான வியாதிகளுக்கும் நாடி பார்த்து மருந்து தரப்படும்.

07951 631 883 / 020 8470 5209

1st Floor, Sai Hair Dressers, 345 A High Street North, Manor Park, London E12 Open Seven days a Week

PJP

Need a Mortgage?
Need to do Re-Mortgage?
Secure loans?
No income proves?
Wants to buy a property don't know how?
Looking to rent a property?
Want us to manage the property?

PJP is the Answer

We got cash buyers

We got potential buyers looking to buy properties in all area.

Need properties urgently!

Now we are dealing with commercial mortgages and commercial properties.

Prince Joseph Properties
020 8518 0444

Our Fees & Service Hard to Beat

5 Central Parade Ley Street, Newbury Park, Ilford IG2 7DE
www.princejoseph.com sales@princejoseph.com

Investors Opportunity

Full Planning Permission has been granted for the conversion of this building to 24 residential units. No affordable housing requirement.

The Approved plans show a mix of 17 one bedroom apartments 6 two bedroom apartments and 1 three bedroom house with garden.

The building is situated in an established neighborhood with residential properties to the south and west. Leigh Road School is located to the east and the new heartlands park employment is located to the north. **£1.400,000**

Middleton Garden, Gants Hill

Big 3 bedroom Terrace House with Double Garage
Kitchen/Dinner, Off Street Parking, Fully Double Glazed, 2 Toilets. **£349,995**

Arthur Road, Eastham

4 beds Semi Detached, The property comprises of through lounge, kitchen/diner, first floor bathroom/WC, gas central heating, double glazing. **£249,995**

Gants Hill, Perth Road

Two flats, 2 Beds & 3 Beds plus studio, Attached Garage, Double Glazing, Gas central heating, Ideal for Gants Hill Station Opposite Valentines Park. **£449,995**

Newbury Park



3 Beds terraced, Offering vacant possession, Close to local amenities, easily accessible for public transport and A12 nearby primary schools. **£284,995**

Eastern Ave, Newbury Park

3 bedroom terraced, Offered with vacant possession is this 1930's property comprising of 2 receptions rooms, first floor bathroom, driveway to front. **£289,995**

Albemarle Garden Gants Hill

3 Bed end terrace, Spacious House, Extended, Through Lounge, First Floor bathroom, Fully Double Glazed, Chain free, Kitchen /Dinner. **£349,995**

Cranley Drive, Newbury Park

3 Bed End of terrace. Bathroom, central Heating, cloakroom, Garden, Hallway, Kitchen/Dinner, through Lounge, Shower Room, Off Street Parking, **£299,995**

Tiptree crescent, Clay Hall

3 bed Massenet, First floor apartment, Through Lounge, Garage, Shower/bath, Fully Double Glazed, Fully Fitted Kitchen, Wooden Flooring, **£204,995**

Eastern Ave, Newbury Park



Two Beds 3rd Floor, Reception, Gas Central Heating ,Fully Fitted New Kitchen Modern refitted Bathroom Double Glazed Security Entry phone System. **£194,995**

Romford Road, Manor Park

3 Bed Apartments, Bedroom one 12'2 x 10'1, Bedroom Two 12'9 x 9'4, Bedroom Three 10'9 x 9'1, Kitchen 15'8 x 9'4, Reception, Gas Central Heating, **£189,995**

Sparsholts Road Barking

2 Beds Mid Terrace, Fully Double Glazed,Gas Central Heating, Ground floor bathroom ,Near to Station, Rear garden 30f. **£199,995**

More Houses for Sale

Newbury Park	Springfield Drive	House	**£284,995**
Eastham	Outram Road	House	**£284,995**
Barking	Basing House	Flat	**£104,995**
Newbury Park	Aldborough Court	H/Flat	**£199,995**
Newbury Park	Whites Avenue	House	**£229,995**

PJP

புதிய களத்தில் கால் பதிக்கும் புலிகளின் இராஜதந்திர நகர்வுகள்

1958 இல் பண்டா

2008 இல் மஹிந்த

இதயச்சந்திரன்
(ஒரு பேப்பருக்காக)

ஒப்பந்த கிழிப்பு விவகாரங்களில், ஐம்பது ஆண்டு கால வரலாற்று அனுபவம் சிங்களப் பேரினவாதத்திற்கு உண்டு.

கண்டி, தலதா மாளிகைக்கு பாத யாத்திரை சென்ற ஜே.ஆர் குழுவினர், பண்டா- செல்வா ஒப்பந்தத்தினை எதிர்த்தனர்.

சிறிமாவோதலைமையில், கொழும்புவிஹார மாதேவி பூங்காவில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடாத்தி, டட்லி-செல்வா ஒப்பந்தம் கிழித் தெறியப்பட்டது. இவற்றைவிட இந்திய அழுத் தத்தால் மாகாணசபை கொண்டு வரப்பட்ட போது ஆட்சியில் இருந்தபடி பிரேமதாசா எதிர்த்தார்.

அரசியல் யாப்புத் திருத்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சந்திரிகா கொண்டு வந்த போது ரணில் கட்சி கடுமையாக எதிர்த்தது. தேசிய இன ஒடுக்குமுறைப் பிரச்சினைத் தீர்விற்கு, 1960 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானம் போன்று, அதாவது பிரிந்து போகும் உரிமை இல் லாமல், உள்ளக சுயநிர்ணய உரிமையை மட் டும் ஏற்றுக்கொள்ளும் குறைந்த பட்ச திட்டத்தைக் கூட, கடந்த ஆறு சுற்றுப் பேச்சு வார்த்தைகளிலும் சிங்களம் முன் வைக்கவில்லை.

சர்வதேச புரிந்துணர்வு உடன்படிக்கையை ரணில் கொண்டு வந்தார். அதைக் கிழித்தெறிந் துள்ளார் மகிந்த. பண்டா எழுதியதை ஜே.ஆர் அழித்ததும், டட்லி முன்வைத்ததை சிறீமா தூக்கி எறிந்ததும், ரணில் கைச்சாத்திட்ட காகிதத்தை மகிந்த கிழித்தெறிந்ததும், சிங் களப் பேரினவாதம் எதுவித தீர்விற்கும் உடன் படாது என்பதை இன்றும் உணர்த்துகிறது.

உலக வரலாற்றை எடுத்து நோக்கினால் கடந்த நூற்றாண்டில் 20இற்கு மேற்பட்ட தனியரசுகள் உருவாகியுள்ளன. அவை குறிப் பாக மேற்குலகின் ஆதரவுடனே தோற்றம் பெற் றன. ஸ்லோவாக் குடியரசு முதற்கொண்டு அண்மையில் விடுதலையடைந்த கிழக்குத் தீமோர், மொன்றிநீக்ரோ வரையான நாடுகள் அனைத்தும் இதனையே வெளிப்படுத் துகிறது.

மேற்குலகின் மீதான ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற அதிதீவிர பேரினவாதக் கட்சிகளின் வெறுப்புணர்வும், விமர்சனங்களும் வரலாற்றிலிருந்து பெறப்பட்ட விடயங்களின் பிரதிபலிப்பாகவே கருத வேண்டியுள்ளது.

ஆயுதம் வழங்கினால் நண்பர்கள், மனித உரிமை மீறல் பற்றிப் பேசினால் ஏகாதிபத் தியவாதிகள் என்கிற கூச்சலே பேரினவாதத் தின் இன்றைய தத்துவமாயிருக்கிறது. இன அழிப்புக் குரூரங்களை, நிறுத்தும்படி அழுத்திக் கூறும் சர்வதேச அமைப்புக்களை, வன்மையாகச் சாடுமளவிற்கு பேரினவாதக் கருத்துநிலை உச்சமடைந்துள்ளது.

பண்டா எழுதியதை ஜே.ஆர் அழித்ததும், ட்டலி முன்வைத்ததை சிறீமா தூக்கி எறிந்ததும், ரணில் கைச்சாத்திட்ட காகிதத்தை மகிந்த கிழித்தெறிந்ததும், சிங்களப் பேரினவாதம் எதுவித தீர்விற்கும் உடன்படாது என்பதையே இன்றும் உணர்த்துகிறது

மூன்றாம் தரப்பின் அனுசரணையின்றி தமக்குள் பேசி, ஆயுத மோதலின்றிப் பிரிந்து சென்ற செக், ஸ்லோவாக் குடியரசுகளின் தெளிவான பார்வையும், நிதான போக்கும் சிங்களத்திடம் இனியும் உருவாகுமெனக் கற்பிதம் கொள்வது தவறானதாகும்.

வெவ்வேறு தனித்துவத்தன்மை கொண்ட, நெடுங்காலமாக ஒரு ஆட்சியில் கீழிருந்த, செக்கும், ஸ்லோவாக்கும் 1993ஆம் ஆண்டு பேச்சுவார்த்தை ஊடாகப் பிரிந்து சென்றன.

மத்திய ஐரோப்பாவின் ஐந்து நாடுகளில் ஒன்றான செக்கோஸ்லோவாக்கியா, ஐ.நா. சபை ஏற்றுக்கொண்ட சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், இரத்தம் சிந்தாமல், ஜனநாயக பூர்வமாகப் பிரிந்தது போன்ற நிலை சிறீலங் காவில் ஏற்படுமென கனவு காண்பவர்கள் மகிந்தரின் ஒப்பந்தக் கிழிப்போடு விழித்திருப்பார்கள்.

சிங்களமானது, எண்ணிக்கையில் பெரும் பான்மை வகிப்பை வைத்துக் கொண்டு, தன க்குத் தான் அதிகப்படியான தேசிய உரிமை இருக்கிறதென வாதிடுகிறது. இவ்வகையான பேரினவாதப் போக்கு நீடிக்கும் வரை, சுய நிர்ணய உரிமைக் கோட்பாடானது, ஒரு முற்போக்குப் பாத்திரத்தையே வகிக்கும்.

யுனெஸ்கோவினால் 1998 நவம்பர் மாதம், ஸ்பெயினிலுள்ள பாசிலோனோவில் நடாத்தப் பட்ட சுயநிர்ணய உரிமை தொடர்பான நிபுணர் களின் மாநாட்டில், தேசியங்களை உடைப் பதற்கு பதிலாக, அவர்களிடையே நிலவும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான அடிப்ப டையை வழங்கி, பிணக்குகள் ஏற்படுவதை தடுக்க, 'சுயநிர்ணய உரிமை' உதவுமென்ற முடிவு எடுக்கப்பட்டது.

ஆயுதம் வழங்கினால் நண்பர்கள், மனித உரிமை மீறல் பற்றிப் பேசினால் ஏகாதிபத்தியவாதிகள் என்கிற கூச்சலே பேரினவாதத்தின் இன்றைய தத்துவமாயிருக்கிறது

ஆயினும் சுயநிர்ணய உரிமைக் கருத்தானது விடுதலை கோரும் அரசுகளுக்கும், கொலனி களிற்கும் உரித்தானதொன்றெனவும், தேசிய சமூகங்களுக்கு அவை உரித்துடையதல்ல என்கிற நிலையே ஐ.நா.சபையில் இற்றை வரை மேலோங்கியுள்ளது.

இதன் தோற்றுவாயாக, 1960ஆம் ஆண்டு டிசெம்பர் 14ஆம் திகதி ஐ.நா. சபையில் நிறை வேற்றப்பட்ட தீர்மானமொன்றை எடுத்துக் காட்டாக கூறமுடியும்.

'பிரதேச உரிமையும் (அதாவது தாயகக் கோட்பாடு), பிரிந்து சென்று அரசமைக்கும் உரிமையும் மறுக்கப்படுவதோடு, தேசிய ஐக்கியத்தையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் சீர்குலைக்க முனையும் எந்தவொரு முயற்சி யும், அது எந்த வடிவமமைந்த போராட்ட மாகவிருந்தாலும், ஐ.நா.சபை சாசனத்திற்கு முரணானது எனப் பிரகடனப்படுத்தப்பட்டது.

அதாவது பிரிந்து செல்லும் உரிமையை முற்றாக நிராகரிக்கிறது. உதாரணமாக, ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு, நைஜீரியா விலிருந்து பயாப்ரா (Biafra) பிரிந்து செல்வதையும், கனடாவிலிருந்து கியுபெக் (quebec) மாநிலம் பிரிவதையும் ஏற்க மறுத்து விட்டது.

யூகோஸ்லாவியா, ருவண்டா போன்ற தேசங்களில் நிகழ்ந்த யுத்தக்குற்றச்செயல்கள் தொடர்பான சர்வதேச நீதிமன்ற விசாரணை களில், அதன் தலைவராக, பேராசிரியர் 'அன்ரானியோ கசாசே' (Antonio Cassese) செயற்பட்டதனை சகலரும் அறிவார்கள்.

அவர் எழுதிய மக்களின் சுயநிர்ணய உரிமை (Self Determination of People) என்ற நூல், தேசிய விடுதலைப் போராட்ட அரசியல் சார் கருத்துநிலையோடு முரண்படுவதாக, பொதுவான விமர்சனம் ஒன்று உண்டு.

தமக்குள் பேசி, ஆயுத மோதலின்றிப் பிரிந்து சென்ற செக், ஸ்லோவாக் குடியரசுகளின் தெளிவான பார்வையும், நிதான போக்கும் சிங்களத்திடம் இனியும் உருவாகுமெனக் கற்பிதம் கொள்வது தவறானதாகும்.

அதாவது இரண்டாம் உலக மகாயுத்த காலத் தில் காணப்பட்ட கொலணிகளுக்கு மட்டுமே பிரிந்து செல்லும் வெளியக சுயநிர்ணய உரிமை உண்டென்றும், நாட்டுக்குள் வாழும் தேசி யங்கள் பிரிந்து செல்லாமல், உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டு அடிப் படையில், தமது அரசியல் பொருளாதார நிலை மைகளை, சுயவிருப்பத்திற்கேற்றவாறு அமைத்துக் கொள்ளலாமென்பதே 'அன்ரா னியோ கசாசே' வின் வாதமாக அமைகிறது.

அவ்வாறான நிலைமை உருவாகும் சாத்தி யப்பாடுகள் இல்லாவிட்டால், பிரிந்து செல்லும் உரிமை அத்தேசிய இனத்திற்கு உள்ள தென்பதை இவர் வலியுறுத்தவில்லை. 1970ஆம் ஆண்டு ஐ.நா.பிரகடனமானது, ஒரு அரசின் பிரதேச ஒருமைப்பாட்டு உரிமையை உறுதிப் படுத்துகிறது. ஆனால் ஒரு சிறுபான்மையின மக்களை, அடக்குமுறைக்கு உள்ளாக்கும் பொழுது, பிரிவினைக்கு இடமளிக்கும் விதி விலக்காக. ஒரு அரசு . தனது பிரதேச ஒருமைப்பாட்டு உரிமையை இழக்கிறது என்ப தையும் தெளிவாக முன் வைத்திருக்கிறது.

கனேடிய உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப் பொன்றில், ஒரு மக்கள் சமூகம், தனது உள்ளக சுயநிர்ணய உரிமையை அர்த்த பூர்வமான முறையில் அடைவதற்குத் தடை ஏற்படுமா யின், இறுதி வழிமுறையாகப் பிரிந்து செல் லும் உரிமையைப் பிரகடனம் செய்ய, அம் மக்களுக்கு உரிமையுண்டெனக் குறிப்பிட்டிருந் ததை நோக்க வேண்டும்.

இது பற்றி தேசத்தின் குரல் பாலா அண்ணன் அவர்கள் தனது நூலொன்றில் குறிப்பிடுகையில், 'எமது நியாயமான விடு தலைப் போராட்டத்திற்கு, சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தை நாம் பெறுவதாயின், ஐ.நா.சாசனங்களுக்கு இசைவாக, எமது போராட்டப் பாதையை நெறிப்படுத்துவது காலச் சிறந்ததென' விளக்கமளித்துள்ளார்.

இத்தகைய சர்வதேச நியமங்களையும், அதன் சுயநிர்ணயம் குறித்த கோட்பாடு களையும் தெளிவாகப் புரிந்து கொண்ட விடுதலைப் புலிகள், அத்தனைப் பரிமா ணத்தை நிராகரிக்காமல், சர்வதேச மத்தியஸ்த பேச்சுவார்த்தைகளில் கலந்து, உள்ள சுய நிர்ணயம் சிறீலங்காவில் சாத்தியமற்றதென நிறுவ முற்பட்டார்கள்.

(தொடர்ச்சி 16ம் பக்கத்தில்)

Ohm Sri Vanadhurga Sakthi Jothidam
ஓம் ஸ்ரீ வனதுர்க்கா சக்தி ஜோதிடம்
குருஜி கிருஸ்ண பண்டித் சாஸ்திரி

இந்தியாவில் ஸ்ரீகாகுளம் மாவட்டம் அருகில் உள்ள அதி பயங்கர வனத்தில் மூன்று குருமார்களிடத்தில் 5 வயது முதல் கானகத்தில் கடும் விரதம் இருந்து கடும் பயிற்சி செய்து 10 வருடங்கள் ஜோதிடம், வாஸ்து, குரு மந்திரங்கள் மூலம் பில்லி சூனிய திவரத்தி ஆகியவைகள் கற்று இந்தியாவில் பல பிரபலங்களுக்கு ஜோதிடம் பார்த்து அவர்கள் பெரிய பதவியை அடைந்துள்ளார்கள். பல நாடுகளுக்குச் சென்று வியாபார நோக்கு இல்லாமல் சேவை மனப்பான்மையுடன் மக்களுடைய பிரச்சனை களைத் தூர்த்து வருகின்றார்.

உத்தியோக பிரச்சினை, குடும்ப உள் விவகாரம், நிதி நிலை விவகாரம், கோர்ட் விவகாரம், எதிரிகள் தொல்லை, விசா பிரச்சினை, வியாபார முன்னேற்ற மின்மை, பில்லி சூனியம், மற்றும் எல்லாவித பிரச்சனைகளையும், மூலிகை மருந்து மூலமும், ஆயுர்வேத மருந்து மூலமும், டாக்டர்கள் குணப் படுத்த முடியாத வியாதிகளையும், மனப்போராட்டங் களைப் போக்கச் செய்வார்.

இவர் பல நாடுகளுக்குச் சுற்றி இலண்டனுக்கு வந்துள்ளார். சில காலமே இங்கு வசிப்பார். அதற்குள் நீங்கள் அவரைத் தொடர்பு கொண்டு உங்கள் பிரச்சனைகளைக் கூறிப் பரிகாரம் தேடுங்கள்.

திருமண பொருத்தம் பார்த்துக் குறிப்பு கொடுக்கப்படும்.

Mob: 07506 126 801
07918 808 772

Opening Hours: 9-30 am to 7-30 pm
One Stop Bargain Shop
218 High Street, East Ham, E6 2JA
(Near East Ham, UG Station)

புதிய களத்தில் ...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் ஆறு வருடகால நெகிழ்வும், நிதானமும், வெளியக சுயநிர்ணயம் குறித்து சிந்திக்க வேண்டிய நிலைக்கு சர்வதேசத்தை இன்று இட்டுச் சென்றுள்ளது.

இதனையே உள்ளகம், வெளியகம் என்கிற இரு அம்சங்களை சர்வதேச கட்ட நியமங்களிற்கு இசைவாக நுட்பமாகக் கையாண்டார் தேசியத் தலைவரென பாலா அண்ணன் 'போரும் சமாதானமும்' என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

2002 மாவீரர் தின உரையில் தேசியத் தலைவர் கூறிய விடயமொன்று இன்றைய காலகட்டத்தில் நினைவில் கொள்ள வேண்டிய முக்கிய கருத்தாக அமைகிறது.

எந்த விதமான மேலாதிக்கத்திற்கும் அடிபணிந்து, ஒரு தீர்வினை, புலிகள் ஏற்று, சரணாகதி அடையவில்லை

உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில், எமது தாயக நிலத்தில், எமது மக்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய பூரண சுயாட்சி அதிகாரத்துடன் ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டால், நாம் அத்திட்டத்தை சாதகமாக பரிசீலனை செய்வோமென அழுத்தமாகக் கூறியதோடு, ஆனால் அதேவேளை, எமது மக்களுக்கு உரித்தான உள்ளக சுயநிர்ணயம் மறுக்கப்பட்டு, பிரதேச சுயாட்சி உரிமை நிராகரிக்கப்பட்டால் நாம் பிரிந்து சென்று தனியரசு அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை" என்று உறுதிபடக் கூறினார் தேசியத் தலைவர்.

அதே வேளை தற்கால அரசியல் அறிவுலகில் சரவதேச சட்டங்களிலும் ஆழமான பார்வை இல்லாத காரணத்தால் எழுந்த தவறான ஆய்வு விமர்சனங்கள், உள்ளக நிர்ணயம் பற்றிய புலிகளின் கருத்தாய்வு நிலைப்பாட்டை திரிபுபடுத்தின.

ஏதோ, சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டைக் கைவிட்டு சமஷ்டிக்குள் சறுக்கி விழுந்துவிட்டதாக தப்பான வியாக்கியானங்கள் நிறைந்த பரப்புரை சமரொன்றை அக்காலத்தில் உருவாக்கியிருந்தது.

அவ்வகையான உள்ளகம் பற்றிய தீர்வு குறித்து ஆராய்வதற்கோ, பேச்சுவார்த்தையில் தீர்மானம் மேற் கொள்ளப்பட்டதாக பாலசிங்கம் அவர்கள் மிகத் தெளிவாகத் தனது நூலில் விளக்கமளிக்கிறார்

ஆகவே எந்த விதமான மேலாதிக்கத்திற்கும் அடிபணிந்து, ஒரு தீர்வினை, புலிகள் ஏற்று, சரணாகதி அடையவில்லையென்பதையே சமகால அரசியல் தெளிவாக்குகின்றது.

இந்தபோராட்டவரலாற்றினை,மீள்நினைவுகொள்ளும் இவ்வேளையில், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை வழியனுப்பி வைத்த விடுதலைப் புலிகளின் அரசியற்துறைச் செயலாளர் பா. நடேசன் அவர்கள், விடுத்த அறிக்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகக் கருதப்படுகின்றது.

சர்வதேச, பிராந்திய சூழலிற்கு ஏற்றவாறு இராசதந்திர வியூகத்தை மாற்றியமைத்த விடுதலைப் புலிகள், வெளியக சுயநிர்ணயக் கோட்பாட்டிற்கு நகரப் போவதன் முதற்படி நிலையாக இவ்வுரையைக் குறிப்பிடலாம்.

அரசானது, ஒப்பந்தத்தை 100 வீதம் சரியாகக் கடைப்பிடித்தால் மறுபடியும் நோர்வே தலைமையில் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயாரென நடேசன் கூறியதை சிந்தனையின் உச்சத்திலிருக்கும் மகிந்தருக்கு வைக்கப்பட்ட பொறியாகக் கணிப்பிடலாம்.

அதேவேளை எதற்கும் உடன்படாமல் சிங்களம் இன அழிப்பினை தொடருமாயின், தடைகளை நீக்கி, தனியரசை அங்கீகரிப்பதே சர்வதேசத்தின் ஒரே தெரிவாக இருக்க வேண்டுமென வேண்டுகோளும் விடுக்கப்பட்டுள்ளது. ஆகவே தனியரசு நோக்கிய அடுத்த கட்ட நகர்வுகளை, புதிய இராசதந்திர வியூகங்களோடு, தமிழர் தலைமை மேற்கொள்ளுமென்பதை திடமாக நம்பலாம்.

அதில் புலம் பெயர் தமிழ் மக்களின் அறிவுப்பலமும், சகல வளங்களும் திரட்சியுற்று விடுதலையை விரைவாக்க வேண்டும். சர்வதேச சமூகத்தினை எமக்குச் சார்பாக மாற்றும் வரலாற்றுச் சக்தி, மக்கள் பலம் என்பதனை எரித்திரியா, கிழக்கு தீமோர் போன்ற விடுதலை பெற்ற நாட்டு மக்கள் எமக்கு உணர்த்தியுள்ளனர்.

பழங்கள்ளு

பண்டைய இலக்கியக் காட்சி

வழுதி

(ஒரு பேப்பருக்காக)

நமது இலக்கியங்களில் காணும் சில காட்சிகளை வாசகர்களுடன் பகிரும் பத்தி இது.

போட்டாளே வேலையற்றுப் போய்

கி.பி. 15ஆம் நூற்றாண்டு காலம். வசைக்கவி காளமேகப் புலவர், பட்டப்படு பகலில் சுடு வெய்யிலில் கொலைப்பட்டினியோடு நடக்கிறார். பசி தாங்க முடியாமல் ஒரு அன்னச்சத்திரத்தை கண்டவுடன் உள்ளே நுழைகிறார்.

சாப்பாடோ வந்தபாடில்லை. மத்தியானச் சாப்பாட்டுக்கு அத்தமிக்கும் போதில் அரிசி வரும் அதாவது பொழுபட அரிசிவரும். பிறகு சோறாக்கி 'ஓர் அகப்பை ..... இலையிட வெள்ளி எழும்' அதாவது இலையில் சோற்றைப் போட வெள்ளி காலித்துவிடுமாம். மத்தியானச் சோறு சாப்பிடுகிற நேரம் விடிவெள்ளி எழும்புகிறது.

இப்படிக் கடும்பசியுடன் காளமேகப் புலவர் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். காளமேகப் புலவரின் இலைக்கு எதிராக இன்னொரு இலை வைத்து சோழநாட்டுப் பிராமணர் ஒருவரும் சாப்பிடுகிறார். சோழநாட்டுப் பிராமணர் குடும்பியை தலையின் பின் பக்கம் கட்டாது, நெற்றியில் கட்டுவார்கள்.

அந்தப் பிராமணரும் கடும் பசியுடன் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். இந்த நேரம் பார்த்து பிராமணரின் குடுமி அவிழ்ந்து அவரது சோற்றில் விழுகிறது. சாப்பாட்டுக் கையுடன் குடுமியை எடுக்க ஏலாது. எனவே பிராமணர் தலையால் எத்தி குடுமியைப் பின்னுக்குக் கொண்டு வாறார்.

சோற்றில் தோய்ந்திருந்த முடி எத்துப்பட்டதில், பிராமணர் உண்ட சோற்றின் எச்சங்கள் காளமேகப் புலவரின் சோற்று இலையில் வந்து விழுகிறது.

கடும் பசியுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்த காளமேகப் புலவருக்கு கடும் கோபம் வருகிறது. இனிச் சாப்பிட முடியாதே என்ற கோபம். வெண்பாவில் வசைக்கவி எழுதுகிறார்:

'சுருக்கவிழ்ந்த முன்குடும்பிச் சோழியா சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா புலையா – செருக்குற்ற
கோட்டானே நாயே குரங்கே உனை ஒருத்தி
போட்டாளே வேலை அற்றுப் போய்'

Your Gateway to British Education

Your Trusted British Education Consultants for Over 9 Years!

We welcome students from both Sri Lanka and India

Enrol **Now** for Jan/Feb/April 2008 In-take

Knowledge Management Systems (Pvt) Ltd

KMS has grown popular over the years, providing friendly and correct guidance to its clients. The key to the success is the trust and goodwill among the different societies, **KMS** serves.

Fully trained staff, provide the necessary guidance, realising your aspirations and needs. This is done in absolute privacy and care that lead to the necessary confidence.

This service is very useful.

Knowledge Management Systems has its officers in **London, Sri Lanka and India.**

Services provided include

- Choosing a Course and Institution
- Application Process
- UK Visa procedures and guidance
- Life in the UK (living, accommodation, part-time work etc)
- Pre-departure assistance
- Assistance on arrival in the UK



SRI LANKA

Knowledge Management System (P)Ltd.,
No. 32, Hampdan Lane,
Colombo-06,

Tel: +94 (0)112 236 5530, +94 (0)112 553 106
Fax: +94 (0)112 365 529

Email: *colombo@britishstudylink.com*

UK

Knowledge Management System (P)Ltd.,
5 Station Chambers, Station Parade,
London – E61JD

Tel: +44 (0)208 821 0107 Mob: +44 (0)79 0503 8050
Fax: +44 (0)208 552 2949

Email: london@britishstudylink.com

INDIA

KMS Educational Consultants (P) Ltd.,
Siena Circle, 14, Second Floor, 29/2, Durai Samy Road,
T.Nagar, Chennai 600017,

Tel: +91 (0)44 6458 6061/62
Mob: +91 (0)99 416 770 65

Email: chennai@britishstudylink.com

தமிழ்ச் சாதி

'தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கோர் குணமுண்டு'

என்று நாமக்கால் இராமலிங்கம்பிள்ளை கவிதை எழுதி விட்டுப் போய்விட்டார். என்ன அர்த்தத்தில் இப்படி எழுதினார்? கிண்டலா, கோபமா, புகழாரமா, புளுகா?

'அமிழ்தும் அவனது மொழியாகும்
அன்பே அவனது வழியாகும்'

என்று மீதி இரண்டு வரிகளை எழுதிவிடுகிறார். அப்படியெனில் தமிழரைப் புகழ்கிறார் என்று அர்த்தம்.

பாரதியார் வேறுமாதிரிச் சொல்கிறார். அவருக்கு தமிழ்ச் சாதியின் மீது கடுங்கோபம்.

'விதியே விதியே தமிழ்ச்சாதியை
என் செயக் கருதியிருக்கிறாயெடா'

பாரதியார் கோபம் வேறு மாதிரியும் வெளிப்படுகிறது.

'தமிழ் மக்கள் எருமைகளைப் போல்
ஈரத்திலேயே நிற்கிறார்கள்'

இந்த வசன கவிதையில் 'எருமைத் தமிழர்' என்று தமிழரை வைது விடுகிறார் பாரதியார்.

பாரதிதாசனைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். தமிழ் இனிமை, தமிழ் உயிர். தமிழை அழிப்போரை சங்காரம் செய்வார். ஈழத்துப் பக்கம் திரும்பிப் பார்த்து எந்தன் தோள்களெல்லாம் பூரிக்குதெடா என்று பாடுகிறார். பாரதிதாசன் தமிழ் வீறு கொண்ட கவிஞர்.

பண்பாடு மிக்க மொழி தமிழ். பண்பாடு மிக்க இனம் தமிழர். இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே கணியன் பூங்குன்றனார் ஒரு கவிதை பாடி விடுகிறார்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தரவாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன
சாதலும் புதுவதன்றே வாழ்தல்
இனிதென மகிழ்வதும் இலமே முவிவின்
இன்னாதென்றலும் இலமே
காட்சியில் தெளிந்தனம் ஆதலின் மாட்சியில்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே'

இதன் பொருளைச் சொல்வதென்றால்:- எல்லா ஊர்களும் நமது ஊர்கள். எல்லோரும் நமது உறவுகள். நன்மையும் தீமையும் நாமே உண்டாக்குவது அன்றி பிறர் தர வராது. அவ்வாறு நோவும், அதன் தீர்வும் தாமே வருவன. சாவும் புதியதல்ல. வாழ்வு இனிமை என்று மகிழ்வதும் இல்லை. விரக்தி வந்தபோது கொடுமை என்று வெறுப்பதும் இல்லை. நம்மை நாமே தெளிவாக உணர்ந்து கொண்டோம். அதனால் இவர் 'பெரிய ஆள்' என்று ஒருவரைப் போற்றிப் புகழ மாட்டோம். அதைத்தான் சிலவேளை செய்தாலும் சிறியோரை இகழ்தல் என்பதை ஒருபோதும் செய்யோம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இப்படி ஒருகவிதை. இந்த வளம் எங்கிருந்து வந்தது? நல்ல நீர் தந்து மண்ணில் வளமேற உரமிட்டோம். அதனால் வந்தது. பாரம்பரியமிக்க நமது பண்பாட்டிலிருந்து ஊற்றெடுத்துச் சுரந்து உடைப்பெடுத்துப் பெருகியது.

'பெரியோரை வியத்தல் இலமே
சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே'

என்று இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே பாட வேறெந்த சமூகத்தால் முடிந்திருக்கிறது?

இரண்டாயிரம் வருடம் கழிந்தும் கூட இந்த வரி வேறொரு வடிவில் வருகின்றது. அதைத் தருகிறார் புதுவை இரத்தினதுரை.

'நமக்கு மேலும் ஒருவர் இலர்
நமக்குக் கீழும் எவரும் இலர்'

நமது தேசியத் தலைவரை தமது தலைவராக ஏற்றுக் கொண்டவர் புதுவை இரத்தினதுரை அவர்கள். அவர் எங்ஙனம் இவ்வாறு பாடுதல் முடியும்? நமக்கு மேலும் ஒருவர் இலர்?

இரவி அருணாசலம்

எழுதுவது என்னவெனில்

புதுவை இரத்தினதுரையை என்னால் புரியமுடிகிறது. வீரச் செயல், இலட்சிய உறுதி, விட்டுக் கொடுக்காத துணிவு, விலைபோகாத உணர்வு என்று இன்னோரன்ன தகுதிகள் கண்டதால் தலைவராக ஏற்றுக் கொள்ளத் தயங்கியதில்லை.

அதேநேரம் தகுதிகாண் தலைவன் ஆயினும் தோழமை பூண்டு தோழனாய்க் கொள்ளும் பக்குவமும் இருக்கிறது. அது தமிழ்ப்பண்பாடு சொல்லித் தந்த ஒன்று. யாரினது காலிலும் விழோம், யாரையும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடவும் மாட்டோம்.

கணியன் பூங்குன்றனாரின் கவிதையை நம்மூர்க் கவிஞர் சிவசேகரம் இப்படிப் மாற்றிப் பாடுகிறார்.

'நமக்கு நாமே பகையென ஆனோம்
ஆதலினால்
எம்மூர் தவிர்ந்த யாதும் ஊரே
எம்மவர் தவிர்ந்த யாவரும் கேளிர்'

விரக்தியின் விளிம்பில் நின்று சிவசேகரம் இப்படிப் பாடுகிறார் போலும். 'எங்கன்ரை சனம் திருந்தாது' என்று சொல்வோர் போன்றோரின் வரிகள்தாம் இவை.

இவ்வாறு தான் ஞானக்கூத்தன் என்ற கவிஞர் பாடுகின்றார்

'எனக்கும் தமிழ்தான் மூச்சு
ஆனால் அதை
பிறர்மேல் விடமாட்டேன்'

இக்கவிதை வரக் காரணம் என்ன?

தமிழ்தான் மூச்சு என்று சொல்கின்ற தமிழுணர் வாளர்களுக்கு வைத்த கிண்டல்தான் இவ்வரி. தமிழ் தமிழ் என்று கத்துகின்ற போலிகளும் இருக்கின்றனர். உண்மையில் இயங்குகின்ற தமிழ் உணர்வாளர்களும் இருக்கின்றனர்.

அது ஒரு புறம் இருக்கட்டும். நாம் தமிழர் என்பதில் சிறுமைப்பட ஏதுமில்லை. பெருமைப்பட நிறைய இருக்கின்றது. நம்மை நாமே தூற்றுவதும், பழிப்பதும் நமது தாழ்வுச் சிக்கலேயன்றி வேறேதும் அல்ல. கொஞ்சம் கூர்ந்து கவனிப்போமாயின் எம்மிடம் என்ன குறைபாடுகள், பலவீனங்கள் இருக்கிறதோ, அதேமாதிரி அல்லது வேறுமாதிரி ஏனைய சமூகங்களிலும் குறை பாடுகள், பலவீனங்கள் உள்ளதை நாம் காணலாம்.

நமது பண்பாடு மேன்மையானது. அதேசமயம் ஏனைய சமூகங்களின் பண்பாடுகள் இழிவானதொன்றல்ல. எனவே எம்மை நாமே தாழ்த்திக் கொள்வதைத் தவிர்ப்போம்.

தமிழர் என்று சொல்வோம்
தலை நிமிர்ந்து நிற்போம்.

எரிபொருட் தட்டுப்பாடும் தாவரங்களும்

சி.மாசிலாமணி
(ஒரு பேப்பருக்காக)

எத்தனை ஆயிரம் பீப்பா பெற்றோலிய எண்ணை உற்பத்தியாகிறது என்பதை வைத்தே பல நாடுகளின் வளம் கணிக்கப்படுகிறது. விரைவில், ஒபெக் நாடுகள் என்று அழைக்கப்படும் இந்த எண்ணை உற்பத்தி நாடுகளின் எண்ணிக்கை குறையப் போகின்றது.

அதாவது பல நாடுகளின் எண்ணைக் கிணறுகள் வற்றப்போகின்றன. இதனால் உலகின் எரிபொருட் தேவையை ஈடு கொடுக்க பெற்றோலியப் பொருட் களுக்குப் பதிலாக வேறு பொருட்களோ அல்லது வேறு வழிவகைகளோ கையாளப்பட வேண்டும்.

அணுசக்தி, சூரிய வெப்பம், கடல் அலைகள், காற்றாடிகள், நீர் மின்சாரம், நீர்வாயு என்று பல வழிவகைகள் கையாளப் படுகின்றன. அணுசக்தி, சூரிய வெப்பம் ஆகிய இரண்டுமே எவ்வளவோ சக்தியை தர வல்லவை. ஆனாலும் இன்றைய சூழலில் இவற்றுள் எதுவுமே பெற்றோலியப் பொருட் தட்டுப் பாட்டுக்கு ஈடு கொடுக்கக் கூடியவை என்று சொல்லும் நிலையில் இல்லை.

1892ல் டீசல் இயந்திரங்களைக் கண்டு பிடித்த ஜெர்மனியரான றுடொல்வ் டீசல், இந்த டீசல் இயந்திரங்கள் தாவர எண்ணையிலும் ஓடக்கூடியவை என்று அன்றே கூறியிருந்தார். அவர் ஆய்வு தொடரவில்லை. காரணம் தாவர எண்ணை யின் விலையிலும் எவ்வளவோ குறைந்த விலையில் டீசல் கிடைக்கக் கூடியதாக இருந்தது.

இன்று இரு காரணங்களுக்காக அந்த ஆய்வு தேவைப் படுகிறது. ஒன்று தாவர எரிபொருள்களின் விலையிலும் பெற்றோலியப் பொருள்களின் விலை அதிகரிக்கப் போகின்றது. அடுத்தது தாவர எரிபொருள்களால் சூழல் மாசுபடும் விகிதம் பெருமளவு குறையும். தாவர எரிபொருள் என்றால் இரு வகைப்படும்.

1. தாவர எண்ணையை நேரடியாகவோ அல்லது டீசலுடன் கலந்து உபயோகிப்பது.
2. தாவரங்களின் செல்லுலொஸ் என்னும் வைரநார்ப் பகுதியை நொதிப்பு மூலம் எதநோல் அல்லது மெதனோல் ஆகிய திரவங்களாக மாற்றுதல்

தாவர எண்ணையை நேரடியாகவோ அல்லது டீசலுடன் கலந்து உபயோகிப்பதை ஆங்கிலத்தில் றேப்சீட் என்று அழைப்பர்.

இதற்கு ஒருவகை கோவா இனப் பயிரின் விதையிலிருந்து பெறப்படும் எண் ணையே சிறந்தது. அடுத்து சூரியகாந்தி விதை எண்ணையைச் சொல்லலாம். வீடுகளில் உபயோகித்த எண்ணையைக்கூட உபயோகிக்கலாம்.

மற்றைய வகை தாவரங்களின் செல்லுலொஸ் என்னும் வைரநார்ப் பகுதியை நொதிப்பு மூலம் எதநோல் அல்லது மெதனோல் ஆகிய திரவங்களாக மாற்றுதல். இந்த எதனோலும் மெதனோலும் டீசலுக்கு இணையான எரி பொருள்கள்.

இதற்கு வைக்கோலில் இருந்து நகரங்களின் மரக் கழிவுகள், மரம் அரியும் ஆலைகளிலிருந்து பெறப்படும் மரத் தூள்கள், இதற்காக வளர்க்கப்படும் மரங்கள் என்று பலவற்றை உபயோகிக்கலாம்.

எவ்வளவு தூரத்திற்கு இந்த தாவர எரிபொருள், பெற்றோலியப் பொருள்களின் தட்டுப்பாட்டிற்கு ஈடு கொடுக்கும் என்பதற்கான தரவுகள் அடுத்த ஐந்து ஆண்டுகளில் திட்டவட்டமாகப் புரியும். தேவை காரணமாக அவ்வளவு வேகத்தில் ஆய்வுகள் உந்தப்பட்டுள்ளன.

இது எதில் போய் முடியும் என்ற பயமும் ஆய்வாளர் மத்தியில் இல்லாமல் இல்லை. பாரிய காடுகள் இந்தத் தேவைக்காக அழிக்கப்படுவதைத் தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் படாவிட்டால் நிச்சயம் ஆபத்துத்தான்.

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்,
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.

ஒரு பேப்பர்

SRI ATHIPARASAKTHI ASTROLOGY CENTRE
Specialist in all kinds of Astrology
Face Reading & Palm Reading

1ST FLOOR 49 HIGH STREET
EAST HAM, LONDON, E6 1 SH (NEAR PRIMARK STORE)
Opening Hours: Opening Hours 10a.m – 7 p.m 7 Days a week

Call:
S.P. SRIRAM GURJI
AADIVASI MUKKIYA
on 07918 808 855 / 01506 933 790

இந்தியாவில் இருந்து முதன் முறையாக வருகை தந்துள்ள ஆதிவாசி எஸ்பி. சிறீராம் குருஜி அவர்கள் ஆதிபராசக்தி அருள் கொண்டு கைரேகை மூலமும் முகநாடி மூலமும் துல்லியமாக நடந்தவை நடக்கின்றவை நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள் கணவன் மனைவி ஒற்றுமை, காதல், கைரேகை, திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், விசா, லாட்டரி, தொழில், வியாபாரம், லட்சுமீகர விடயம், கண் திருஷ்டி, கோட், வழக்குகள், வாகனப் பொருத்தம், தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும். ஆயுர்வேத மருந்துகள் வழங்கப்படும். கல்லீரல், ஆஸ்த்மா, குடல் புண், நீரிழிவு மற்றும் அனைத்து நோய்களுக்கும் மருந்து வழங்கப்படும்.

S.P. SRIRAM GURJI
AADIVASI MUKKIYA
on 07918 808 855
01506 933 790
Spoken languages: Tamil, Telugu, Hindi, karnada & English.

பொங்கலோ பொங்கல்

தைத்திருநாள், தமிழர் திருநாளாக பொங்கும் மங்களம் எங்கும் துலங்கிய அந்த நாட்கள். நினைத்தாலே நெஞ்சம் இன்றும் இனிக்கின்ற நாட்கள்.

வசதிபடைத்தவர் முதல் வறுமையில் தவித்தவர் வரை கொண்டாடியதைப்பொங்கல். வடக்கு, கிழக்கு, மலையகம் முதல் தமிழர் வாழந்த சகல ஊர்களிலும் தைப்பொங்கல் என்றால் கொண்டாட்டம்தான்.

மாரி மழைக்கு வெள்ள வாய்க்கால் நிரம்பி வழிந்தோடிய வெள்ளம், ஒழுங்கை, வளவு, குப்பை கூழங்களை ஒதுக்கி துப்பரவாக்கி இருக்கும். கிணற்றுக் கட்டில் குனிந்து கிணற்றில் நீர் அள்ளக் கூடிய அளவுக்கு மாரி மழைக்கு கிணறுகளும் நிறைந்திருக்கும்.

மழையும் குளிரும் ஓய்ந்து மூடுபனியை விலக்கி சூரியக் கதிர்கள் விரியத் தொடங்குகின்ற காலம். வெள்ளம், மழையால் தலை கவிழ்ந்து தளர்ந்திருந்த கதிர் கனத்த நெற் பயிர்கள் முதல், தண்டுகள் தாவரங்கள் எல்லாமே சோம்பல் முறித்து சிலிர்த்து எழும்புகின்ற நாட்கள்.

காலைப்பனித்துளியை தலை நுனியில் பளிங்குத் தொப்பியாகத் தாங்கி நிற்கும் புற்களுக்குக் கூட அந்த நாள் என்றால் ஒரு மிடுக்கு. மாரிக் குளிரின் தாய் அணைப்பில் கருவாகி பொரித்த குருவிக் குஞ்சுகளின் களிப்போசை சேவல்களின் கூவல்களோடு பல்லின ராகம் பாடும் காலைகள் விடிகின்ற காலம்.

யானைமார்க் சீன வெடி, பூரிஸ், ஈக்கில் வாணம் என்று தைப்பொங்கல் வரவுக்கு வெடியோசைகள் முன் கூட்டியே கட்டியம் கூறும்.

கூப்பன் கடைகளிலும் பச்சை அரிசி, சர்க்கரை, பயறு, முந்திரிகை, கஜூ என பொங்கல் சாமான்கள் பங்கீட்டில் மலிவு விலைக்கு வரும்.

மாட்டு வண்டிலில் பொங்கல் பானைகள் வீதி வீதியாக விற்பனைக்கு வரும். வண்டில் குலுக்கலில் பானைகள் உடையாமல் வைக்கோலை அணை அணையாய் செருகியபடி வண்டில் வருவதும் ஒரு அழகுதான்.

பொங்கலுக்கு என்று வளவுக்குள் கிடங்கு வெட்டி வாழைக் குலை பழுக்கப் போடுவதும், காலை மாலை என்று ஒரு மூலைக்குள் தாழ்பட்டிருக்கும் முட்டி ஓட்டைக்குள்ளால் புகை ஊதுவதும் அந்த நாட்களில் சிறுவர்களுக்கு ஒரு ஆரவாரமான வேலை.

யாழ்தேவி, மெயில் புகைவண்டிகள் கொழும்பு உத்தியோகத்தர்களை பொங்கலுக்கு முன்பாகவே தொகை தொகையாகக் கொண்டு வந்து இறக்கும். ஊரெங்கும் ஆரவாரம்.

வெடிச்சத்தங்களுக்கு நாய்களும் ஒதுங்கி ஓடிவிடுவதால் அவற்றின் கடிபிடி இழுபறிச் சத்தங்கள் அந்த நாட்களில் கேட்காது.

ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

சந்தைகள் சன சந்தடியில் நிறையும். கடைகளும் பொங்கல் சாமான் விற்பனையில் களைகட்டும். வளவில் குப்பை கூழங்களை கூட்டிக் குவித்து எரிப்பதும் வீட்டு முகட்டில் ஒட்டியுள்ள தூசிகளைத் தட்டுவதும் அறைகள் விறாந்தைகளைக் கழுவுவதும் என்று இந்த நாட்களில் வீடுகளும் அழகு பெறும். மண்வீடு என்றால் அழகாக மெழுகப்படும்.

வடை, முறுக்கு, சீனி அரியதரம் என்று முதல் நாளே பலகாரச் சூடு ஆரம்பித்து விடும். பொங்கல் நாள் அதிகாலை புழுதி அடங்க கூட்டிய வீட்டு முற்றத்திற்கு தண்ணீர் தெளித்து சாணத்தால் முற்றத்தை மெழுகுவதும் வீட்டுப் பெரிய அறைக்கதவுக்கு மேலாக மாவிலை கோத்துக் கட்டுவதும், முற்றத்தில் மெழுகிய சதுர பொங்கல் பரப்புக்கு மாவிலை தோரணம் வாழை கட்டுவதும் குடும்பத்தவரின் கூட்டு வேலையாக இருக்கும். மெழுகிய பசுமை ஈரத்தோடு கோலம்போட முற்றம் அழகுபெறும்.

உலக்கையில் அரிசிமாவைத் தூவி நாலு வாசல் விட்டு எல்லைக் கோலம் அன்னம், மயில், தாரை என்று தடித்த தாளில் கீறி ஈக்கினால் இரவிரவாகச் கூட்டு கண்ணறையாக்கிய வடிவங்களும் கோலமாக உள்பரப்பை அலங்கரிப்பதுண்டு.

நடுவிலே சாணகம் பூசிய மூன்று கல்லு. மண்ணில் பிடித்த மூன்று கல்லுகளை காய வைத்து பாவிப்பதும் உண்டு. மூன்று கல்லில் நீர் நிரப்பிய பொங்கல் பானை அடுப்பு மூட்ட தென்னம் பாழை, பன்னாடை, உள்ளே விட்ட பசியபால் பொங்கிச் சரிய வெடிகள் வெடிக்க அரிசி போடுவது ஆரம்பமாகும்.

கிழக்கு நோக்கிய மூலையில் தலைவாழை இலையில் வைத்த நிறைகுடத்தில் உள்ள சாணகப் பிள்ளையாருக்கு அலங்காரம்.

பொங்கல் பொங்கியதும் மூன்று தலை வாழை இலையில் படைத்து, பழம், கரும்பு, பலகாரங்கள் போன்றவற்றைப் படைத்து சூரிய வழிபாடு செய்வது பொங்கல் முறை.

பொங்கல் முடிய பந்திப்பாயில் வரிசையாக இருந்து பொங்கலை ஒரு பிடி பிடிப்பதும் ஆனந்தம்தான். ஓலையில் இழைத்த குஞ்சுப் பெட்டியில் பொங்கிய பொங்கலை அயல், உறவுகளுக்குப் பரிமாறுவதும் ஒருமரபு.

திரை அரங்குகள் எங்கும் புதுப்படங்கள் யாழ்ப்பாணத்தில் என்றால் ராணி, வெலிங்ரன், ராஜா, வின்சர் என்று இருந்த எல்லா திரையரங்குகளிலும் சிவாஜி, எம்.ஜி.ஆர் ஆகியோரின் பெரிய கட்டவுட்டுகள் நிமிர்ந்து நிற்கும். அன்று மட்டும் ஐந்து படக் காட்சிகள் வரை நடக்கும்.

மாலையானால் மாட்டு வண்டிச் சவாரி, உழவர் விழாவாகக் கலை விழாக்கள், கவியரங்கம், பட்டிமன்றங்கள் ஊர் தோறுடும் நடப்பதுண்டு.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற வாசகம் ஒவ்வொருவர் நரம்புக்குள்ளும் நம்பிக்கையை ஊட்டும். தை பிறந்தது வழிபிறக்கும் என்பது நாமும் நம்புவோமாக.

Select Life Care ஆதரவில்
Skyrose Welfare Fund - UK வழங்கும்

சங்கமம்

January 27 2008

4.30pm

Entrance: £10

Beck Theatre, Grange Road, Hayes, Middlesex UB3 2UE

ஸ்ரீமதி உதயவாசினி ராமச்சந்திரனின் சிவகாமி நாட்டியக் கலாமன்ற மாணவிகள் வழங்கும்
நாட்டியாஞ்சலி
பரதநாட்டிய நிகழ்ச்சி

K.T. சிவகணேசனின்
கானாம்ருதம்
வயலின் இசை நிகழ்ச்சி

ap Alan Parker Estates ஆதரவில்
சித்ராலயாவின்
இன்னிசை வார்ப்புகள்
இசை நிகழ்ச்சி

தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தின் லண்டன் தமிழ் நாடகப்பள்ளி இளையவர்கள் நடிக்கும்
பாவி?
நாடக நிகழ்வு

நீங்களா கோடீஸ்வரர்?
நகைச்சுவை நிகழ்ச்சி

For Further Details:
Call: **07715013630, 07956662007**
sangamam@blueyonder.co.uk
Charity Reg No: 1113350

இணை அனுசரனை வழங்குவோர்

V & E Finance, South Wimbledon - **Sharon's Supermarket**, Tooting - **Vaishna Superfoods**, Tolworth **Chetty & Co**, Walthamstow - **Gajeetha Jewellers**, Colliers wood - **Bravenaas Restaurant**, Catford - **Paradise Travel and Tours**, Wembley, **Phoenix Partnership Solicitors**, South Wimbledon - **Chennai Masala**, Rayners Lane - **Ushani Caterers**

ஓலை கொண்டு வந்துள்ளேன் ஐயா!

பெருமதிப்பிற்குரிய நாகலிங்கம் அய்யா அவர்களிற்கு

உங்களிற்கு யாரோ முடிசூட்டி விட்டார்களாம் என்கிற செய்தி அறிந்ததும் பதறிப் போய்விட்டேன். அதே போலவே நீங்களும் அந்தத் தருணத்தில் பதறிப் போயிருப்பீர்கள்.

அந்த நேரம் உங்கள் உள்ளம் என்ன வேதனைப் பட்டிருக்கும் என்று நினைத்துப் பார்க்கும் போது என் வேதனை இன்னமும் அதிகரிக்கின்றது.ஏனெனில் உங்களை இன்று நேற்றல்ல நீங்கள் இணுவிலில் கற்பித்த காலத்திருந்து நான் அறிந்தவன்.

ஊருக்கு நீங்கள் செய்த உபகாரங்கள் எத்தனையோ எத்தனையோ. அதுமட்டுமல்ல புலம் பெயர்ந்து வந்த தேசத்திலும் கொடுத்தே பழக்கப்பட்ட கைகளை பொத்தி வைக்க முடியாமல் நீங்கள் புலம்பெயர் தேசத்திலும் பொதுநலத் தொண்டுகளையும் தன்னலமற்ற தமிழ் தொண்டுகளையும் பார்த்து நான் பூரித்து போயிருக்கிறேன். பூமாலை பொன்னாடை புழுகித்தள்ளும் புகழ்சிகள் இவற்றுக்கு அடிமையாகாத பண்பு அதற்கும் மேலாக உங்கள் தற்புகழ்ச்சி பிடிக்காத தன்னடக்கம். இவைகளிற்காகவே எங்கள் தேசியத்தலைவரே அவர்கள் கையால் உங்களிற்கு விருது வழங்கி கௌரவித்திருந்தார்.

தமிழனாய்ப் பிறந்த ஒருவனிற்கு அவனது வாழ் நாளில் இதைவிடப் பெரிய கௌரவம் வேறு என்ன வேண்டும்.

ஆனாலும் இந்திய அரசியல் சாக்கடையின் சம்பிரதாயங்களான முடிசூடுதல். வீரவாள் கேடயம் கொடுத்தல், காலில் விழுதல், விரலைக் கீறி இரத்தத்தால் வெற்றித் திலகமிடுதல், பச்சை குத்துதல், பட்டங்கள் கொடுத்து பொன்னாடை போர்த்தி புகழ்ந்து தள்ளிவிட்டு பின்னர் அடுத்த மேடையிடையில் அதே நபரை தூற்றி துவேசித்தல், அடுத்தவேளை சோற்றுக்கு வழியில்லாத தொண்டன் தலைவர் வாழ்கவென தொண்டை கிழிய கத்துதல், இவையெல்லாம் பெரியளவில் இல்லாவிட்டாலும் எங்கள் ஈழத்தமிழர் சமூகத்திலும் முன்னைய காலங்களில் சிறிதளவு தொற்றியிருந்தது உண்மைதான்.

ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியின் அழிவோடு அந்த சம்பிரதாயங்களும் அழிந்து போய் விட்டன. ஈழத்தில் புதிதாய்ப் பிறப்பெடுத்த எம் புதிய சமுதாயம் புலிகள் காலத்தில் உலகே வியக்கும் பல புதுமைகளை செய்து கொண்டிருக்கும் வேளை புலம் பெயர்தேசத்து தமிழர்கள் பிடுங்கியெறியப்பட்ட பழைய சம்பிரதாயங்களை தேடியெடுத்து புளி போட்டுத் தேய்த்து புது முலாம் பூசிக் கொண்டிருக்கின்றனர்.

ஒரு முற்போக்குவாதியான உங்களால் இவற்றையெல்லாம் எப்படி தாங்கிக்கொள்ள முடிகின்றது. அய்யா யேசு நாதருக்கு யூதர்கள் முள்முடி சூட்டி சவுக்கால் அடித்து சிலுவையை சுமக்கச் சொன்னபொழுது அவர் யூதர்களைப் பார்த்து கோபப்படாமல் கடவுளிடம் 'தந்தையே இவர்கள் தாங்கள் என்ன செய்கின்றோம் என்பதனை அறியாப் பாவிகளாய் இருக்கின்றனர் எனவே இவர்களை மன்னியுங்கள்' என்று வேண்டிக் கொண்டாராம்.

அதே போலத் தான் அன்று ஜெர்மன் கிறீபீல்ட் நகரில் உங்கள் தலையில் சூட்டப்பட்ட அந்த முடி நிச்சயம் உங்களிற்கு முள்முடியாக வேதனை தந்திருக்கும். ஆகவே அவர்கள் அறியாமல் செய்த பாவத்தை நீங்கள் மன்னித் தருளுங்கள் என்று நான் உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

- சாத்திரி

உயிர்காக்க உதவி

உலகெங்கும் வாழும் புலம்பெயர் தமிழ்மக்களே ஊடகத்துறை சார்ந்தவர்களே உதவி செய்யுங்கள். இந்தக் குழந்தையின் உயிர் காக்க உடனடியாக இரத்தம் தேவை.

இரத்தம் A,B,O,AB என்கிற பிரிவு பிரச்சனை இல்லை ஏனெனனில். ஏற்கனவே எங்களில் இருக்கின்ற பிரிவுகளே போதும். ஆனால் இரத்தத்தில் இனஉணர்வு.விடுதலையுணர்வு. எல்லாவற்றிற்கும் மேலாக பட்டம் பதவி ஆசைகளற்ற கடமையுணர்வு. இவை எல்லாம் கலந்த புது இரத்தம் உடனடியாகத் தேவை.

ஏனெனில் நோயாளிக் குழந்தை மிகவும் அபாயக் கட்டத்தில் கோமா நிலைக்கு சென்று கொண்டிருக்கின்றது.

இந்தக் குழந்தையின் பெயர் சர்வதேச தமிழ் ஊடக வியலாளர் ஒன்றியம். இது 24.06.06 அன்று இலண்டனில் பிறந்து இதற்கு ஒன்றரை வயதாகிவிட்டது.

இந்த ஒன்றரை வயதில் நான்கு பிறந்த நாட்களை அதுவும் பிரான்சில் இரண்டு. ஜெர்மனியில் இரண்டு என நான்கு பிறந்த நாட்களை கோலாகலமாக கொண்டாடி முடித்துள்ளது.இந்தப் பிள்ளையாவது வளர்ந்து தமிழ் ஊடகத்துறையில் ஆக்கபூர்வமான மாற்றங்களையும் உலகநாடுகளெங்கும் சிதறிப் போய் கிடக்கும் பல சிந்தனையுள்ள பத்திரிகையாளர்களையும் பல ஊடகங்களையும் ஒன்றாக்கி உறவாக்கி ஏதோ சாதனை செய்யப் போகின்றது என்று கற்பனையில் இருக்க. இதற்கு தியாதி பிடித்து அதன் உறவினர்களாலேயே கவனிக்கப்படாமல் கைவிடப்பட்ட நிலையில், இந்தக் குழந்தைக்கு பால்மா வாங்கவே சிரமப்படும் தாயாரால் வைத்தியத்தை எப்படிப் பார்க்கப் போகிறார் என பதுதான் கவலை.

குழந்தையின் உறவுகள்பற்றிய விபரம்.

இந்தக் குழந்தை அவதாரக்குழந்தை என்பதால் தாயார் மட்டுமே உள்ளார் .

தாயார் பெயர் ஆனந்தி சூரியப்பிரகாசம் - தலைவர் (முன்னாள் பி.பி.சி. தமிழோசையின் பணிப்பாளர்.)

சித்தப்பா மற்றும் இந்தக் குழந்தையின் வைத்தியர். இரா துரைரட்ணம் - உப தலைவர் (இலங்கை தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கத்தின் முன்னாள் தலைவர் மற்றும் பத்திரிகையாளர்.) இவரும் குழந்தைக்கு வைத்தியம் பார்க்காமல் கைவிட்டுள்ளதாகவே அறிய முடிகின்றது.

குகதாசன் குஞ்சியப்பு - டென்மார்க்(பத்திரிகையாளர்)

கோபி மாமா - இங்கிலாந்து (ஒரு பேப்பர் பத்திரிகை ஆசிரியர்)

பற்றிமாகரன் தாத்தா - இங்கிலாந்து (அரசியல் ஆய்வாளர் மற்றும் பத்திரிகையாளர்)

சிவா சின்னப்பொடி - பிரான்ஸ்(பத்திரிகையாளர்)

றூபினி செல்வநாதன் - ஜெர்மனி

வேந்தர்கோன் - இங்கிலாந்து (வடலி பத்திரிகை ஆசிரியர்)

கந்தசாமி - இங்கிலாந்து

இப்படி உலகெங்கும் பலமான பிரபல்யமான உறவினர்கள் இருந்தும் இந்தக் குழந்தையை காப்பாற்ற முடியாமல் போயுள்ளது.

இந்தக்குழந்தையும் அவ்வப்போது சில சினுங்கல்களுடன் (சில அறிக்கைகள்) நித்திரையாகி விடுகின்றது. ஏனவே இனிவரும் காலங்களிலாவது சம்பந்தப்பட்டவர்கள் ஊட்டச் சத்துக்கள் ஊட்டி இந்தக் குழந்தையை காப்பாற்றுவார்களா?

- சாத்திரி

கவனம்

இலக்கியம் பேசுபவனோடு குடித்தல் ஆபத்து
போதையும் ஏறாது பேசுவதும் புரியாது.
முடிவில் உங்களை முட்டாள் என்பான்

குழந்தை பராமளிப்பாளர் தேவை

Manchester பகுதியில் ஒரு வருட காலத்திற்கு குழந்தையை பராமரிக்க ஆள் தேவை. தொடர்புகளுக்கு: **Dr K Sivanesan 07867973327**

Chef Wanted

Wanted for a busy Sri Lankan restaurant in Balham. CHEF (Experience Essential) WAITER / WAITRESS (Experience & Excellent English Essential) Good rates of pay available Please call **0772 054 7714**

Freehold shop for sale

Off licence,grocery,newsagent,lottery,paypoint with One bed room upstairs for £299,000 in Gilingam. Call **Arun** on **07926 000 000**

Newsagent/Offlicence for sale

CTN & offlicence for sale in busy highstreet in Islington, Leasehold £50,000+sav, Shop sales £5,000pw + busspass £1900pw & epay £600pw Potential for improvement. Please call **020 7263 8096** between 10am & 8pm.

Private Tuition (South West London)

Individual and group classes for: Year 3 toYear 6 Maths, Science & English 11+ Exam. Practise (Maths), Year 7 to GCSE Maths, A Level – Pure Maths, Statistics & Physics Affordable Fees. By qualified & experienced teacher Call **Kala B.Sc** (Hon), PGCE Tel: **020 8648 2770** Mob: **07946 598 292**

வேலைக்கு ஆள் தேவை

ஊடக நிறுவனம் ஒன்றிற்கு நிர்வாகப் பகுதியில பணி புரிய பெண் ஒருவர் தேவை. விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: 020 7043 4316

Web developer

We are looking for Web Developer to join a small dynamic team to spead head web developent projects. You will need demonstrable skill and experience of web development.

Essential skills:

- **XHTML, CSS, Dreamweaver, Flash**
- **Graphic design packages like Adobe photoshop**

Knowledge of scripting language is highly desirable.

Please forward your CV to **info@orupaper.com**

Web developer

We are looking for Web Developer to join our small dynamic team to spear head web developent projects. You will need demonstrable skill and experience of web development.

Essential skills:

- XHTML, - CSS, - Dream Weaver, - Flash, - Graphic design packages like Adobe photoshop

Knwledge of scripting language is highly desirable.

Application developer

The ideal candidate should have proven experince in application development in LAMP environment.

Essential skills:

- XHTML, Javascript and AJAX, - MySQL , Postgresql, - Apache - PHP

Knowledge of other progrmming environment is an added advantage.

Send your CV to *info@orupaper.com*.

அனைத்து தமிழ் தொலைக்காட்சி வானொலி நிகழ்ச்சிகள் யாவும் சிறப்பான தொழில் நுட்பத்துடன் பொருத்திக்கொள்ள, திருத்த வேலை சகல அறைகளிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்த்து ரசிக்கலாம்.

Ram: 07861 371 837 / Thas: 07885 987 857

தயவு செய்து சத்தம் போடாதீர்

இலங்கை, இந்தியா போன்ற ஆசிய நாடுகளுக்கு பயணம் செய்தவர்களின் அனுபவம், காதுகளைச் செவிடாக்கும் சத்தத்தை வெறுக்கும் என்பது உண்மை.

மோட்டார் வாகனங்களின் ஒலிச்சத்தம், வானொலிகளின் வரம்பை மீறிய ஒலிபரப்பு, தனிநபர்கள் பாவிக்கும் Ipod ஊடாகக் கசிந்து வரும் ஒலிக்கீறல்கள், வீதிகளில் பழுது பார்க்கும் கனரக இயந்திரங்களின் ஊடறுத்த ஒலித்தளம்பு, வானத்தில் பறந்து செல்லும் ஊர்திகளின் ஒலிக்கீற்று, வீதிகளில் பொதுவான போக்குவரத்து சாதனங்களில் பயணிகள் எழுப்பும் கைத்தொலைப் பேசிகளின் கதறல்கள். இவைகள் வளர்ந்துவிட்ட வளமான நாடுகளில் மட்டுமல்ல, வளர்ந்துவரும் நாடுகளிலும் அன்றாடம் காணப்படும் கட்டுக் கடங்காத தொல்லைகள், தடுக்கமுடியாத, கட்டுக்கடங்காத இச்சத்தமெழுப்பும் அபாயம், மனித வர்க்கத்தின் சுகாதாரத்தையே கெடுத்து விடுமளவிற்கு விஸ்வரூபமெடுத்துவிட்டதாக சுகாதார ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள வல்லுனர்கள் அபாயஒலி எழுப்பியுள்ளனர்.

உலக சுகாதார மையத்தினால் வெளியிடப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் ஐரோப்பிய நாடுகளின் சம்பவித்த மரணங்களில் 3 விழுக்காடு அதிக சத்தம் எழுப்பிய அவலங்களினால் உண்டாகியதாக கண்டுப்பிடித்துள்ளனர்.

இருதயக் கோளாறுகளால் இறக்கும் 7 கோடி மக்களில் கணிப்பின்படி, போக்குவரத்து வாகனங்களினால் எழுப்பப்படும் அதிமோசமான சத்தத்தை உள்வாங்கும் இருதய நோயாளிகளின் மரணங்கள் அதிகபட்சம் 210,000 எண்ணிக்கையாக இருக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

மன உளைச்சல் ஏற்படுத்தும் மரணங்கள் போலவே, அதிகளவிலான சத்தம் உடலில் திடீர் மாற்றங்களை உட்புகுத்தி, இருதய பலவீனத்தை உண்டுபண்ணுவதாக ஆராய்ச்சிகள் நிரூபிக்கின்றன. இத்தகைய செயற்பாடுகள் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் மனிதர்களைக்கூட விட்டுவைப்பதில்லையென ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள்.

நித்திரையில் ஆழ்ந்திருக்கும் மனிதர்களின் உடல் உறுப்புகள் சத்தமெழுப்பும் அதிர்வுகளை செயல் ரீதியாக உள்வாங்கும் தன்மை கொண்டதாக இருப்பதினால், சத்தமெழுப்பும் சங்கடத்தை தவிர்க்க முடியாதது நிதர்சனம்.

புகைத்தல் ஏற்படுத்தும் அபாயகரமான விளைவுகளை தடுக்கும் நோக்கத்துடன், எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதோ அதே போன்று அதிக சத்தம் எழுப்புவதைக் கட்டுப்படுத்தவும் வழிமுறைக் காண உலக சுகாதார மையம் இறங்கியுள்ளதைச் செய்திகள் கூறுகின்றன. அடுத்த ஆண்டில் (2008) இதன் பெறுபேறுகளை அறிய ஆவலுடன் காத்திருப்போம்.

தகவல் களஞ்சியம்

சுவாசிப்பவர்: உமா மகாலிங்கம்

தேனீக்களின் வேலைநிறுத்தம்

இயற்கையாக பெறப்படும் தேன் அதிகளவில் ஐரோப்பியநாடுகளிலும் தென் அமெரிக்காவிலும் தான் உற்பத்தி செய்யப்படுகின்றன.

கூடுகளில் வளர்க்கப்படும் தேனீக்களால் பெறப்படும் தேன், இந்நாடுகளிலிருந்தே அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஓய்வு ஒளிச்சலின்றி உழைக்கும் தேனீக்கள் இவ்வுற்பத்தியை நாடியிருக்கும் தொழில் ஸ்தாபனங்களை இதுவரை கைவிட்டதேயில்லை.

எனினும் 2006ம் ஆண்டளவில் இவ் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கோடிக் கணக்கான தேனீக்கள், தமது தொழிலைக் கைவிட்டு வேலை நிறுத்தம் செய்வது போன்ற ஒரு தோற்றம் காணப்பட்டது. 2007ம் ஆண்டு பிற்பகுதியில் கைக் கொண்ட ஆய்வுகளின்படி, ஐக்கிய அமெரிக்காவில் மாத்திரம் தேன் உற்பத்தி கால்பங்கு வீழ்ச்சியடைந்துள்ளதை கணிப்புகள் கூறுகின்றன.

மலர்களிடமிருந்து மகரந்தம் சேர்க்கும் தேனீக்கள் திடீரென வேறு இடங்களுக்கு மாறி விட்டதாக உணரப்பட்டது. இத்தகைய மாற்றத்தை ஆராய்ந்த வல்லுனர்கள், இதையொரு கொலொனி கொல்லப்ஸ் டிஸ்ஸோர்ரெக்ஸ் எனக் காரணம் கூறினார்கள்.

தேனீக்களுக்கு ஏற்பட்ட இத்திடீர் மனமாற்றம் பற்றி மேலும் ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள், 2007ம் ஆண்டு செப்ரெம்பர் மாதமளவில், இத்தேனிக்களைத் தாக்கிய நோயைத் தேடிப் பிடித்துள்ளனர்.

இந்த வைரஸ் நோய் ஐக்கிய அமெரிக்காவில் 2002ம் ஆண்டு தொடக்கம் பரவத்தொடங்கியுள்ளதாகவும் ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

இஸ்ரயேல் அக்கூட் பாகாலிஸிஸ் வைரஸ் என வகைப்படுத்தியுள்ள இந்நோய்தான் தேனீக்களின் செயற்பாட்டை முடக்கி விட்டனவா அல்லது வேறு காரணங்களுமுண்டா என்ற ஒரு தீர்மானத்தை எடுக்கமுடியாமல் தேனீக்கள் வளர்க்கும் கட்டமைப்புகள் திணறுவது கண்கூடு.

தேன்கூடுகளை விட்டு அகன்றுவிட்ட கோடிக் கணக்கான தேனீக்களின் வேலைப்பழுவை சுமக்கவேண்டிய நிர்ப்பந்தம், தொடர்ந்தும் மகரந்தம் சேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ள தேனீக்களின் தலையில் சுமத்தப்பட்டுள்ளது.

தேனீக்கள் வளர்ப்பவர்களின் பங்கிற்கு கூடுதலான உற்பத்தித் தொகையை செலுத்த வேண்டிய ஒரு பொறுப்பை, தாவர வளர்ப்பாளர்களுக்குதள்ளிவிட்ட தேனீக்களின் வேலைநிறுத்தம் மனிதர்களுக்கும் ஒரு பாடமாக அமையக் கூடும். இயற்கையின் நியதியை எவரால் மீறமுடியும்.

வரட்சி வழி கோரிய புரட்சி

சீதோஷன மாற்றத்தினால், அதிகளவில் பாதிக்கப்பட்ட முதலாவது நாடு அவுஸ்திரேலியா. 10 வருடகால வரட்சியை தாங்க முடியாத அவுஸ்திரேலியா. தம் மக்களின் சமூக வாழ்க்கைக்கு நிரந்தர வசதிகளை ஏற்படுத்த பல மாற்றுத் திட்டங்களை வகுத்து வருவது உலகம் அறிந்ததே.

உலகளவில் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒன்றாக மதிக்கப்படும் அவுஸ்திரேலியாவுக்கே இந்தக் கதியென்றால், இலங்கை போன்ற வறிய நாடுகளுக்கு நிலைமை எவ்வாறு அமையும்.

அதிகளவு சனத்தொகை கூடுதலாக வாழும் அவுஸ்திரேலியாவின் தென் பகுதியில், குடிநீர் தட்டுப்பாட்டைக் கட்டுப் படுத்த கடுமையான சட்ட விதிகள்கூட அமுலில் கொண்டு வரப்பட்டுள்ளது.

விவசாயிகள் பாதிக்கப்பட்ட நிலைமையில் குளிர் பிரதேசங்களுக்கு விரட்டப்படும் ஒரு நிலைமைகூட துளிர்விட்டுள்ளது. இடைக்கிடையே வந்துபோகும் மழைகூட நன்மைக்குப் பதிலாக அதிகளவு தீமைகளையே விளைவித்துள்ளது.

உலகளாவிய காலநிலைமாற்றம், வெப்பத்தை அதிகரிக்கக்கூடிய சான்றுகளையே எச்சரிக்கின்றது.

ஏற்கெனவே வரட்சியில் வாடும் நாடுகள் ஆகக் கூடுதலான தாக்கத்திற்கு முகம் கொடுக்கவேண்டிய எதிர்ப்புகள் இல்லாமல் இல்லை. இத்தனைக்கும் மத்தியில், சீதோஷன மாற்றத்தை எதிர்கொள்ள உலகம்யமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு முரண்டு பிடித்து வந்த அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹொவ்வார்ட் அவர்கள் நடந்து முடிந்த தேர்தலில் தூக்கியெறிந்துவிட்ட அவுஸ்திரேலிய மக்களின் மனமாற்றத்தை வரவேற்பதில் ஆச்சரியமில்லை. இலங்கை போன்ற வறிய நாடுகள் இன்னமும் விழித்துக் கொள்ளாதது தூர் அதிஷ்டமே.

ADORA FINANCIAL SERVICES LTD
MORTGAGES, LOANS & INSURANCE

வீடு வாங்குவதற்கான மற்றும் வியாபார கடன் வசதிகள்

Worries, Sleepless Nights! Oh! No!
Moment Please! You are not the only ones. Let these be a passing cloud. Just Speak to us!
020 8422 3700 or on 07916 177 513 from anywhere.
To manage Debts, Poor Credit Record, Lack of Proof of Income, Being Self- employed but with no Account and many more Headaches. We are not Guardian Angels but we are confident of helping and guiding you to handle these common problems and make your family and you happy.

கடன் பெறுவதில் சிக்கலா? கவலை வேண்டாம்!
வங்கி கணக்கு ஆரம்பித்தல் உட்பட உட்பட வியாபார ஒழுங்கு முறைகளை ஆரம்பம் முதல் நெறிப்படுத்தி வியாபார கடன் வசதிகளும் (Commercial Mortgages) ஒழுங்கு செய்து தரப்படும்.
அத்துடன் வீடு வாங்குவதற்கான கடன் ஒழுங்குகளையும் மிக விரைவான முறையில் ஒரே கூரையின்கீழ் வழங்க காத்திருக்கிறோம்.
உடன் அழையுங்கள்: 020 8422 3700 / 07916 177 513

Your home may be repossessed if you do not keep up repayments on your mortgage or any other debt secured on it.
The overall cost for comparison is 8.10% APR. The actual rate available will depend on your circumstances. Please ask for a personalised illustration.
A fee of up to 1.5% of the mortgage advance will be payable on completion. The level of this fee will be based on the complexity of your case (Typically it will be £300). In addition, we will also be paid commission from the lender. An administration fee of £150 is payable when you apply for a mortgage.
" Adora Financial Services Ltd is an Appointed Representative of The Morigage Times Group Limited, 279 Tottenham Court Road, London, W1T 7RJ, which is authorised and regulated by the Financial Services Authority No. 303007. " Registered in England No. 5918431, Consumer credit licence No.591987

AA ACCOUNTANCY SERVICES
Accountants & Business Consultants

உங்கள் வியாபார நிறுவனங்களின் கணக்கியல், வரி தொடர்பான அனைத்து நிர்வாக தேவைகளுக்கும் எம்மை நாடுங்கள்.
இலவச ஆரம்ப ஆலோசனையுடன் நட்புடன் கூடிய சேவைகள் மிகக் குறைந்த கட்டணத்துக்கு வழங்கப்படும். புதிதாக வியாபாரம் ஆரம்பிக்க எண்ணுகிறீர்களா? கவலை வேண்டாம்!

VAT, Payroll, Business Plans, Book-keeping, Business Start Up, Self Assessment Tax Returns, Company Formation, Management/Year End Accounts, CIS Refunds, Secretarial Services and Bank Accounts.

Fixed Fee, Free Initial Consultation, Flexible and Friendly Services.

உடன் அழையுங்கள்:
020 8422 3700 / 07916 177 513
W: www.adorafs.co.uk
E: admin@adorafs.co.uk
Adora House, 4 Scarsdale Road
Harrow,Middlesex, HA2 8LW

KIDS ஊஞ்சல்

How to Be a Good Child

This page is all about how to be a good child, which is different than being a good kid. Being a good child implies how you behave towards your parents, whereas being a good kid is more about being good on an individual basis. If you are a good child, your parents will trust you, you'll get good grades, and your life will be much happier thanks to these changes.

1. Be yourself. Well, if you don't know the real you, just act naturally, the self you are most laid back and comfortable in.

2. Don't act angry all the time. If you yell a lot and are argumentative, people won't want to be around you.

3. Don't use bad language. Most people don't think bad language is cool. They think it makes you look stupid.

4. Be cool with your parents. Don't lie to them, and don't do any sneaky stuff, because they know what you're doing anyway, there's no way around it. Help them to build a wall of trust for you, but when you get it, don't let it fall down again!

5. Do well in school. Listen to everything your teacher says, take notes, and even make little practice tests for you to practice your skills.

How to Help Around the House

Chances are, your mother will appreciate whatever help you can give around the house

1. Keep your bedroom tidy. Pick up after yourself in common areas: a shared bathroom, the front entrance, the TV room etc.

2. Offer to do the laundry. If you're not sure how the machine works, ask your mother or wife to show you. Pitch in with washing or drying dishes as often as possible.

3. Set the table for meals and clear the table afterward.

4. Offer To Do The Dishes After The Meal.

5. Sweep the floor if you see crumbs lying about. Vacuum the house or help do a few rooms.

6. Take care of family pets: feeding, walking, litter boxes, etc.

Tips

- Ask what you can do to help out.
- Listen to instructions.
- Do things to the best of your abilities each time.
- Be reliable and responsible.
- Don't act like helping out is bothersome to you.
- Remember that they don't like to do house hold chores either.
- Don't fight about daily chores, its not just one or the other's responsibility.
- Have younger children help out where they can with small chores.

How to Show Your Parents You Love Them

•Steps

1. Can you draw? Make a picture for them, whether with pencil or paints, they're a treasure.

2. Not too sure how to "say" what you mean? Write a letter... take your time to put your thoughts down.

3. Keep your room clean! :) I know it's a chore, but it shows mom and dad that you care.

4. Cook them a dinner! Even if it's Kraft Dinner and hot dogs, it's something you are doing for them to give them a break.

5. Pick up after yourself. It shows you appreciate them and the home you all share together.

6. Tell them that you love them once a week.

7. If you have a job, you could take them out to the movies or for a pizza one evening.

8. Probably the biggest way to show them you love them is, never, ever lie. This shows them that you not only love them, but also trust and respect them.

Tips

- Hugs say what no words can. Hugs from kids are awesome.
- Going out for a coffee just to chat is a nice break for everyone. You get to talk about what's going on in all your lives and share in a special time together.
- Family game night is good for big laughs and precious togetherness time.

From this NEW YEAR I'll speak Tamil!

JOKES

How do you make a hot dog stand?
Steal its chair.

What has one horn and gives milk?
A milk truck.

What's the best way to send a letter to the Easter Bunny?
By hare mail.

What did one magnet say to the other?
I find you very attractive.

What do you get if you cross an insect with the Easter rabbit?
Bugs Bunny.

What kind of beans won't grow in a garden?
Jelly beans.

Tongue Twisters.

One smart fellow, he felt smart.
Two smart fellows, they felt smart.
Three smart fellows, they all felt smart

A Tudor who tooted a flute
tried to tutor two tooters to toot.
Said the two to their tutor,
"Is it harder to toot
or to tutor two tooters to toot?"

I am not the pheasant plucker,
I'm the pheasant plucker's mate.
I am only plucking pheasants
'cause the pheasant plucker's
running late.

Say this sharply, say this sweetly,
Say this shortly, say this softly.
Say this sixteen times in succession

Riddles

What do lazy dogs do for fun?

Chase parked cars

What do sea monsters eat?

Fish and Ships

When does a boat show affection?

When it hugs the shore

What kind of cheese is made backwards?

Edam

What city has no people?

Electricity

A butcher is six foot tall, wears size 14 shoes, and has a 50 inch waist. What does he weigh?

Meat

Once there were three men, one Irishman, one Englishman and one Welshman, and they went to the desert. The Irishman took a bottle of wine, the Welshman took an umbrella and the Englishman took a car door. There was this man who said he would give them a camel if they told him why they were taking the things they were carrying. The Irishman said, 'In case I get thirsty,' the Welshman said, 'in case it rains,' and the Englishman said 'because if it gets hot I can wind down the window.'

Colouring



Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

Last week's winner: ***Amulja Viswanathan (Age 7), Eastham.***

Last week's runners up -

Nivjesh (Age 4)
Maidstone, Kent.

Thavinan Thanasingam (Age 5)
New Malden, Surrey

Ayshvaan Thevarajah (Age 6)
Kenton, Harrow.

Sinthuja Ramakrishnan (Age 7)
Southall

Kastoori Sivanesan (Age 5)
Enfield

Jobinaa (Age 5)

Surfing the Net can be great fun

Surfing the Net can be great fun, but here are some easy rules to remember that will keep you safe while you surf.

Keep your Internet passwords private and change them often.

Don't give your email address to anyone you do not know.

Don't give out any of your personal information on the Net e.g. your full name, address details, phone number or school name.

Delete any e-mail and attachments from people you do not know.

If you enter a site or receive information that makes you feel uncomfortable, please tell the person who looks after you or a member of library staff.

Never agree to meet someone that you have met on the Internet. If someone suggests that you meet up, tell the person who looks after you or a member of library staff

Don't believe everything you read! If you have any questions about anything you have seen on the web, ask the person who looks after you or a member of library staff.

Look after yourself! Make sure that you don't spend too long looking at the computer screen without a proper break.

Word Search

Y	Z	A	I	U	W	S	O	H	I
B	N	S	A	R	E	E	J	E	U
O	P	S	C	T	A	V	A	N	I
V	T	A	X	T	U	K	A	R	S
E	H	A	P	A	V	A	D	A	O
T	U	R	P	C	X	T	U	K	L
T	N	A	M	R	D	V	F	T	N
I	D	M	G	U	F	U	N	B	R
A	U	I	N	W	S	O	H	I	Q
Y	Z	A	I	B	I	L	M	A	D

Hidden Words:
Subject: Clothes
PAVADA, TAVANI, SAARAM, THUNDU, VETTI, SAREE

Submitted by:
By: Mayoori Balakumar (Age 6), Walthaston.

Movie review

Based on the popular cartoon series, this is a big-screen outing for a trio of chipmunks who sing pop favourites in an inimitable high-pitch vocal style. When their natural habitat is destroyed by loggers, Alvin and his fellow chipmunks Simon and Theodore end up in LA where they befriend struggling musician Dave (Jason Lee). Discovering their vocal talent, Dave introduces them to record firm boss Ian, who makes stars of the furry creatures. But will chart success and the rock-and-roll lifestyle spoil the innocent chipmunks?

If the idea of Alvin and his chirruping chipmunks friends sounds familiar, it should: the sped-up, squeaky voices of the cartoon creatures have been irritating audiences since the '50s smash hit 'The Chipmunk Song'. This live action version sees the computer-generated furry trio Alvin, Simon and Theodore wind up in LA when their tree is felled for Christmas. Not so much innocents abroad as sussed little mammals who speak like urban teens, they become the toast of the town thanks to their vocal talents. The musical numbers are initially appealing – think close harmonies and smart foot stepping to the likes of 'Funkytown' – but the novelty is likely to wear thin for adults when the 'munks get kitted out as a street boy band. Jason Lee pratfalls away amusingly enough as the songwriter who becomes the boys' reluctant father figure, and his wry approach lends an edge to some of the script's wittier moments. But the story's downhill slide into a hypocritical rant about commerce and the music industry does it no favours.

Book review

The Mage Abhorsen spirits his child out of the Old Kingdom - far away from the uncontrolled power of Free Magic, and away from the Dead who won't stay dead. Late one night Sabriel is visited by a messenger who delivers her father's seven bells into her keeping. Leaving the safety of the school she has known as home, Sabriel embarks upon a quest fraught with supernatural dangers, with companions she is unsure of; for nothing is as it seems within the boundary of the Old Kingdom. Compelling but easy to read, this is the first book of a new fantasy series which will appeal to both adults and young readers. (Suitable for 10 years and over)

MP3 Player

An MP3 is a digital audio file compressed using a standard defined by the Motion Pictures Experts Group (MPEG). Officially known as "MPEG-1, Layer 3", MP3s can use as little as 10% of the storage required by the CD format. An MP3 player is a device for playing MP3 files.

MP3 players come in many sizes and capacities. The smallest MP3 players use a type of memory known as flash; flash does not lose stored information when the power is turned off. Flash is very compact and uses very little power, allowing for extremely small designs with long battery life.While not invented by Apple, it was Apple's line of iPod MP3 players that popularized the devices.Therefore iPods soon dominated the portable MP3 player market.

With the rise in popularity of MP3s as a format for storing music, a number of non-portable MP3 players appeared for the home market. Sometimes referred to as "digital hubs" or "media centers". With network connections, often wireless, they are able to access MP3s and other digital content stored on computers on the home network. These devices come with remote controls and may use a television as a display screen for menus and playback information.

A major advantage of these devices when used as MP3 players is that more than one device can access your MP3 files at the same time. All the music can be stored in one place, and the various MP3 players in the home can treat the MP3 collection like a library with unlimited copies of every book.



By: Ayshvaan Thevaraja (Age 6) (Kenton)

Dot to Dot



VISION
"Building your business dream"
T: 020 8772 7991
020 8772 7992
F: 020 8772 7993
890 Garratt Lane
London SW17 0NR
Buying or Selling your Business?
Business Transfer & Commercial Financial Specialists
Finance arranged for any type of business
NACFB



PERMA
INTERNATIONAL SHIPPING LTD
உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள், வாகனங்கள், வீட்டுப் பாவனைப்பொருட்கள், இயந்திர உபகரணங்கள், போன்றவற்றை தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ அனுப்ப விரும்புகிறீர்களா?
இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும் தரமான பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்
தொடர்புகளுக்கு: சிவம்
45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL
Tel: 020 8646 5222, Mobile: 07939 550397

ஒரு பேப்பர் ORU PAPER
உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £30 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: _____

Address : _____

_____

_____

Postcode: _____

Telephone: _____

Email: _____

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £30 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், Oru Paper, 45'B' Crusoe Road, Mitcham, Surrey CR4 3LJ, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

செய்கூலி இல்லை
சேதாரம் இல்லை
விரும்பிய டிசைனில்
விரும்பிய நகை வாங்க

துர்க்கா நகை மாளிகை

உங்கள் பழைய நகைகளை கொடுத்து
நீங்கள் விரும்பிய டிசைனில் புதுப்பித்துக் கொள்ள

THURGA JEWELLERS

Tel: 020 8903 1495
127 Ealing Road (Above Sakoni Restaurant)
Wembley. HA0 4BP

INDIA 500 MINUTES FROM YOUR MOBILE
இது போன்ற நிகழ்வுகள் மட்டுமல்ல, அன்றாட வாழ்வில் நான் சந்திக்கும் நண்பர்கள் பலரிடம் சேலை தொடர்பான பண்பாட்டு மயக்கம் இருந்து வருவதைப் பார்க்கிறேன். சேலை கட்டுவது கூடாது என்பது எனது வாதமல்ல. அது அதனைக் கட்டும் பெண்களின் விருப்பம் சார்ந்தது. மற்றவர்கள் அதில் தலையிடத் தேவையில்லை. அழகுணர்ச்சி காரணமாக சேலையை பரிந்துரைப்பதையும் தவறென்று கூறமுடியாது. இதுதான் தமிழர் பண்பாடு என்று உரைக்கும்போதுதான் இடிக்கிறது. அதிலும் தங்களை வேட்டியிலிருந்து மேற்கத்திய உடைக்குள் மாற்றிக் கொண்ட ஆண்கள் இவ்வாறு பண்பாட்டுக் கூச்சல் போடும் போதுதான் இன்னும் இடிக்கிறது.

சாய்ந்த கோபுரங்கள்

எழுதுவது: **இளங்கோ**

இதுதான் தமிழர் உடை என்று நாம் எதையும் வரையறுத்து கூற முடியாது. உண்பதும் நாழி உடுப்பதும் இரண்டே (புறநானூறு 189) என்ற பாடலில் பழந்தமிழரின் உடை எவ்வகையானது எனத் தெரிகிறது. இருபாலருக்கும் பொதுவாகவே அது பொருந்துகிறது. இதன்படி பெண்கள் இடுப்பிலும் தோளிலும் இரு வேறு துண்டுகளை அணிந்து வந்திருக்கிறர்கள் என்றே கருத முடிகிறது.

சிலப்பதிகாரத்திற்கு முற்பட்ட இலக்கியங்களில் மார்புக் கச்சை அணிந்ததற்கான சான்றுகளும் இல்லை. தற்போது பெண்கள் அணியும் சேலை போன்ற ஒன்றை அணிந்ததாகவும் எந்தச் சான்றுகளும் இல்லை.

அதற்கு பிற்பட்ட காலத்தில் புடவை என்ற நீளமான ஆடை பழக்கத்தில் வருகிறது. பாஞ்சாலி கதையில் வரும் துகில் எனப்படும் நீண்ட ஒற்றை ஆடையையே இது குறிக்கிறது. ஆனால் அதை ஆண்களும் அணிந்திருக்கிறார்கள் என்பதையும் இலக்கியங்களில் குறிப்பிடுகின்றன. திருநாவுக்கரசு நாயனார் சமண மடத்தை விட்டு வெளியேறும்போது

'மெய் தருவான் நெறி அடைவார்
வெண்புடைவை மெய்சூழ (1326–2)'

என்று பெரியபுராணத்தில் சேக்கிழார் குறிப்பிடுகிறார். இவைகளை தற்போது ஆண்கள் அணிவது கிடையாது. தற்போது பெண்கள் சேலை அணியும்போது உடுத்தும் இரவிக்கை எனப்படும் மேலாடையானது மிகப் பிற்பட்ட காலத்தில்தான் நடைமுறைக்கு வந்தது. குறிப்பாக 15 ஆம் நூற்றாண்டில் மன்னர் கிருஷ்ணதேவராயர் ஆட்சிக் காலத்தில் விஜயநகரப் பேரரசு உருவாகியது.

விஜய நகரப் பேரரசு தெலுங்கர்களின் அரசு. அதன் தாக்கத்தால் தமிழர்களின் உடையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

இரவிக்கை எனப்படும் சொல்லும் தெலுங்குச் சொல்லே ஆகும். அதற்குப் பின்னர்தான் இரவிக்கை அணியும் பழக்கம் ஏற்பட்டது. விஜயநகரத்திற்கும் ஈழத் தமிழர்களுக்கும் என்ன தொடர்பு என்று பலர் வினவலாம். ஓர் உண்மையை நாம் விளங்கிக் கொள்வது நல்லது.

அழகுணர்ச்சி காரணமாக சேலையை பரிந்துரைப்பதையும் தவறென்று கூறமுடியாது. இதுதான் தமிழர் பண்பாடு என்று உரைக்கும்போதுதான் இடிக்கிறது.

ஈழத்தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இராணுவப் படையெடுப்பு தமிழ் நாட்டுத் தமிழர்களை நேரடியாகத் தாக்கியதில்லை. ஆனால் தமிழ் நாட்டுத் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட பண்பாட்டுப் படையெடுப்புக்களும் பிற மொழித் தாக்கங்களும் ஈழத் தமிழர்களையும் பாதித்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. தமிழ் நாட்டில் மட்டுமல்ல ஈழத்திலும் அன்றைய தமிழ் பெண்கள் இரவிக்கை அணிந்ததாக வரலாறு இல்லை.

ஈழத்தில் சென்ற நூற்றாண்டின் தொடக்கம் வரை பெண்கள் இரவிக்கை அணியவில்லை. தமிழ் நாட்டின் சில கிராமங்களில் இன்னும் இந்தப் பழக்கம் இருக்கிறது. அதனைப் போன்று உள்ளாடையாக அணியும் பாவடையும் சென்ற நூற்றாண்டின்போதுதான் பழக்கத்திற்கு வந்திருக்கிறது.

தெலுங்கர்களின் இறக்குமதியான இரவிக்கையை அணியாமல் இருப்பதுதான் தமிழர் பண்பாடு என்ற முட்டாள்தனமான வாதத்தை நாம் இங்கு வைக்கவில்லை, அல்லது உடுப்பது இரண்டே என்ற புறநானூற்று வரிகளை பின்பற்ற வேண்டும் என்ற அடிப்படைவாதக் கருத்துக்களையும் சொல்லவில்லை.

நாம் இங்கு விளக்க முயற்சிப்பது. உடை என்பது காலத்திற்கு ஏற்றவாறு மாற்றத்தை சந்தித்திருக்கிறது என்பதைத்தான். பட்டுச் சேலை என நாம் மங்களகரமாக முழங்குகிறோம் ஆனால் அந்தப் பட்டு கூட சீனர்களின் இறக்குமதிதான்.

அதனைப்போன்று ஆண்கள் வேட்டி உடுத்தும் போது அணியும் தைத்த மேலாடையும் ஐரோப்பியர்கள் மற்றும் அரேபியர்களின் வணிகத் தொடர்புகளால் ஏற்பட்டவையே. இன்று நாம் எதனைத் தமிழர் உடை என்று வரிசைப் படுத்துகிறோமோ அதில் பல அந்நிய கலப்புக்கள் உள்ளதை மறுக்க முடியாது.

காலநிலை வசதிக்கேற்றவாறு மனிதர்கள் உடை உடுத்திக் கொள்வது வழக்கம். தமிழர்கள் செறிந்து வாழ்ந்த ஈழமும் தமிழகமும் பூமத்தியரேகையை ஒட்டியுள்ள வெப்ப மண்டலப் பகுதிகள். அதற்கு ஏற்றவாறு அவர்களின் உடை இருந்தது.

வியர்வையை உறிஞ்சக் கூடிய பருத்தி ஆடைகளை அவர்கள் அணிந்தார்கள்.

'பருத்திப் பெண்டின் பனுவல் அன்ன ' என பெண்கள் பருத்தி நூல் நூற்ற செய்தியை புறநானூறு தெரிவிக்கிறது. அதைப்போன்று பனிபடர்ந்த வெளி நாடுகளில் அதற்கு ஏற்றவாறு உடுத்துகிறார்கள். வெளிநாடுகளில் வாழும் நம் தமிழ்ப் பெண்களும் அதற்கு ஏற்றவாறு ஜீன்ஸ் போன்ற உடைகளை உடுத்துகிறார்கள். கோடைகாலங்களில் உடைகளை குறைத்துக் கொள்வதும் காலநிலை வசதிக்கேற்பவே. அதனைக் கண்டு பண்பாடு போகிறது எனப் பதறுவது பத்தாம் பசலித் தனமாக பிற்போக்குத்தனங்களே.

தற்போது சேலைகளிலும் பல கவர்ச்சிகரமான சேலைகள் வந்துவிட்டன. நவ நாகரீகம் கருதி இளம் பெண்கள் அதனை விரும்பி அணிகிறார்கள். அதுவும் அவர்களின் விருப்பம் சார்ந்தது. அதனையும் சிலர் பண்பாட்டு தளத்தில் நின்று குறை காண்கிறார்கள். அதே நேரம் சேலை அணியும் பெண்கள் பிற்போக்கானவர்கள் ஜீன்ஸ் அணியும் பெண்கள் முற்போக்கானவர்கள் என்ற அபத்தமான வாதத்தையும் நாம் இங்கு வைக்கவில்லை.

முற்போக்கு, பிற்போக்கு போன்றவையும் பெண்விடுதலை என்பதும் சேலையில் தங்கியிருக்கவில்லை. நாம் இங்கு கூறிக் கொள்ள முனைவது நாகரீகமாற்றத்திற்கும் காலநிலை வசதிக்கும் ஏற்றவாறு உடைகளை மாற்றுவதில் எந்தத் தவறும் இல்லை என்பதைத்தான். மேலும் வலியுறுத்திக் கூறிக்கொள்வது என்னவெனில் தமிழரின் மொழிப்பற்று, தேசியப் பற்று, விடுதலைப் பற்று போன்றவைகள் சேலையிலும் வேட்டியிலும் பொட்டிலும் பூவிலும் தங்கியிருக்கவில்லை என்பதைத் தான்.

தமிழ்பற்றாளரும் தமிழீழ விடுதலை ஆதரவாளருமான சுபவீ அவர்கள் இதுநாள் வரையிலும் தான் திருமண விழாக்களில் கலந்து கொள்ளும்போதுகூட வேட்டி அணிந்ததில்லை என்றும் அதனால் பலர் குறைபட்டுக் கொண்டனர் என்றும் கூறியிருந்தார்.

தமிழீழத்தில் அரசியல் துறையில் இருக்கும் பெண்கள்கூட அவர்களின் வேலை வசதிக்கு ஏற்றவாறு மேற்கத்திய உடைகளைத்தான் அணிந்து கொள்கிறார்கள்.

இந்த உலகில் உடை, நடை, நாடு, நகரம், கலை, இலக்கியம், பண்பாடு, நாகரீகம் என அனைத்துமே மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டுதான் முன்னேறியிருக்கின்றன. மாற்றம் என்பது மனித வாழ்க்கையின் ஒவ்வொரு கூறுகளுக்கும் தேவையான ஒன்று.

மத அடிப்படைவாதிகள் கடைப்பிடிக்கும் வெறித்தனமாக கொள்கைகளை நாம் தமிழின் பெயரால் கடைப்பிடிக்கக் கூடாது. தனக்குள்ளேயே பல மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டதுதான் நம்முடைய தமிழ் மொழி. இலக்கணங்களும் தமிழ் எழுத்துருக்களுமே மாற்றியமைக்கப் பட்டுள்ளன. சென்ற ஒரு பதிவில் இதனை விளக்கியிருக்கிறேன்.

பேராசான் கார்ல் மார்க்சின் வரிதான் நினைவுக்கு வருகிறது. ஆம், மாற்றம் ஒன்றுதான் மாற்றமில்லாதது.

"Specialist advice on all legal matters in a friendly environment"

உங்களுக்கு என்ன இடர் வந்தாலும் சட்டத்துடன் அதனைச் சந்திக்க நட்புணர்வுடன் நாம் இருக்கின்றோம்

24 hour police station emergency service

Criminal Defence Service | Community Legal Service

RAJ LAW SOLICITORS
Experts in Criminal Defence Service (UK)
M: 07947 641 876 T: 020 8516 7730 / 020 3133 0000
Trident Business Centre, 89, Bickersteth Road, Tooting Broadway, London SW17 9SH

This firm is authorised by the legal services commission to provide free legal advice for you for all types of criminal matters.

- Free 24 Hrs Police Station Attendance
- Magistrates, Crown Court & Court of Appeal Representation
- Terrorism Cases
- Serious Crime, Murder/Attempted Murder, GBH
- Serious Fraud, Money Laundering, Major Scale Drug Importation
- Sexual Offences Including Rape
- HM Customs & Excise Cases
- Appeal & CCRC Cases
- Prison Law Representation

Sponsorship and Power of Attorney

We speak Tamil, French and Mauritian Creole

Immigration Law Specialists

- Fresh Asylum Application / Rule 39 European application
- Entry Clearance /Overseas Appeal
- Student Visa, Extension & Appeal
- Judicial Review & Emergency Injunction Application (24 Hrs)
- Work Permit
- Highly Skilled Migrant Programme
- Family & Other Dependant Relatives' Visa
- EU Dependant Visa/Marriage Application
- Investor / Business Visa, Civil Partnership Visa
- Indefinite Leave to Remain under the 5,7,10 & 14 year rules

Property

- We deal with Residential (Flats, House) and Commercial Conveyancing
- Purchase of Off Licence, Restaurants, Groceries, Right to buy

வாசகர் கடிதம்

தாலி பெண்ணுக்கு என்ன?

சாந்தி வவுனியனின் தாலி பெண்ணுக்கு வேலியா?சோலியா?என்ற கட்டுரையை ஒரு பேப்பர் (இதழ் 83) வாசித்தேன். மிகவும் உணர்ச்சி வயப்பட்டு எழுதியிருக்கிறா என்பதை மட்டும் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

கட்டுரையை முடிக்கும் போது நாடுநாடாக தொலைபேசியில் சபிப்பவர்கள் அனைவருமே சபியுங்கள் எனக்கு எந்தவித கவலையுமில்லை. இனிமேல் என் கண்முன்னால் இப்பிடியொரு சம்பிரதாயம் பின்பற்றப்படுமாயின் தாலி கழற்றிக்க வருவோரின் தாலிகளை நான் அறுத்துத் தருவேன் என்றும் எழுதியிருந்தா

எனக்கு வாசித்தவுடன் முதலில் தோன்றியது ஒரு பெண்ணைப் பற்றி பேப்பரில் எழுதும் சாந்தி இதனால் அந்தப்பெண்ணின் நிம்மதிக்கு எள்ளளவேனும் பாதிப்பு வருமா என்று ஒருகணமேனும் பெண்ணென்ற ரீதியில் தன்னும் சிந்நித்தாவா என்பதும், செத்த வீட்டில் பெண்கள் மிகவும் மனம் பாதிக்கப்பட்ட நிலையில் குழறி குழறி அழுவதை எல்லாம் அவர்களின் ஆழமான மனவிருப்பு என்று எடுத்துக்கொண்டு அவர்கள் கேட்பதை அப்பிடியே கேட்ட பிரகாரம் நிறைவேற்றும் மன எழுச்சி உள்ள சாந்தி சில காலத்திற்றிகு முன்பு நடந்த எனது உறவினர் ஒருவரின் இறந்த வீட்டுக்கு வந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்று யோசித்து பார்த்தேன்.

அங்கு அப்பெண் ஐயோ என்னை விடுங்கோ.. விடுங்கோ என்று நாலைந்து பேர் இழுத்துப்பிடிக்க அதையும் மீறிக்கொண்டு ஓடுவதற்கு எத்தனித்துக் கொண்டிருந்தார். ஐயோ ..அவரில்லாமல் ஒரு வாழ்வு எனக்கு வேண்டாம் ..ஐயோ உங்களை கையெடுத்து கும்பிடுகிறன் ..என்னையும் அவரோடு போக விடுங்கோ..போக விடுங்கோ..அவரை பிரிஞ்சு ஒருநாள் கூட நான் இருந்ததில்லை.. ஐயோ? ஐயோ ..எங்களை பிரிஞ்சு போடாதேங்கோ.... என்னை விடு என்று பிடித்தவர்களுக்கு நெஞ்சில் குத்திக் கொண்டிருந்தாள்.

பிணத்தோடு பிணமாக எரிந்து போகத் துடிதுடிக்கும் இப்பெண்ணின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாத பெரியவர்களின் அறியாயத்தை சாந்நிதட்டிக்கேட்டு அப்பெண்ணின் விருப்பத்தை முன்னின்று நிறைவேற்றி இருப்பாவா?

பெண்ணுக்காக குரல் கொடுக்கும் பெண்கள் மிகவும் அவதானமாக விடயத்தைக் கையாள வேண்டும். சில நேரம் உணர்ச்சி வயப்பட்டு சமூகப்பிரச்சனைகளை கையாளும் போது அது எதிர்மறைவான விளைவுகளையும் உருவாக்கி சொல்ல விளைந்ததன் பொருளும் பயனும் அற்று விடும்.

மேலும் பெண்களுக்காக குரல் கொடுக்க முனைபவர்கள் கொஞ்சப் பேர். அவர்களும் அதை சரியான முறையில் சொல்லா விட்டால் சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி என்ற மாதிரி போய் விடும்.

தாலி பெண்ணுக்கு வேலியா? சோலியா? என்று எழுதவிளைந்தால்.. அதை ஒரு சம்பவத்தையோ..ஒரு பெண்ணையோ (அந்தப் பெண்ணுக்கும்... அதே போன்ற நிலையில் உள்ள மற்றப் பெண்களுக்கும் உண்மையில் நல்லது செய்ய நினைத்திருந்தால்) குறிப்பிடாமல் அதாவது திகதி வாரியாக எழுதாமல் அந்த சம்பவத்தின் கருவில் விளைந்த ஒரு ஆழமான, சமூகம் சார்ந்த ஆய்வாக எழுதியிருக்கலாம். உணர்ச்சி பிழம்புக்குள் வாசகர்களைத் தள்ளாது அறிவு சார்ந்து சிந்திக்கத் தூண்டியிருக்கலாம்.

சாந்தியின் கட்டுரையை ஒரு விதவை பெண்ணிடம் வாசித்துக் காட்டினேன். வாசித்ததும் அவ முதலில் சொன்னது கணவன் இறந்த பெண்ணுக்கு இவ எழுதப்போவது தெரியுமா?

அப்படி இல்லாவிட்டால் அவவுக்கு கணவன் இறந்த கவலையையுடன் இப்படி தன் பேர் பத்திரிகையில் அடிபடுவது இன்னும் கவலையாக இருக்கப்போகிறது என்று சொன்னதோடு அது சரி இப்ப அந்த தாலி அவவிடம்தானே இருக்கும் இனி போட விருப்பம் என்றால் போட்டிருக்கிறதுதானே ஒவ்வொரு நாளும் வந்து, இந்த வெளிநாட்டில யாரும் கழட்டு கழட்டு என்றா சொல்லிக்கொண்டிருக்கப் போகிறார்கள் என்று அப்பாவித்தனமாக ஒரு கேள்வியையும் கேட்டுவைத்தா?

மேலும் நாங்கள் முந்தி தாலி கட்டினால் ஒருக்காலுமே கழட்டுவதில்லை கழுத்தை விட்டு, இப்ப நீங்கள் கட்டியிருக்கிற காலத்த விட கழற்றி வைத்திருக்கிற காலம் தான் கூட இதுக்கேன் அழுவான்....அதை விட அறுப்பான் ஏன் கட்டுவான் ஏன் என்று தானே இப்ப உங்களில் சிலர் ஒன்றுமில்லாமலே சேர்ந்து வாழுகிறீர்கள் சடங்கும் வேண்டாம் ..சம்பிரதாயமும் வேண்டாம் ..என்று அப்பிடியே இருங்கோவன் தமிழ் பண்பாடு வாழும் என்று பொரிந்து தள்ளினா?

என்னட அவர் செத்தபோது விதவை மாமி ஒருவதான் வந்து என்ட தாலியைக் கழட்டினவ நான் கவலையில குழறி அழுதனான் தான் ஆனால் செத்தாபிறகும் தாலியைப் போட்டிருக்கோணும் என்று அழவில்லை. சரியா என்ன சொல்லி அழதனான் என்று பிறகு ஞாபகம் இல்லை.

ஆனால் அப்பவே எங்கட ஊரில ஒருவ செத்தாபிறகும் கழட்டமாட்டன்? அவர் நினைவாக போட்டிருப்பன் என்று போட்டிருந்தவ.. ஏன் இந்தியாவில் நான் இருந்த போது பாதுகாப்பு என்று ஒட்டுப்பொட்டு நெற்றியில் போட்டிருக்கிற விதவைகளைக் கண்டிருக்கிறேன் என்று சொன்னா.

நான் மொத்தமாக நாலு கணவன் இறந்த செத்த வீடுகளுக்கு போயிருக்கிறேன் ஆனால் சாந்தி எழுதிய அளவிற்கு கோரமாக நடக்காது மிகவும் கண்ணியமாகவே எல்லாச் சம்பிரதாயங்களும் நடந்தேறின. சாந்தி எழுதிய அளவிற்கு அது நடத்திருந்தால் அது கண்டிக்கப்பட வேண்டிய ஒரு நிகழ்வே.

பொட்டு வைத்து, பூ முடித்து, தாலி போட்டு வந்தால் என்ன தேர் திருவிழாவோ? கல்யாணமோ என்று கேட்கிற காலத்தில ஏற்கனவே இல்லாத ஒன்றை பலாத்காரமாக இழக்க வைப்பதுவும் இல்லாமல் இழந்த ஒன்றுக்காக போராடுவதுவும் விந்தை உலகம் இது. என்ன சொல்ல வருகிறார்கள்?

கணவன் இறந்தபின்பும் தாலி, பொட்டு, பூ எல்லாம் போடலாம் என்றா?

அல்லது விருப்பியவர்கள் போடலாம் மற்றவர்கள் விடலாம் என்றா?

அல்லது போடுவதுவும் விடுவதும் அவரவர் விருப்பம் ஆனால் அதை இல்லாமல் செய்யும் நிகழ்வு மரணசடங்கில் வேண்டாம் என்றா?

அல்லது தாலியைக் கட்டி, கணவன் கையால் பொட்டிட்டு கல்யாணம் கட்டுவான் ஏன் பிறகு அதை கழட்டி பொட்டை அழிப்பான் ஏன் எனவே தாலி கட்டும் கல்யாணமும் வேண்டாம். அதை கழட்டும் கருமாதி சடங்கும் வேண்டாம் என்றா?

கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லுங்களேன்.

- சுந்தரி.

ஹா ஹா ஹா ...

தமிழ் வாத்தியாருடைய வகுப்பு எடுத்துக் கொண்டிருந்தார். பாடத்தை முடிப்பதற்கான மணியடித்ததும் அவர் தமது தமிழ்ப் புலமையை இப்படிக் காட்டினார்

'அடித்தது மணி

முடிந்தது பணி'

அதற்கு மாணவர்கள் தமது புலமையை இப்படிக் காட்டினார்கள்

'தொலைந்தது சனி'

- Immigration & Nationality
- Conveyancing (Both residential and commercial)
- Civil Litigation
- Criminal litigation
- Housing
- Land Lord and Tenants
- Employment Law
- Judicial Review
- Injunction

Friendly Solicitors firm, local to you, delivering your legal matters in a efficient and cost effective means.

Lexis
Law Solicitors
Solicitors and commissioners for Oath
Tel/Fax **020 8543 7745**
52, High street
Collierswood, SW 19 2BY

கைக்கெட்டாத கைம்மாத்துகள்

அங்கம் 7

டாக்டர்கள் அவனைச் சூழ்ந்தார்கள். சோதனைக் குழாய்களில் இரத்தம் எடுத்தார்கள். எக்ஸ்ரேப் படங்களாக எடுத்துக் குவித்தார்கள். அவனைச் சுற்றிக் கூட்டம் கூட்டமாக நின்று பேசினார்கள்.

'ஏதோ சூட்டால் இரத்த வாந்தி எடுத்திருக்கலாம்!' என்று நினைத்தவனுக்கு, மனதில் பயம் இலேசாக எட்டிப் பார்த்தது.

ஆஸ்பத்திரிக்கு வந்து இரண்டு வாரங்களாகிவிட்டன. இதுவரை எவ்வித மருந்தோ மாத்திரைகளோ தரவில்லை.

சோதனைக் குழாய்களில் இரத்தம் எடுப்பதும் எக்ஸ்ரே எடுப்பதும் வாடிக்கையாகின. சீனா ரெஸ்ரோரண்ட் வேலையை நினைக்கக் கவலை ஏற்பட்டது.

'இந்நேரம் வேறை ஆரையாலும் எடுத்திருப்பான். அதுவும் தமிழனாய்த்தான் இருப்பான். அந்தச் சம்பளத்துக்கு தமிழனைத் தவிர வேறை ஆர் கிடைப்பான்?'

'இந்த வேலையும் போனால் உள்ள கஸ்டங்களுக்கிடையிலை எப்பிடி வீட்டுக்குப் பணம் அனுப்புவது? எவ்வாறு ஆங்காங்கே வாங்கிய கடன்களை அடைப்பது?'

வைத்தியசாலைப் படுக்கையொன்றில் கிடந்தவாறு பல விதமான சிந்தனைகளுடன் புரண்டான் சிவராசன். நண்பர்களும் அவனுக்குப் பழக்கமான சில தமிழ்க் குடும்பங்களும் வந்து நலம் விசாரித்துச் சென்றார்கள். அந்தச் சில மணிப் பொழுதில் கவலைகளை மறந்து கலகலப்பாவான். அவர்கள் அகல மீண்டும் தனிமை, மீண்டும் கவலைகள்.

சிவராசன் ஜேர்மனிக்கு வரத் தீர்மானித்தபோது உலகப் படத்தில் ஜேர்மனி எங்கே என்றுகூட அறிந்திருக்கவில்லை. எல்லோரும் போவதால் தானும் செல்ல முடிவெடுத்தான்.

உறவு, பந்தம், பாசம் என்று எவ்விதத் தொடர்புகளும் அற்று வாழ்ந்தால் சில வேளைகளில் இந்த ஜேர்மன் மண் சொர்க்கமாகத் தோன்றலாம். ஆனால், பந்தம் பாசம் என்ற உறவுக் கயிற்றினால் பிணைக்கப்பட்டு அவற்றையே சுகமான சுமைகளாக நினைத்துச் செயலாற்ற முயலும் போதுதான் எவ்வளவு இன்னல்கள்.. இடைஞ்சல்கள்.. காலத்துக்குக் காலம் மாறும் விசாக்கள்.. வெளிநாட்டவர்களுக்கெனப் புதிது புதிதாய்த் தோன்றும் சட்டங்கள்.. விலைவாசி ஏற்றம்.. உழைப்புக்குத் தகுந்த ஊதியமின்மை.. கறுப்பர் என்றாலே படிப்பறிவற்றவர் என்ற எண்ணத்துடன் உரையாடும் வெள்ளையர்.. அதைவிட அந்த வெள்ளையர் சிலரின் நிற வெறிக் கண்ணோட்டத்துடனான அணுகுமுறைகள்.. இவ்வாறாக எத்தனை தடைகள்.

இவை யாவற்றையும் கடந்து ஏதோ மிச்சம்பிடித்து கடன்பட்டுக் குடும்பத்தாருக்குப் பணம் அனுப்பினால், அங்கேதான் எவ்வளவு புதுப் புதுத் தேவைகள்?

தேவைகள் அவனின் உழைப்பை உறிஞ்சும்போது கழியும் காலங்களில் அவனது ஆயுள் படிப்படியாகக் குறைவதைத் தவிர - வேறெதை அவனால் அனுபவிக்க இயன்றது?

அவனுக்கென்று ஒருத்தி - அந்த ஒருத்தியால் ஒன்று இரண்டு என மழலைகள் - இந்த இனிய வசந்தகாலம் அவனது வாழ்வில் எட்டிப்பார்க்கும் நேரம்தான் எப்போது கனியும்?!

சுகுணா அவன் மனக்கண் முன்னால் வந்தாள். ஆஸ்பத்திரிக்கு வந்ததால் அவளைப்பற்றிய செய்தியைக் கூட அறிய முடியவில்லை. அவளும் சின்னத்தம்பியும் கொழும்பில்தான் நிற்கிறார்களா? அல்லது சுகுணாவை ஏஜென்சி வெளிநாட்டுக்கு அனுப்பி இருப்பானா? யாரிடம் விசாரிப்பது? எப்படித் தொடர்பு கொள்வது?! ஒரேயொரு உறவினன் சண்முகநாதன். ஆஸ்பத்திரியிலுள்ள தொலைபேசியில் அவனுடன் தொடர்பு கொண்டான்.

"நீ எதற்கும் கவலையை விடு சிவா..! எல்லாத்துக்கும் நானிருக்கிறன்.... நான் சின்னத்தம்பி மாமாவோடை கதைச்சு நிலமையைச் சொல்லுறன்" ஆதரவுக் கரம் நீட்டினான் சண்முகநாதன்.

*****

கற்பனைத் தொடர்

எழுதுவது: சோழியான்

இழுத்தெடுத்த இரத்தங்களுக்கும் 'எக்ஸ்ரே'க்களுக்கும் முடிவு தெரியாமலா போய்விடும்? தமிழ் மொழிபெயர்ப்பாளருடன் அவனிடம் வந்தார் டாக்டர். டாக்டர் கூறிய செய்தியைக் கேட்டு அதிர்ச்சியால் நிலை குலைந்தான் சிவரசன்..

வானமே இடிந்து தலைமேல் விழுந்தது போலிருந்தது. வாழ்க்கையே அஸ்தமித்துவிட்ட பிரமையில் தள்ளாடினான்.

"டாக்டர்! நீங்கள் பொய் சொல்லுறீங்கள். நன்றாகப் பரிசோதித்தீர்களா? உண்மையைச் சொல்லுங்கள்" ஓங்கிக் கத்திக் கதற வேண்டும் போல் தவித்தான்.

"இதொன்றும் பயப்பட வேண்டிய நோயில்லை. நோய் ஆரம்ப கட்டத்தில்தான் இருக்கிறது. புற்று நோய்களில் பல வகை உண்டு. சிலவற்றுக்கு மருந்து இல்லை. சிலவற்றைக் குணமாக்க முடியும். உங்களுக்குத் தொண்டையில் உள்ள உமிழ் நீர்ச் சுரப்பிகளில்தான் புற்று நோய்க்கான கிருமிகள் தெரிகின்றன. சிறு ஒப்பிரேசன் மூலம் குணமாக்கி விடலாம்" என்று தமிழில் டாக்டரின் விளக்கத்தைக் கூறினார் மொழிபெயர்ப்பாளர்.

எல்லா டாக்டர்களுமே இப்படித்தான். நோயாளியைத் தைரியப்படுத்த எந்த நோயையும் குணமாக்கலாம் என்பார்கள். எப்படி நம்புவது? கண்கள் கலங்கின.

'நான் வாழவேண்டும் டாக்டர். எனக்காக இல்லாட்டிப் போனாலும் என் குடும்பத்துக்காக. என் சகோதரிகளைக் கரைசேர்க்கும்வரையாவது வாழவேண்டும். என்னை நம்பியுள்ள அவர்களின் நம்பிக்கைகள் பொய்யாகக் கூடாது.

"மிஸ்டர் சிவராசன்! நீர் உண்மையிலேயே அதிர்ஸ்டசாலி. இலங்கையில் என்றால் இதை மாத்தேலாது. இதுக்கான வசதிகள் இல்லை. இங்கை மாத்தலாம். டாக்டர் நம்பிக்கையுடன் இருக்கிறார். இப்ப நீர் மனத்தைரியமாக இருப்பதுதான் மிகமிக முக்கியம்" என்று ஆறுதல் கூறி விடைபெற்றார் மொழிபெயர்ப்பாளர்.

நாட்கள் சில நகர்ந்தன.மீண்டும் இரத்தம் எடுத்தார்கள். 'எக்ஸ்ரே' எடுத்தார்கள். 'ப்ரசர்' பார்த்தார்கள். வேறொரு அறைக்குக் கூட்டிச் சென்று உடல் அமைப்புக்கள்பற்றிய வண்ணப்படமொன்றைக் காட்டி, எந்த இடத்தில் சத்திர சிகிச்சை செய்யப்போகிறார்கள் என விளங்கப் படுத்தினார்கள். கனிவாக நடந்தார்கள். அவனுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதற்காக அயராது பாடுபட்டார்கள். சிவராசனுக்கு வியப்பாக இருந்தது.

'இவர்களுக்குத்தான் என் நோயைத் தீர்ப்பதில் எவ்வளவு அக்கறை? இவர்களின் பணி விடையே மனதுக்கு எவ்வளவு தெம்பைக் கொடுக்கிறது!'

தற்போது சிவராசனின் மனதில் எவ்விதமான சலனங்களுக்கும் இடமில்லை. பயம் இல்லை. கவலை சற்று எட்டப்போனது. 'எப்படியும் காப்பாற்றிவிடுவார்கள்' என்ற நம்பிக்கை வட்டம் சிறிதாக உருவாகிப் பெரிதாகியது. நம்பிக்கையில்தானே உயிரினங்களின் தொழிற்பாடுகள் அர்த்தமுள்ளதாக அமைகிறது.

சத்திர சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார்கள்.மயக்கமானான். மயக்கத்தில் இடையிடையே சுகுணா வந்து மறைந்தாள்.விழித்துப் பார்த்தபோது வேறொரு அறையில் படுத்திருந்தான். அருகே நின்ற டாக்டர் வாழ்த்துக் கூறி, ஒப்பிறேசன் வெற்றி என்றார். நிம்மதியாக இருந்தது. நன்றியுடன் கண்களில் நீர் மல்கக் கைகூப்பினான்.

தொண்டை சிறிது வலித்தது. தொண்டையைச் சுற்றிப் பஞ்சுத்துணியால் கட்டுப் போட்டிருந்தது.

ஒருநாள் சண்முகநாதன் வந்தான். அவனுடன் வேறொரு தமிழ் இளைஞனும் வந்தான். கையில் சிறிய கமரா ஒன்று தொங்கியது.

"இப்ப எப்பிடி? வரவரவெண்டு இப்பதான் முடிஞ்சுது. லீவுதரமாட்டன் எண்டிட்டாங்கள்...." கையில் இருந்த பழங்களைச் சிவராசனிடம் கொடுத்தான்.

"சின்னத்தம்பி மாமாவும் சுகுணாவும் யாழ்ப்பாணம் போவிட்டினையாம்"

"ஏனாம்?" திகைப்புடன் கேட்டான் சிவராசன்.

"நீ ஒண்டுக்கும் பயப்பிடாதை. ஏஜென்சி அனுப்புறன் அனுப்புறனெண்டு இழுத்தடிக்கிறானாம். அதுதான் கொழும்பிலை நிக்கிறதெண்டாலும் எக்கச்சக்கமான செலவெல்லே. யாழ்ப்பாணம் போவிட்டினம். அலுவல்கள் எல்லாம் சரியான பேந்துதான் கொழும்புக்கு வருவினம்."

"நானும் ஆஸ்பத்திரியிலை இருந்ததாலை ரெலிபோன்கூட எடுத்துக்கதைக்கமுடியேலை. என்ன நினைச்சுதுகளோ தெரியேலை" என்று வருந்தினான் சிவராசன்.

"இதிலை என்ன கிடக்கு? நீயும் ஆஸ்பத்திரியாலை போக அவையும் வரக் கணக்காயிருக்கும்."

"நீ எனக்குச் சுகமில்லை எண்டு என்னவாலும் சொன்னனியே?" பதட்டத்துடன் கேட்டான் சிவராசன்.

"எனக்குத் தெரியாதே என்ன சொல்லவேணும், என்ன சொல்லக் கூடாதெண்டு? நான் ஏன் இதுகளையெல்லாம் சொல்லப்போறன். பேந்து அதுகள் வீணாய்ப் பயப்பட்டுக் கண்டபடி நினைக்குங்கள்"

"அதுமட்டுமில்லை சண். அப்பாவும் அம்மாவும் அறிஞ்சால் உயிரை விட்டிடுங்கள். நான் ஆஸ்பத்திரியிலை இருக்கிற விசயத்தை ஒருத்தரிட்டையும் அலம்பிப் போடாதை. இருக்கிற கஸ்டங்களுக்கை நானுமேன் அதுகளைக் கவலைப்பட வைப்பான்?"

"இப்ப எப்பிடி?"

"நோயை மாத்தியாச்சு எண்டு சொல்லுறாங்கள். எண்டாலும் மாதம் ஒருக்கா செக்கப்புக்கு வரவேணுமாம்."

"நான் நினைக்கிறன் இது சிகரட்டாலைதான் வந்திருக்க வேணும். நீ சிகரட் பத்துறது ஓவர். எதுக்கும் உந்தப் பழக்கத்தை விட்டுப்போடு"

"இருக்கலாம் சண். சிகரட்டை விடமுடியுமா எண்டுதான் தெரியேலை. பாப்பம். மனம் ஒரு குரங்கு எண்டது உண்மைதான். கூண்டுக்கை வாழுற குரங்காலை எப்பிடிச் சந்தோசமாயிருக்கமுடியும்? எல்லா விசயங்களிலையும் குரங்கைக் கட்டுப்படுத்த ஏலாது" என்று புன்னகையுடன் கூறியவன்,

"உதென்ன கமரா? வேறை எங்கையாகிலும் போகப்போறியளே?" எனக் கேட்டான்.

"இவர் பாபு. இவற்றை காரிலைதான் வந்தனான். வாற வழியிலை கொஞ்சப் படங்கள் எடுத்தம். இப்ப உன்னையும் எடுக்கத்தான்...."

"இந்தக் கோலத்திலையோ.... வேண்டாம் சண்" மறுத்தான் சிவராசன்.

"இதிலை என்ன இருக்கு சிவா. இந்த ஆஸ்பத்திரி 'வாட்' நல்ல வடிவாய் இருக்கு. நீ ஆஸ்பத்திரியிலை இருந்த ஞாபகமாய் ஒரு படம் எடுப்பம்." ஒரு படம் என ஆரம்பித்து வெவ்வேறு கோணங்களில் இரண்டு மூன்று படங்கள் எடுத்துக் கொண்டான் சண்முகநாதன்.

"ரொம்ப நன்றி சிவா!"

"இதுக்கு ஏன் நன்றி, சண்?"

"எல்லாம் விசயத்தோடைதான்!" மனதிற்குள் கூறிக் கொண்டான் சண்முகநாதன்.

சிவராசனுடன் விளையாட ஆசையுற்ற விதி, சண்முகநாதனின் கமரா வடிவில் சிரித்தது.

தொடரும்)

"....How can I make my business **visible**
No worries! Join for FREE at Orudirectory.com"

orudirectory.com

2ம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி. யாழினி லோகேஸ்வரன்

மலர்வு: 16-11-1955 உதிர்வு: 23-01-2006

In loving Memory of **Yalini Logeswaren**

"You are
And you will
Always be
In Our Hearts
And in Our Thoughts"

இறப்பால் உங்களை இழந்தாலும்
இரண்டாண்டு ஓடி மறைந்தாலும்
இவ் வையகத்தில் வாழும்வரை – பசுமையாக
இதயத்தில் தினமும் உங்களின் நினைவு.

ஆராதனை செய்யும்
கணவன், மகன், பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள்.

Fondly remembered by your dear Husband Logeswaran and your loving son Nimalan, parents, brothers and sisters.

Intelligent, beautiful, spiritual, independent, considerate and strong were several of the qualities that my most beloved mother possessed.

The worth of a real woman was augmented with every graceful step she made. She has shown my father what real love truly is, in times of happiness and adversity.

It is unexplainable to realize how much we have suffered without her presence.

Our tender memories of her will live foe ever.

We love you.

Loges and Nimalan

Tel: **020 8640 6131**, Mob: **07984 421 945**
8 Framfield Road, Mitcham, Surrey, CR4 2AL

மரண அறிவித்தல்

திருமதி இராஜேஸ்வரி பரமலிங்கம்

தோற்றம்: 16-03-1944 மறைவு: 08-01-2008

நெடுந்தீவில் பிறந்தவரும் பரந்தனில் வசித்து இறுதியாக வவுனியாவில் வசித்து வந்தவருமான திருமதி இராஜேஸ்வரி பரமலிங்கம் 08.01.2008 செவ்வாய்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர், காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான இராமநாதன் சேதுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும்

பரமலிங்கத்தின் ஆருயிர் மனைவியும்

காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் அருளாம்பிகை (வவுனியா), நகுலேஸ்வரி (லண்டன்), மதிவாணி (கனடா), புகனேஸ்வரன் (பிரான்ஸ்), சிறிரஞ்சனி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்

சிவகுமார், பத்மநாதன் (Cluster-4021-Shell-UK), ராஜேஸ்வரன் (கனடா), புகனேஸ்வரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும்

சிவலிங்கம், நகுலேஸ்வரி, ரஷி, காலஞ்சென்ற சின்றாஸ் மற்றும் குணபாலசிங்கம், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்

காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் கணபதிப்பிள்ளை காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் பொன்னம்மா காலஞ்சென்ற சின்னம்மா மற்றும் மலர் சிதம்பரநாதன் ஆகியோரின் மைத்துனியும்

அபிநந்தா, துஸ்யந்தன், சர்மி, பிருத்திகா, பிருந்திகா, பிரியங்கா, கீர்த்தனன், ரோகித், தர்சன், தர்சிகா, நவிசங்கர், உஷாயினி, நிஷாயினி ஆகியோரின் ஆருயிர் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக் கிரியைகள் 12.01.2008 சனிக்கிழமை அன்று வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தொடர்புகளுக்கு:
மகன்: வவி (வவுனியா) 00 94-24 22 25 090
பத்மநாதன்-சாந்தி (லண்டன்) 020 8330 4530, 07913 743 102
கணேஸ் - மதி (கனடா) 001 416 832 1542
ராசன் (பிரான்ஸ்) 0033 1 4509 2749
செல்வம் (கனடா) 001 647 504 6713

பறக்கும் தட்டுக்கள் (Flying Saucers)



பாகம் 15

அமெரிக்காவின் அலாஸ்காவில் உள்ள விமானநிலையத்தில் உள்ள ATC ரேடர்களின் இயக்குனர் ஒருவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

வானில் வட்டவடிவான பொருட்களின் நடமாட்டத்தினை அவதானித்ததாகவும் அது ATC ரோடர்களில் 5.000mphற்கும் கூடிய வேகத்தில் பயணித்தது தென்பட்டது. என்றும் அத்துடன் அப்பொருளானது நம்ப முடியாமல் 90 பாகையில் திரும்பி மீண்டும் அதே 90 பாகையில் மறுபக்கம் திரும்பிச் சென்றது என்றும் கூறி இது மனிதனால் இயக்கப்படும் விமானங்கள். மற்றும் விண்வெளி ராக்கெட்டுக்களால் சாத்தியமாகாது என்றார். மேலும் அவை மூன்று தடைவைகள் ATC ரோடர்களில் தென்பட்டதாகவும் கூறினார் (UFO Evidence.org)

பொதுவாக எனக்குள்ளே எழுகின்ற சந்தேகமெல்லாம் விண்வெளிக் கப்பல்கள் கூட விண்வெளிக்குச் செலுத்துவதற்காகத் தயாரிக்கும் போது மிகக் கவனமாக வடிவமைக்கப்படுகிறது.

அதாவது புவியைச் சுற்றி ஒரு குறிப்பிட்ட தூரம் வரைதான் காற்று மண்டலமும் அமுக்கமும் உண்டு. அதன் மேலே எந்தவித அமுக்கமோ காற்று மண்டலமோ இல்லை என்தால் எந்தவித அமுக்க வேறுபாடுகளையும் அவ்விண்கலம் சமாளிக்கக்கூடிய விதத்தில்தான் அமைக்கப்படுகிறது. இதில் சிறு தவறுகள் நடந்தால் கூட அது தீப்பிடிக்ககூடிய சந்தர்ப்பம் உண்டு.

உதாரணமாக விண்வெளியின் முதல் வீரர் என்ற சாதனையை வென்ற ரஷ்யாவின் யூரி ககாரின் தனது கன்னிப்பயணத்தை வான்வெளியில் முடித்து விட்டு காற்று மண்டலத்திற்குள் நுளைந்த போது அமுக்கம் கூடிய காரணத்தினால் விண்வெளி கலத்தின் வெளிப்புறம் தீப்பிடித்து செந்நிறமாகக் காணப்பட்டது.

அத்துடன் அமெரிக்காவில் ஏற்பட்ட புயலினாலும் காலநிலை மாற்றத்தினாலும் அட்லாண்டிஸ் விண்கலம் தரையிறங்கத் தாமதமானது.

ஒரு விண்கலம் தரையிறங்கும் போது குறைந்தது 20 மைல் தூரத்திற்கு காலநிலை சீராக இருத்தல் வேண்டும். அப்படியிருக்கும் போது இப்பறக்கும் தட்டுக்களானது எவ்வாறு நினைத்த மாத்திரத்தில் வான்வெளிக்குச் சென்று உடனடியாகவே புவியின் தரைப்பகுதியில் எந்த இடத்திலும் எந்தக் காலநிலைகளிலும் தரையிறக்க முடிகிறது?. இது புரியாத புதிரே. இவ்வினாவானது பலவாசகர்களிடமும் எழும் என்பதில் சந்தேகமில்லை.

நான் முதல் கூறியது போல் சாதாரண மக்களைவிட பல முக்கிய பிரபலங்கள் கூட இவற்றைக் கண்டதாக வாக்கு மூலம் தந்துள்ளனர். அந்தவகையில் அமெரிக்க இராணுவத்தின் விமானப்படைப்பிரின் தலைமையகத்தைச் சேர்ந்தவர்கள் SAC Headquarters (Strategic Air Command) மற்றும் ஏவுகணைப்பிரிவின் தொழில்நுட்ப பொறியியலாளர்கள் அணுவாயுதப் பரிசோதனை ஒன்றுக்காக செப்டெம்பர் எட்டாம் திகதி 1958 ஆம் ஆண்டு ஒஃப்போல்ற் விமானப்படைத்தளத்தில்(Ouffutt Air Force Base) நின்ற போது ராடரிலும் செய்மதியிலும் மூன்று பறக்கும் தட்டுக்களை ஒன்றன்பின் ஒன்றாகக் கண்டதாகவும் அவை இருபது நிமிடங்களாகத் தென்பட்டதாகவும் அவற்றைத்தாம் பின்தொடர்ந்த போதும் அது சாத்தியப்படவில்லை. என விமானப்படை அதிகாரி மேஜர் பவுல் ஏ. டுய்ச் (Mejor Paul A.duich) தெரிவித்தார். இதன்போது புகைப்படமும் ஒளிநாடாவும் எடுக்கப்பட்டதாகவும். கூறினார்.;. (NICAP/ Richard hall (1964) From NICAP Case File)

விண்வெளி விநோதம்

எழுதுவது: அ. மயூரன்

மேலும் பப்புவா நியூகினியில் வாழ்ந்து வந்த அங்கலிக்கன் திருச்சபை மதகுருவான வில்லியம் பி. ஜில் அவர்களும் பொசினை என்கின்ற பெண் மதப்போதகரும் பப்புவா நியூகினியிலே மதப்போதனை ஒன்றை யூன் மாதம் 26ம் திகதி 1959ஆம் ஆண்டு நடாத்திக் கொண்டிருந்த போது. ஒரு பறக்கும் தட்டைக் கண்டதாகவும் அதிலே இரண்டு அலலது மூன்று மனிதர்கள் போன்ற உருவத்தினைக் கண்டதாகவும். பின் அது மறுநாள் 26 ஆம் திகதி மீண்டும் அதேபகுதியில் தென்பட்டதாகவும் இதை அந்நாட்டின் பல மக்கள் கண்டனர்.

இது குறித்து ஆராய்வதற்கு அமெரிக்காவிலிருந்து NICAP என்ற அமைப்பு பப்புவா நியூகினியவுக்குச் சென்று ஆராய்ச்சி செய்தது. என்றும் ஒரு செய்தி உண்டு.

நியுசிலாந்திலே மருத்துவராக இருந்த Mrs. மார்லண்ட் என்ற பெண்மணி பறக்கும் தட்டுக்களைக் கண்டதாகவும் அது நிலத்திலிருந்து 15அடி உயரத்தில் காணப்பட்டதாகவும் அது மிகுந்த பிரகாசமானதாக இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் 1960 ஆம் ஆண்டு கனடா நாட்டிலே தெழிலதிபராக இருந்த Miss M.I. பூட்னர் விக்டோரியா என்பவர் தனது நாயை கூட்டிக்கொண்டு பொழுது போக்காக நடந்து கொண்டிருந்தபோது திடீரென அங்கு தோன்றிய பறக்கும் தட்டானது அப் பெண்மணியின் தலையின் மேலே நீண்டநேரம் காணப்பட்டதாகவும் அதைத்தனதுநண்பரும்கண்டதாகவும்அத்தொழிலதிபர் சகூஷஹசி என்கின்ற நிறுவனத்திற்கு தெரிவித்ததாக Canadian UFO Report Summer 1970 தெரிவித்தது.

அடுத்துஸ்பெயின்நாட்டிலேவேற்றுக்கிரகமனிதனைப் பலமக்களும் கண்டனர். என்பதற்கு ஆதாரமாக காடிஸ் என்ற நகரில் இரண்டு குள்ளமான மனிதர்களின் சிலைகள் நகரை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. இது பற்றி செபலஸ் என்ற ஆசிரியர் கூறும்பொது 1960ஆம் ஆண்டு மே மாதம் இரண்டு வேற்றுக்கிரக மனிதனை இந்த இடத்தில் கண்டதாகவும் இவர்கள் குள்ளமாக இருந்ததோடு கஸ்ரப்பட்டு நடந்ததாகவும் இதை ஞாபகப்படுத்தும் முகமாகவே இவ்விடத்தில் இரண்டு சிலைகளை நிறுவியதாகவும் தெரிவித்தார் என ஸ்பெயின் நாட்டுப் பத்திரிகையான த ஸ்பெயின் எக்ஸ்பிரஸ் யூலை 1980 செய்தி வெளியிட்டது.

- தொடரும்

நடக்க இருக்கும் நிகழ்வுகள்

JAN 20 — SUNDAY @ 6PM

Mega Maalai

இம்பீரியல் கல்லூரி தமிழ் மாணவர் சங்கத்தின் வருடாந்த கலை நிகழ்ச்சி.

The London Palladium, 8 Argyil Street, London, United Kingdom

அனுமதி: தனிநபர் 8 பவுண்ஸ், குடும்பம்: 20 பவுண்ஸ்
தொடர்புகளுக்கு: செந்தூரன்: 07834 777 171, செல்வன்: 07956 058 849, அருள் 07743 896 913

JAN 26 — SATURDAY @ 5 PM

இன்னிசைக் குரல் - 2007

கவுன்சிலோ தமிழ் சமூக நடுவம் வழங்கும் பொங்கல் கலை நிகழ்ச்சி.

Watermans, 40 High Street, Brentford TW8 0DS.

தொடர்புகளுக்கு: 07947 816 273

JAN 27 — SATURDAY @ 6 PM

சங்கமம் 2008

Skyrose Welfare Fund - UK வழங்கும் கலை நிகழ்ச்சி. இசை, நடனம், நாடகம் என்பன இடம்பெறும்.

Beck Theatre, Grange Road, Hayes, Middlesex UB3 2UE

தொடர்புகளுக்கு: 07715013630, 07956662007

'சங்கமம் 2008'

ஸ்கைரோஸ் நலவாய்வு நிதியத்திற்காக ஸ்கைரோல் விளையாட்டுக்கழகம் வழங்கும் சங்கமம் 2008 கலைநிகழ்ச்சி இம்மாதம் 27ம் திகதி சனிக்கிழமை மேற்கு லண்டன் Hayes பகுதியிலுள்ள Beck அரங்கில் நடைபெறவுள்ளது.

வழமை போலவே இவ்வாண்டும் பல புதிய நிகழச்சிகளை அறிமுகம் செய்துள்ளார்கள் விழா ஏற்பாட்டுக் குழுவினர். திருமதி. உதயவாசினி இராமச்சந்திரனின் மாணவிகளின் நாட்டியாஞ்சலி, தமிழ் அவைக்காற்று கலைககழகத்தின் நாடகப்பள்ளி இளையவர்கள் நடிக்கும் 'பாவி' நாடகம், நீங்களா கோடீஸ்வரர்? நகைச்சுவை நிகழ்ச்சி, சித்திராலயாவின் 'இன்னிசை வார்ப்புக்கள்' என பல சிறப்பான நிகழ்சிகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்ச்சியிலிருந்து பெறப்படும் நிதி தலைநகர் திருமலையிலுள்ள தமிழ் மாணவர்களின் உயர்கல்விக்கான உதவித்திட்டங்களுக்கு பயன்படுத்தப் படவிருப்பதால் நல்லதொரு கலை நிகழ்ச்சியை பார்த்து ரசிப்பது மட்டுமல்லாமல் இம்மாணவர்களுக்கு உதவிய திருப்தியையும் பெறுவீர்கள்.

தாயகம் காக்கும் மனுவில் கையெழுத்திடுங்கள்

சிறிலங்கா அரசின் தமிழின அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக துரித நடவடிக்கை எடுக்கவாறு வலியுறுத்தியும் சிறிலங்கா அரசாங்கத்தின் மீது பொருளாதார அரசியல் தடைகளை ஏற்படுத்துமாறு கோரியும் சர்வதேச நாடுகளின் தலைவர்களுக்கு அனுப்புவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மனுவில் நீங்களும் கையெழுத்திடுங்கள்.

http://www.petitiononline.com/tamils2/

NAG & CO
SOLICITORS

Tel: 020 7737 1211 | Fax: 020 7737 0809
Unit 3 Holles House, Overton Road, Myattsfield Road South, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

- CRIME
- CONVEYANCING
- MATRIMONIAL
- IMMIGRATION
- TRAFFIC MATTERS
- LANDLORD & TENANTS
- POLICE STATION MATTERS
- EMPLOYMENT MATTERS
- WORK PERMITS

Goran Gates
ESTATE AGENTS

£0 Broker Fee

We do not charge broker fee for mortgages/remortgages/buy to let/ commercial/secured loans

உங்கள் வீட்டுக்கடன் தேவைகளுக்கு நாங்கள் எந்தவிதமான தரகர் கட்டணமும் அறவிடுவதில்லை

For friendly service, please call Mohan or Sanjiv:

020 8429 0033

Harrow, Rayners Lane சரவணபவன் உணவகத்திற்கு அருகாமையில்

421 Alexandra Avenue
Rayners Lane, Harrow,
Middlesex, Ha2 9SG.

Estates: 020 8429 2030
Mortgages: 020 8429 0033
Travel: 020 8429 2080
Fax: 020 8429 2002
www.gorangates.co.uk

YOUR HOME MAY BE REPOSSESSED IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON YOUR MORTGAGE.

எங்கள் ஊர் அழகியின் மரணம் மறைக்கப்பட்ட மர்மமாய்...

மழையில் நனைந்த நிலமும் மாரியில் கரைந்த புழுதியுமாக அந்தநாள். ஒவ்வொரு வீட்டுவாசலிலும் ஒவ்வொருவரையும் விசாரித்த படி பூசனியக்கா போனதும், அதன் பின் அவரது வீட்டிலிருந்து கேட்ட அழுகையும் அதன் பின்னால் நடந்த பூசனியக்காவின் சாவும் அந்தச் சிறுவயதில் அழுவதைத்தவிர வேறெதையும் செய்யத் தெரியவில்லை.

நஞ்சருந்தி தற்கொலை பண்ணிய பூசனியக்காவின் இழப்பானது அவரது குடும்பத்தைவிட மற்றவர்களுக்கு வழமையான ஒரு மரணவீடு. சில தசாப்தங்களைக்காலம் அள்ளிக்கொண்டு போன பின்னர் என் ஞாபகங்களுக்குள் பூசனியக்கா.....

எங்கள் ஊரின் அன்றைய அழகி பூசனியக்கா. இராமநாதன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த எங்கள் அழகியைத் தேடி ஊருக்குள் இளைஞர்கள் வருவார்கள். சமாதி கோவில் வளவுக்குள் கூட்டம் வைப்பார்கள், நோட்டீஸ் குடுப்பார்கள், ஏதோ சத்தமாக விவாதிப்பார்கள். அந்தவிவாதிப்பில் பூசனியக்காவின் குரல் உரத்துக் கேட்கும். பூசனி பெண் விடுதலை பேசுதாம், புளொட் இயக்கத்துக்குப் வேலை செய்யுதாம். ஊரில் சொல்வார்கள்.

அந்த அழகிக்கு ஊரில் உலவும் நாய்க் குட்டி முதல் ஊர்ச்சிறுசுகள் வரை சினேகிதர்கள். அவ்வளவுக்கு எல்லோருடனும் உறவு. அப்படித்தான் எனக்குள்ளும் பூசனியக்கா. தனது வீட்டிற்கு அழைத்து பாடம் சொல்லித் தருவது முதல் எங்களை அழகாக்கி கோவிலுக்கு அனுப்புவது வரை எல்லாம் அந்த அழகிக்குரிய குணங்கள். என் நினைவறிந்து பூசனியக்கா சினந்ததை நான் காணவில்லை.

கட்டுக் கட்டா கனக்க புத்தகங்கள் பூசனியக்காவின் அலமாரிக்குள் இருந்தன. அதெல்லாம் கன பெரியாக்கள் எழுதின புத்தகமாம் அதையும் அவதான் சொன்னா ஒருநாள்.

காலையும் மாலையும் சிவாகமியம்மனுக்கும், நாகபூசனியம்மனுக்கும் பூவைத்து கற்பூரம் கொழுத்தி அரை மணித்தியாலம் கண்களை மூடி கடவுளை வணங்குவா. அந்தளவு கடவுள் பக்தி.

எங்கள் ஊரின் அந்த அழகியை ஒருவன் காதலிக்கிறானாம்! பெரிசுகளில் தொடங்கி சிறுசுகள் வரை கதை பெருத்து எங்கள் அழகியைக் கொள்ளை கொண்டவனின் மிதியுந்து மாலை நேரங்களில் பூசனியக்காவின் வீட்டு வாசலில் நிற்கத் தொடங்கியது.

'அவையள் காதலிக்கினமாம் , தாய் தேப்பனுக்கும் விருப்பமாம், அவை ரண்டுபேரும் கலியாணங் கட்டப் போகினமாம்'.

அதன் பின்னர் பூசனியக்காவைத் தேடி வரும் இளைஞர்கள் அவ்வளவாய் வருவதில்லை. காரசாரமான அவர்களது விவாதங்கள் சமாதி கோவில் வளவில் கேட்பதுமில்லை. அதெல்லாம் அவாடை காதலனுக்குப் பிடிக்கி றேல்லயாம்.

திடீரென மாரிகால மாலையொன்றில் பூசனியக்கா வீட்டிலிருந்து ஐயோ....ஐயோ.... என்ரை பிள்ளை.....ஐயோ....என அழுகை.

பூசனியக்காவின் காதலனின் மிதியுந்து பூசனியக்காவின் வீட்டிலிருந்து வடக்கு நோக்கிப் போவதாகச் சொன்னார்கள்.

அந்த அழுகை கேட்டு ஊர் முழுவதும் பூசனியக்கா வீட்டு முற்றத்தில். பூசனியக்கா வாயிலிருந்து நுரை தள்ள தலை தொங்க தனது அறைவாசலில்... அவரது அம்மாவும், தங்கையும் சுற்றமும் அழுது துடிக்க மருத்துவமும் மீட்காமல் பூசனியக்கா செத்துப்போனா.

என் ஞாபகப் பதிவுகள்

மீட்டுபவர்: சுதந்திரா

கூடப் பழகினவையிட்டை பூசனியக்கா வருவாவாம்... அவைக்கு விரும்பினா தன்னோடை கூட்டிக்கொண்டுபோவாவாம்.... அந்தச்சாவை ஏற்க முடியாது அழுது நின்ற சிறுவட்டங்களின் காதில் விழுந்த செய்தி. பூசனியக்காவை அவான்ரை காதலன் ஏமாத்திப்போட்டாராம்.... அவேக்கை ஏதோ பிரச்சனையாம்.... அதுதான் பூசனியக்கா பொலிடோலைக் குடிச்சுப் பிணமாப் போனாவாம். அதுவும் தனது காதலனின் கண்முன்னால் பொலிடோலைக் குடிச்சிட்டு போத்தலை எறிஞ்சாவம். அதைப்பாத்திட்டு அவாடை காதலன் போட்டாராம்.

பூசனியக்கா ஏன் செத்தா? சிவராத்திரிக்குப் பாத்த படமொண்டிலை பாத்த மாதிரி பூசனியக்காவும் தன்ரை காதலனை பேயா வந்து பழி வாங்குவாவோ? அந்த முகம் சிரித்த சிரிப்பு, கதைத்த கதைகள், சொல்லித் தந்த பாடங்கள் என ஒவ்வொரு நினைவுக்குள்ளும் பூசனியக்கா...

மறுநாள் மரண நிகழ்வு. சின்னப்பிள்ளைகள் மரண வீட்டுக்குப் போகக்கூடாதாம், ஆச்சி சொன்னதோடை விட்டிருந்தால் பறவாயில்லை. சிவகாமியம்மன் கோவிலிலை தானாம் பூசனியக்கா பேயாச் சுத்துவாவாம்.

ஆச்சிக் கிழவி சொன்னதோடை அயலட்டைச் சின்னனுகள் ஒண்டும் சிவாகமியம்மனுக்கே இனி போறேல்லயென முடிவெடுத்திட்டுதுகள்.

மரண வீட்டுக்குப் போய் வந்த அம்மா கதை கதையாய் சொன்னா. பூசனியக்காவின் காதலன் செத்த வீட்டை போகேல்லயாம். அவற்றை சகோதரங்கள் மட்டும்தானாம் போனவையள். பூசனியக்காவை நினைக்க நினைக்க ஒரே அழுகையாகத்தான் இருந்திச்சு. பாவம் அவாடை அம்மா, அப்பா, தங்கைச்சி. அவையின்ரை முகங்கள்தான் நெடுகலும் ஞாபகத்தில இருந்திச்சு.

பூசனியக்கான்ரை மரணவீடு முடிஞ்சு எட்டுச் செலவு செய்திச்சினம். அண்டைக்கு இரவு படையல் செய்து ஊர் மூலை வரை போய் பேய் கழிக்க ஆண்கள் போச்சினம்.

முற்றத்தில இருந்த அம்மா, அம்மம்மா, மற்றும் முன்வீடு பின்வீடு அயலென இருந்த உறவுகளெல்லாம் அண்டைக்கு கெதியா வீடுகளுக்கை முடங்கீட்டினம்.

பேய் கழிச்சிட்டு வாறவையின்ரை கண்ணில யாரும் எதிர்ப்பட்டா அவையில பேய் வருமாம். பேய் வந்தா ரத்தம் கொட்ட ஆக்களை அடிச்சுக் கொல்லுமாம். பிறகு அவையும் கெதியில சாவினமாம்.

சாகிறதெண்டா ஆருக்குத்தான் பயமில்லை. நானும் ஓடிப் போய் அம்மம்மான்ரை பாயில சீலையாலை போத்துக் கொண்டு படுத்திட்டேன்.

இரவிரவா பூசனியக்கா உயிரோடை எங்களோடை உலவிறமாதிரி கனவுகள். அவான்ரை சிரிப்பும், கதையும் தான் சுத்திக் கொண்டிருந்திச்சு. அவா சாகேல்லப்போல சில வேளை உயிரோடைதான் எரிச்சினமோ? அப்பிடியும் சந்தேகம் வாற மாதிரி கனவில பூசனியக்கா.....

என் நினைவறிந்து முதல் முதல் பார்த்த சாவு. என்னோடு நெருங்கிய அந்த இழப்பு.... நானும் செத்துவிட வேண்டும் போல உணர்வுகள்.

கிணற்றுக் கட்டில் நின்று குதிக்கட்டோ எனவும், தோட்டத்தில மாமா வைச்சிருக்கும் பொலிடோலை குடிக்கட்டோ எனவும் எண்ணிய எனது எண்ணத்தைச் சொல்லப் போக என்ரை வகுப்பில படிச்ச பொன்மலர் சொல்லிச்சுது. தற்கொலை பண்றவைதானாம் பேயா அலைவினம். பூசனியக்காவும் இப்ப எங்கடை இலுப்பை மரத்தடியில இரவில உலவிறாவாம் என்றாள்.

அதோடை நானும் பூசனியக்காட்டை போக வேணுமெண்ட நினைவு மறந்து, நிலவு முழுதா தெரியிற நாளில பூசனியக்காவை பாக்கலாமெண்டு பொன்மலர் சொன்னதை நம்பி, முழுநிலவு வருநாட்களில் மட்டுமில்லை பிறையிலும் பூசனியக்காவைத் தேடி அலுத்தேன்.

பூசனியக்கா சாகக் காரணமான அந்த ஆளை வளந்து பிடிக்க வேணும். பூசனியக்கா சாகுமட்டம் என்னவாய்யாத்தனியெண்டுகேக்க வேணும். அந்தக் காதலனைப் பற்றி (கொலைகாரன்) நினைக்கும் போதெல்லாம் சொல்ல முடியாக் கோபம் வரும். ஆனால் ஊரில ஒருதரும் அதைப்பற்றி கணக்கக் கதைச்சவையே தவிர ஒண்டுமே செய்யேல்ல.

பூசனியக்கான்ரை சாவோடை பூசனியக்கான்ரை வீடு வெறிச்சுப்போச்சு. பூசனியக்கா வளர்த்த பூச்செடிகள் எல்லாம் வாடிக்கருகிக் கொண்டிருந்தன. அவான்ரை வீட்டுக்காறரும் அவாவில்லாமல் அந்தச் செடியளை என்னத்துக்கெண்டு விட்டிட்டினம் போல.

பூசனியக்காவுக்கெண்டு கட்டின வீடு பாதியில நிண்டுபோய் அந்த அத்திவார கொங்கிறீற்கள் நடுவில் முட்செடிகள்.

பூசனியக்கான்ரை அம்மா புவனமன்ரி பாவம் நெடுகலும் அம்மாவோடை கதைப்பா ஒரே அழுவா. அம்மாவும் கண்கலங்க அவாவை அழ வேண்டாமெண்டு சொல்லுவா. என்ரை பிள்ளையில்லாமல் என்ரை வீடு இருண்டு போச்சு. விம்முவா புவனமன்ரி. அந்த வீட்டின் மகிழ்ச்சியெல்லாம் போய்விட அந்த வீட்டின் மிஞ்சிய மூன்று சீவன்களும் நடைபிணங்களாயின.....

பேய் கழிச்சிட்டு வாறவையின்ரை கண்ணில யாரும் எதிர்ப்பட்டா அவையில பேய் வருமாம். பேய் வந்தா ரத்தம் கொட்ட ஆக்களை அடிச்சுக் கொல்லுமாம். பிறகு அவையும் கெதியில சாவினமாம்.

பூசனியக்காவின் சாவு நிகழ்ந்து சில மாதங்களில் பூசனியக்காவின் காதலன் வெளிநாடு போய் விட்டதாகச் சொன்னார்கள். பூசனியக்காவின் இழப்பைத் தாங்க முடியாமல் அவர் வெளிநாடு போனதாகச் சொன்னார்கள். வெளிநாடு போய் சிலகாலத்தில் அவருக்கு பெண் தேடுதல் நடந்தது.

உண்மையா காதலிச்சவை வேறை கலியாணம் செய்யாகினமாம். ஒருநாள் தோட்டத்தில புல்லுப்புடுங்கியபடி கந்தையாண்ணை சொன்னவர். தான் ஒரு பெண்ணை காதலிச்சவராம் அவைக்கை ஏதோ பிரச்சனை வந்ததாம் பிறகு கந்தையாண்ணை கலியாணமே கட்டாமல் 55வயதில தன்ரை காதலைச் சொன்னது தான் குழப்பமா இருந்தது.

காதலிச்சவர் காதலி செத்தாப்பிறகு இன்னொரு கலியாணஞ் செய்யிறதெண்டா என்னண்டு ஆரிட்டைக் கேக்கிறது. ஆரையேன் கேட்டாலும் அந்த நேரம் அடிதான் விழுந்திருக்கும்.

பூசனியக்காவின் காதலனுக்கு பெண் பார்த்து, பொருத்தம் பார்த்து, சம்மந்தம் கலந்து, திருமணமும் வெளிநாட்டில் முடிந்து தசாப்தம் இரண்டைக் கரைத்துக் காலம் தன் கதையை எழுதி விட்டது.

எத்தனையோ மாற்றங்கள் வந்த பின்னும் பெண் மீதான திணிப்புக்கள், வன்முறைகள் காரணம் அறியப்படாத சாவுகள் இன்றும் தொடர்கதை தான். பூசனியக்காவின் நினைவுகளையும் காலம் கதையாக்கி என்னுள்ளும் ... பூசனியக்கா...காரணம் கண்டறியப்படாத அந்த மரணம்..... இன்றும் காதல் தோல்வியென்ற ஒற்றைச் சொல்லுக்குள் எங்கள் ஊரின் அழகியின் சாவு மர்மமாய்.... மறைபட்ட மரணமாய்.....

Ness & Co. Immigration Conveyance Licensing Family Disputes & Others.

Quick and prompt exchange and completion of buying or selling your home.

Further representation to avoid detention when signing on at Home Office.

New Premises License for your Off License, Take-away and Fish & Chips Joints and Fried Chicken Shops.

உங்கள் அகதி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு நீண்டகாலம் வேலை செய்திருப்பீர்களாயின் விசா எடுப்பதற்கு appeals and representation on all Tribunal Hearing சம்பந்தமான சேவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

Direct Line: 020 8665 2226

Mr.Thavanesan (Ness)

to discuss in tamil or English

07956 913 164 / 020 8640 5050

38 London Road

Tooting, London, SW17 9HP

பெற்றோர்களே
உங்கள் பிரச்சனைகளை நாங்கள் அறிவோம்

பிள்ளைகளுக்கு கஸ்ரம் கொடுக்கும் பாடங்கள் என்ன என்பதை நாங்கள் அறிவோம். கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்

இதோ நாங்கள் இருக்கின்றோம் இனி என்ன கவலை.

Age group 9-11 on Mondays.
Age group 11-14 on Tuesdays.
Time: 7.30pm-10.30pm
Venue: Aksia Lounge,Opposite No:10, Southend Road, **Eastham**, London E6 2AA.
Fee: Twenty Pounds (£20) for three hours. Also in **Tooting** & **Harrow**

There will be 40 minute lectures and experiments/problem solving activities. Ten minutes test every day on each subject.Only children and parents who like to follow university degrees need to attend this seminars. No time wasters and people disregard education need to apply.

The seminars start on the first week of February 2008.
This is a golden opportunity for your children.
If they study with me for 5 years.

And if they do all the home work
I give them weekly,
I will make you proud of your
children's achievement.

The lectures will prepare motivated children for the highest grade in **Science-Maths-English.**

Booking by telephone: **07961 933 786** (Mrs. Shanthi Kumaran-Secretary)
e-mail: palaniveldavid@yahoo.co.uk

Please send your applications with £20 cheque for the first seminar, payable to"Dr.D.V.Palanivell' and forward your applications to:
Dr.D.V.Palanivell, 84 Southern Road,London E13 9JD.

Students Name: .....

Address: ..... Age: .....

Tel:.....e-mail: .....

உங்கள் பிள்ளைகளின் அடுத்த தவணைக்கான
Progress Reportஐ பாருங்கள்
எங்கள் கடும் உழைப்பு என்னவென்று
உங்களுக்குத் தெரியும்.



உங்களுக்கு அதிகம் வேலைகள் உள்ளன. பிள்ளைகளின் கல்வியை பராமரிப்பது என்பது பெரும் பொறுப்பு. கவலையை விடுங்கள் உங்கள் பிள்ளைகளை எங்கள் பிள்ளைகளாக நாங்கள் பார்க்கிறோம்

Three Hour Seminars in **Science-Maths-English**

By **Dr.D.V. Palanivell**,BDS, FDSRCS (England)

குஞ்சியெல்லோ கொழும்புக்கு வந்திட்டா

சுமார் இருபது வருடங்களுக்கு முன் கரவெட்டி .கிழவி தோட்டத்திலை சின்னாச்சி எண்டால் எல்லாருக்கும் தெரியும். ஆனா, இப்ப குஞ்சி எண்டாத் தான் தெரியும்.

நானும் கன நாளாய் யோசிச்சனான். ஏன் இவாவை குஞ்சி எண்டு கூப்பிடினம் எண்டு. பெருசு சின்னன் எண்ட வித்தியாசம் இல்லாம அவாவை குஞ்சி எண்டுதான் கூப்பிடுவினம். நான் மட்டும் எங்கள் உறவினர்களாக இருந்த படியினால் அம்மா எனக்கு 'குஞ்சியம்மம்மா' எண்டு சொல்லித் தந்து நானும் என் சகோதரர்களும் அம்மம்மா என்றே கூப்பிடுவம். ஆனா குஞ்சியம்மம்மாவின் பிள்ளைகள். எல்லாம் தாயை குஞ்சியெண்டே கூப்பிடுவினம்.

எனக்குள் இருந்த கேள்வியை அம்மாவிடம் ஒருநாள் கேட்டேன். அதற்கு அம்மா சொன்னா, தன்ர தாய்க்கு இரண்டு ஆண் பிள்ளைகளும், இரண்டு பெண் பிள்ளைகளும். என்றும் அதில குஞ்சி தான் கடைசியாய் பிறந்த படியினால் அவாவை எல்லாரும் குஞ்சி எண்டு கூப்பிட அவையிட்ட பிள்ளைகளும் குஞ்சியெண்டே கூப்பிட்டவை.

இன்னுமொரு விசயத்தையும் அம்மா சொன்னா. அந்தக் காலத்தில தாயின் இளைய சகோதரியை சித்தி, அன்ரி எண்டு கூப்பிடுவதில்லை. சின்னம்மா அல்லது குஞ்சி எண்டே கூப்பிடுவினம். இது இப்படியே பழகி ஊர்க்காரர் எல்லாம் குஞ்சியெண்டே கூப்பிட தொடங்கிற்றினம்.

இப்ப குஞ்சி கொள்ளுப் பேரனையும் பார்த்துவிட்டாள். எல்லோருடனும் அன்பாகவும் நகைச்சுவையாகவும் பேசுவதால் ஊர் மக்களுக்கு பரிச்சியமாக போய்விட்டார்.

குஞ்சிக்கு கன நாளாய் கொழும்புக்கு போக வேணுமெண்டு ஆசை. பிள்ளைகள் எல்லாம் வெளிநாட்டில. மூத்த மகன் மட்டும் கலியாணம் செய்து கொண்டு பக்கத்து ஊரில் இருக்கிறார். எப்பவும் இடைசுகம் கலியாண வீடுகள், ஊர்க் கோயில் திருவிழா எண்டால் தாய் வீட்டு ஒழுங்கையால் அவரின் மோட்டார் சைக்கிள் வந்து போகும்.

முந்தியெண்டால் அடிக்கடி வெளிநாட்டுச் சனம் யாழ்ப்பாணத்துக்கு வந்து போகும். உந்த முகமாலை பாதை திறந்திருக்கிற நேரத்தில இவள் தெய்வானை அக்காவின்ர தேவகி குடும்பத்தோட வந்து போனாள். அப்ப வீட்டுக்கு வந்தாள். அப்பதான் சொன்னவள்

'நிர்மலா அக்காவுக்கும் ஊருக்கு வரவேணும் எண்ட ஆசையாம். உடன வர முடியாது ஏன் என்டால் இப்பதான் லண்டனில வீடு வாங்கினவா. அதோட பிள்ளைகளின்ர படிப்பும். அதால ஒரு ஐந்தாறு மாதத்திற்கு பிறகு தான் வருவா'

நிர்மலா ஒவ்வொரு நாளும் டெலிபோன் கதைக்கும் போது அடுத்த மாதம் வாறன் எண்டு சொல்லிச் சொல்லியே முகமாலைப் பாதையும் மூடியாச்சு. 'இனி எப்படி வருவது? எல்லாம் கஸ்ரம். நீ கொழும்புக்கு வாணை. வந்து அக்கா வீட்டை நில். அக்கா வீடும் சும்மா தானே இருக்கு' எண்டு நிர்மலா கூற....

சிறுகதை

எழுதியவர் கு.தே. தாசன்

இப்ப இரண்டு மாதமாய் கொழும்புக்கு போற அடுக்கு. கிழவிதோட்டமே குஞ்சி கொழும்புக்கு போகப் போறா எண்டு களை கட்டிட்டு. குஞ்சியும் வெளிநாட்டில இருக்கிற பிள்ளைகளுக்கு பைக்கற்று பண்ணி தபாலில் அனுப்ப மிளகாய் அரைக்கிறது. பொரி அரிசி மா திரிக்கிறது எண்டு ஒரே ஆரவாரம். சனத்தோட கதைக்க கூட நேரம் இல்லை.

இவ்வளவு இருந்தாலும் ஒவ்வொரு நாளும் பூப்புடுங்கி கிழவிதோட்ட பிள்ளையார் கோவிலுக்கு ஒருமாலை கட்டிக்கொடுக்கிறதை மட்டும் விடடேல்ல. அதற்கு பிறகுதான் காலைச் சாப்பாடு. சில நேரம் மத்தியானத்திற்கும் சேர்த்து உலை வைக்கப்படும்.

இத்தனைக்கும் இடையிடையே கொழும்புக்கு போன் பண்ணி அங்க இருக்கிற செல்லம் மாக்காவின் மகளுடன் தனது பிரயாண ஒழுங்குகளை உறுதிப்படுத்திக் கொள்வார்.

போகும் திகதி கொழும்பில் வந்து விமானத்தில் வந்து பின்னர் பஸ்சில வெள்ளவத்தையில இறங்கிற இடம். நேரம் எல்லாம் இப்படியென ஏற்பாடு. இதனை பார்த்த பேரன் செந்தூரன்

'என்ன குஞ்சி அமைச்சர் போற மாதிரி ஒழுங்குகள் நடக்குது' என்றான்.

'உனக்கு என்னடா விளையாட்டாய் இருக்கு. கொழும்புக்கு போறது எண்டால் சும்மாவோ விதானையிட்ட போக வேணும் பிறகு ஏஜியேட்ட போக வேணும் எண்டு எத்தனை வேலைப்பாடு. நீ என்னென்டா என்னோட விளையாடுறாய்' என செல்லமாக கோபித்தாள்.

கொழும்புக்கு போற நாளும் வந்திட்டுது. நாளைக்கு பயணம். இவா செல்லம்மக்கா சொன்னவா 'பலாலியில செல் விழுதாம். ஒரு மோதகப்பூசையை பிள்ளையாருக்கு செய் குஞ்சி' எண்டு. அவா சொல்லுறது சரிதான் முதல் முதல் விமான பயணம். எண்டாலும் கிழவி தோட்ட பிள்ளையார் கைவிட மாட்டார் எண்டு நம்பிக்கையா இருந்தா.

'எண்டாலும் பாருங்கோ இங்க கொஞ்சப்பேருக்கு முகம் சரியில்லை. இந்த வயசிலையியும் கொழும்புக்கு போக வேணுமோ எண்டு. அதுக்கு என்ன செய்யிறது? அந்த நேரத்தில கஸ்ரப்பட்டு பிள்ளைகளை வளர்த்த படியால் தாயை கூப்பிடுதுகள்.

சில நேரம் இவா கனடாவிற்கு போயிடுவவாம் எண்டு சில பேரின் சில்லறைக் கதை. நான் எண்டெண்டு போவன். இஞ்ச கோவிலுக்கு மாலை கட்டிக் குடுக்க வேணும். இவன் பேரனின் கலியாணம் முடிய ஊருக்கு வந்திடுவன்' இப்படி குஞ்சி தனக்கு அண்டிய ஆட்களுக்கு சொன்ன கதை இது.

இண்டைக்கு பயணம் எல்லா ஒழுங்கும் சரி. கொழும்பில் இருந்து சிக்னல் கிடைத்து விட்டது அங்கு இறங்கும் போது அழைத்து செல்வதற்கு.

இப்ப இரண்டு மாதமாய் கொழும்புக்கு போற அடுக்கு. குஞ்சியும் வெளிநாட்டில இருக்கிற பிள்ளைகளுக்கு பைக்கற்று பண்ணி தபாலில் அனுப்ப மிளகாய் அரைக்கிறது. பொரி அரிசி மா திரிக்கிறது எண்டு ஒரே ஆரவாரம்.

'டே ஜெயம் இவன் சீரிபி கிருஸ்ண பிள்ளையிட்ட காருக்கு சொல்லு உன்ர ஆட்டோவில போகலாம் தான். கரவெட்டியில இருந்து யாழ்ப்பாணம் போறதுக்குள்ள நாரி முறிஞ்சு போகும்' என்றபடி, நடக்க முடியா நிலையிலும் பெரிய சூட்கேசுடன் குஞ்சியின் கொழும்பு பயணத்தை ஆரம்பித்தாள்.

கதைக்காமை இருந்தவையிலும் பயணம் அனுப்பும் சாட்டில் கொழும்பில் உள்ள பிள்ளைகளுக்கு பார்சல் கொடுக்க வந்திருந்தனர்.

'எணை குஞ்சி இதை குறை நினைக்கமா கொண்டு போ நீ போன் பண்ணு பிள்ளைகள் வந்து எடுக்குங்கள்' என்று தாளம் போட்ட கதைகள்.

'சரி சரி எங்கட சனத்தின்ர குணமே இதுதான். தேவையெண்டால் தான் வருவினம்' என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டு காருக்கு ஏறினாள். பிள்ளையாரைப் பார்த்துக் கொண்டு ஒரு கும்பிடு போட்டுக் கொண்டு எல்லாருக்கும் கையசைத்து விடை பெற்றாள்.

இனி வெள்ளவத்தையில போய் இறங்கின பிறகுதான் நிம்மதி. யாழ்ப்பாண விமான நிலையத்திற்கும் வந்தாச்சு.

'கிழவிதோட்ட பிள்ளையாரே எவ்வளவு சனம் போகுதுகள் நான் மட்டும் கொழும்புக்கு போக வேணும் எண்டால் எங்கட ஊர்ச்சனத்திற்கு விடியாது'

'எணை அம்மம்மா எங்க கொழும்புக்கே..?' என சக பிரயாணிகளின் விசாரணை.

இதிலேயும் பாருங்கோ ரகசியமாக சில இளம்வட்டங்கள் கதைக்கிறது கேட்குது.

'அங்க பார் கிழவிதோட்ட கிழவியை பெரிய சூட்கேசோட வெளிக்கிட்டுட்டா..பிள்ளைகள் அனுப்பிற காசில விசிட் பண்ணுறா.' இது குஞ்சியின்ர காதில விழுந்தாலும் காட்டிக் கொள்ளமால் பிரயாணத் துணைக்கு ஆள் வேணும் எண்டு கொண்டு பேசாம இருந்தா.

எண்டாலும் எங்கட சனம் நல்ல கெட்டிக்காரர் தான். எங்க இருந்து வாறன் எண்டதை என்ர சூட்கேசில இருந்ததை பார்த்து கண்டுபிடித்து கதைக்க தொடங்கிடுங்கள்.

பிளேனும் வெளிக்கிட்டு விட்டது.

'ஏடா சுவாதம் குத்துவனே..பிளேனை மேலே தூக்கிப் போட்டு பேந்து கொஞ்ச நேரத்தில நிற்கிற மாதிரி இருக்கு..நான் நினைச்சன் சரி. இதோட என்ர கதை சரி. எண்டு வேண்டாத தெய்வங்கள் இல்லை. பேந்து தான் பக்கதில இருக்கிற பிள்ளை சொன்னாள் அம்மம்மா கொழும்பு வந்திட்டுது. என்னால நம்பவே முடியேல்லை.

கொழும்பில வந்து இறங்கியாச்சு. எங்க அந்த இளம்வட்டங்கள் என குஞ்சியின் கண்கள் தேடின. ஒரு மாதிரி குஞ்சி பெடியளை கண்டு பிடிச்சிட்டா.

'யார் தம்பி கிழவி தோட்ட சனத்தை பற்றி கதைச்சது? கிழவி தோட்டத்தாரை பற்றி தெரியுமோ நல்லவங்கள் கோபம் வந்தால் தெரியாது.' எனக் காரசாரமாக விளாச பெடியள் நிற்கிற இடம் தெரியமால் மறைஞ்சிட்டுதுகள்.

வெள்ளைவத்தையில் வந்து இறங்க ஒரு ஆட்டோ வந்து பக்கதில நிண்டுது. ஏறுங்கோ அம்மா எங்க போக வேணும் கொண்டு போய் விடுறன். இது கொழும்பு ஆட்டோகாரனின் அன்பு வழியும் வார்த்தைகள்.

'நல்ல கதை எனக்கு தெரியாதே கொழும்புப் புதினம். போன முறை அன்னம்மாக்கா வந்து எல்லாத்தையும் குடுத்திட்டு வெறுங்கையோட போனது. இவர் வந்திட்டார்' இதற்கு முதல் நிர்மலா சொல்லிய அறிவுறுத்தலும் நான் சொன்ன ஆட்கள் வருமட்டும் இருக்கிற இடத்தை விட்டு அசையக் கூடாது.

இப்போது குஞ்சி தனது பயணத்தை நிறைவு செய்து கொண்டு ஊரில் இருக்கும் உறவினர்களுடனும். வெளிநாட்டில் இருக்கும் பேரப் பிள்ளைகளுடனும் தனது பயண அனுபவத்தை கதைத்துக் கொண்டு இருக்கிறா.

ஹா ஹா ஹா...

ஆசிரியர்: ஹோம் வொர்க்கை செய்து விட்டேன் என்கிறாய். எங்கே காணேல்லையே?

மாணவன்: www.homework.com என்ற வெப்சைட்டில் பாருங்க சேர்



வாழ்க்கைத் துணை

இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 416-297-4999
Fax: 416-335-6009

பிரான்ஸ்:
Tel: 01 7289 8165

சுவிஸ்:
Tel: 043 5000 277

email: info@orupaper.com

மணமகள் தேவை

1. In Canada since 1996, on 'leave to remain' status, graduate from Uni. of Canada, working in USA, 36 years, 5' 11", seeks a professional bride. *Ref: 1172*

2. Mother looking for a suitable bride for her son, UK born, 37 years, 5' 9", IT graduate and well employed in London. *Ref: 1171*

3. Graduate from Moratuwa (Sri Lanka) campus, working in London on Permanent Visa status, 38 years, 5' 11', a divorcee, looking for a bride in EU or Sri Lanka. Ref: 1170

4. Thirteen years in U.K, 37 years, 5' 5", A/L educated and self employed, looking for a suitable bride in UK only. Ref: 1169

5. ஆறு வருடங்களாக லண்டனில் வசிக்கும் 37 வயது, 5'6", sponsor செய்யக்கூடிய மணமகளை தேடுகிறார். Ref: 1168

6. Lecturer in a University in Sri Lanka, worked in the U.K for a 2 year- period, 32 years, 5' 5", seeking a bride, at least A/L, from abroad or Sri Lanka. *Ref: 1167*

7. Engineer 29 years, 5' 10", in Australia since childhood, presently well employed and working in USA, looking for a suitable bride. *Ref: 1166*

8. In the U.K since 2,000, qualified accountant form University of Wales, 36 years, 5' 10" looking for a suitable bride. *Ref: 1165*

9. In the U.K since 1990, now 'leave to remain' status, a divorcee, 38 years 5' 7", London Transport employee, since 1995, looking for suitable bride. *Ref: 1163*

10. பிரான்சில் வசிக்கும் 34 வயது 5'8", A/L படித்த மணமகனுக்கு வதிவிடமுள்ள மணப்பெண் தேவை. *Ref: 1164*

11. லண்டனில் 11 வருடங்களாக வசிக்கும் A/L படித்த 43 வயது. 5'5" உயரமுள்ள மணமகனிற்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். *Ref: 1161*

12. Professional groom, 30 years, 5' 8", on 5- year work visa, looking for a bride, a professional, or an undergraduate; sponsorship available, if needed. Ref: 1160.

13. லண்டனில் 11 வருடங்களாக தொழில் புரியும் மணமகன் 30 வயது 5" 7" நிரந்தர வதிவிடமையுள்ள மணமகளை தேடுகின்றார். Ref: 1159.

14. Professional, U.K qualified, 29 years, 5' 11", looking for a suitable bride in the U.K. Ref: 1158.

15. கைதடியில் வலுவிலந்தோர் பாடசாலையில் படித்த, வாய்பேச முடியாத, 39 வயது, 5'2" 11 வருடங்களாக ஜேர்மனியில் வசிக்கும் மணமகனிற்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர்.Ref: 1156.

16. Engineer from UK Uni., 27 years, 5'6", on temp.visa, seeking a suitable bride. Ref:1155

17. கொழும்பில் வசிக்கும், 27 வயது, 5'5", படித்த மணமகனுக்கு, கனடாவில் பிரஜாவுரிமையுள்ள தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1153

18. இந்தியாவில் கணனியில் நன்றாக தேர்ச்சி பெற்று தொழில் புரியும், 37 வயது, 5'6', மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றார். Ref:1152

19. பிரான்ஸில் 2 வருடங்களாக வசிக்கும், 4 6வயது, 5'6", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1151

20. A graduate from India, working over there, as the team leader in a private enterprise, 29 years, 5' 7", looking for a bride, a permanent resident, in Europe. Ref. 1150

21. UK citizen, living in Canada, well educated and with long service achievements in high positions, 46 years, 5' 11" tall, a divorcee, looking for a suitable bride. Ref: 1149

22. An Accountant in Germany since child hood, in the UK since 2004, 28 years, 5'8", looking for a suitable bride. Ref:1147

23. Msc quilalified accountant on working visa, 29 years 5'7", a divorcee, looking for a professional bride Ref:1146

24. மட்டக்களப்பை சேர்ந்தவரும், 3 வருடங்களாக பிரான்சில் வசிக்கும், 28 வயது, 5'3", மணமகனுக்கு, பிரஜாவுரிமையுள்ள மணமகளை தேடுகின்றனர். Ref:1145

25. In UK since 2000, on student visa, UK graduate, 29 years, 5'10", looking for a suitable bride with PR Ref:1142

26. In UK since 1998, 35 years, 6'2", O/L educated, in business, looking for a suitable bride.Ref:1141

27. Network Engineer, 7yrs. in the U.K, 29 years, 5'11", seeks a suitable bride.Ref: 998

28. IT பட்டதாரி, 30 வயது, 5'11", Student visaஇல் உள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1140

29. அவுஸ்திரேலியா பிரஜாவுரிமையுள்ள, computer engineer, 27 years, 5'8",மணமகனுக்கு,தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1137

30. கனடா பிரஜாவுரிமை, 28 வயது, 5'6", Engineer மணமகனுக்கு, தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1136

31. பிரான்ஸில் வசிக்கும், 29 வயது, 5'11", M Sc பட்டதாரி மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1135

32. In the UK since 1998, an honers Graduate, 35 years, 5'6", seeking a bride with a permanant residence from EU, Aus.or Canada. Ref: 1130

33. இந்தியாவில் வசிக்கும், 27 வயது, 5'5", Electronic Technician, மணமகனுக்கு தகுந்த மணமகளை EU, Canadaவில் தேடுகின்றனர். Ref:1127

34. ஜோயியாவில் படித்த Doctorம், தற்சமயம் UKல் student visaவில் இருக்கும், 32 வயது, 5'5", மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1125

35. சுவிஸில் 10 வருடமாக வசிக்கும், 36 வயது, 5'6", A/L படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1124

36. Professional 29 years, '6 ' tall,in the U.K since childhood, seeking a suitable bride. Ref: 1117

மணமகன் தேவை

37. இந்திய பல்கலை பட்டதாரி தற்போது லண்டனில் MA படிக்கும் 32 வயது 5'1" தகுந்த மணமகனை தேடுகின்றார். *Ref: 1606*

38. கொழும்பில் வேலை பார்க்கும் 29 வயது 5', A/L படித்த தகுந்த நிரந்தர வதிவிடவுரிமையுள்ள மணமகனை தேடுகின்றார். *Ref: 1605*

39. Professionally qualified bride living in Colombo, 27 years, 5' 4" looking for a suitable groom, a UK/USA citizen. *Ref: 1604*

40. Accounting professional, working in USA, 30 years, 5' 3", looking for a professionally qualified groom. *Ref: 1603*

41. Medical Doctor, born in New Zealand, working over there, 26 years, 5' 4", looking for a suitable university educated groom, with a deep concern for the plight of humanity. *Ref: 1602*

42. French citizen, a professional, 28 years, 5'7", looking for a professional groom, preferably, a French. *Ref: 1601*

43. யாழ்ப்பாண பல்கலைப் பட்டதாரி 30 வயது. 5'3". யாழ்ப்பாணத்தில் தொழில்புரியும் மணப்பெண்ணிற்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 1600

44. யாழ்ப்பாணத்தில் விஞ்ஞான ஆசிரியையாக வேலை செய்யும் 36 வயது, 5'3" மணமகளிற்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 1499.

45. Brother looking for sister 32 years 5' 3", working in Colombo, a suitable groom. Ref: 1498.

46. யாழ்ப்பாணத்தில் தொழில் புரியும் பட்டதாரி, 35 வயது, 5'6" மணப்பெண்ணிற்கு படித்த வதிவிடமை உரிய வரனை கனடா, EU நாடுகளில் தேடுகின்றனர். Ref: 1497.

47. கொழும்பில் வேலை புரியும் 31 வயது, 5' மணமகளிற்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 1496.

48. Civil Engineer, grew up in Germany, presently working in the UK, 28 years, 5'4", looking for a suitable groom. Ref:1495

49. Netherland citizen, and undergraduate, 23 years, 5'5", looking for a suitable groom. Ref: 1494

50. நோர்வேயில் சங்கீத பட்டதாரி, 34 வயது, 5'3", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1493

51. இலங்கையில் வசிக்கும், 38 வயது, 5'1", A/L படித்த, மணமகளுக்கு தகுந்த மணமகனை கனடாவிலுள்ள பெற்றோர் தேடுகின்றனர். Ref:1492

52. கொழும்பில் வேலை புரியும், O/L படித்த, 23 வயது, 5'5", மணமகளுக்கு தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1491

53. கொழும்பில் பட்டதாரி ஆசிரியை, 38 வயது, 5'4", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1490

54. கொழும்பில் வேலை புரியும், 32 வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1489

55. A graduate from Jaffna-Uni., doing Special there, 27 Years, 5' 4", looking for a suitable groom. Ref. 1488

56. யாழ் பல்கலைப் பட்டதாரி, 26வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1487

57. A graduate from Sri Jeyewar'pura-Uni, working as an assistant accountant in Colombo, 26 years, 5' 4", looking for a suitable groom in EU or Australia. Ref. 1486

58. இந்தியாவில் வசிக்கும் பட்டதாரி, 22வயது, 5'உயரம், மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டன், கனடாவில் தேடுகின்றனர். Ref :1484

59. UK born, 25 years, 5'5", a grauate in accountancy, looking for a professional groom. Ref :1483

60. லண்டன் வதிவிடவுரிமையுள்ள, பட்டதாரி, 29 வயது, 5'3", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1482

61. In the UK since 1985, A British citizen, 25 years, 5'2" a grauate and well employed looking for a suitable groom. Ref: 1479

62. கொழும்பில் வசிக்கும், விவாகரத்துப் பெற்ற 32 வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த மணமகனை EU / canadaவில் தேடுகின்றனர். Ref:1478

63. Qualified Doctor, working in Colombo, 28 years, 5'5", looking for a professional with PR in the UK.

64. Ref:1477

65. கொழும்பில் வேலை செய்யும், 38 வயது, 5'1", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1476

66. யாழ்ப்பாணத்தில் வசிக்கும் கல்வியற் கல்லூரி ஆசிரியை, 23 வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் தேடுகின்றனர். Ref:1475

67. கொழும்பில் வசிக்கும், O/L படித்த, 29 வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த கொழும்பில் வேலை பார்க்கும் மணமகனை தேடுகின்றனர். Ref:1474

68. வவுனியாவில் அதிபராக கடமையாற்றும், 43 வயது 5'5", மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1473

69. Born in Britain, a Graduate, 26 years, 5'4", seeking a suitable groom, from EU or USA. Ref:1472

70. Born in Britain, Professional Graduate, 33 years, 5'4", seeking a suitable groom, from EU or USA. Ref:1471

71. சென்னையில் வசிக்கும் பட்டதாரி, 28 வயது, 5'1", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1469

72. யாழ்ப்பாணத்தில் அரசாங்க உத்தியோகராக இருக்கும், 34 வயது 4'8", பட்டதாரி மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1468

73. யாழ்ப்பாணத்தில் அரசாங்க உத்தியோகராக இருக்கும், 37 வயது 4'5", பட்டதாரி மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1467

74. German citizen, 30 years, 5'3", educated & well employed,a divorsee looking for a suitable groom. Ref:1465

75. தாயகத்தில் பட்டதாரியாக வேலை செய்யும், 29 வயது, 5'3",மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1464

76. கொழும்பில் கணக்காளராக பணிபுரியம், 26 வயது, 5'5", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1463

77. கொழும்பில் வசிக்கும், 24 வயது, 5'5", படித்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை ஐரோப்பிய நாடுகளில் தேடுகின்றனர். Ref:1462

78. கொழும்பில் வங்கியில் முகாமையாளராக வேலை செய்யும், 41 வயது, 5'1", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1460

79. கொழும்பில் வசிக்கும், 47 வயது, 5'6", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1456

80. Educated bride, working in Colombo, 24 years, 5'2", seeks a suitable groom in the U.K. Ref:1453

81. கொழும்பில் வேலை செய்யும், பட்டதாரி மணமகள், 32 வயது, 4'10", தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1452

82. Professional bride, 34 years, 5'8", a U.K citizen, looking for a suitable groom. Ref:1451

83. Working in Colombo, 36 years, 5'1", A/L quarlified, seeks a suitable groom in the E.U or Canada . Ref:1450

84. In the U.K, on student visa, doing Ph.D, 34 years, 5'1", looking for a qualified groom in Europe with PR Ref:1449

85. லண்டனில் வசிக்கும், விவாகரத்துப் பெற்ற, 34 வயது, 5'6", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1448

86. Teacher in Jaffna, 34 years, 5'2", looking for a suitable groom. Ref:1447

87. கனடாவில் வசிக்கும், 30 வயது, 5'2", விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு, தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1446

88. கனடா பிரஜாவுரிமையுள்ள, 46 வயது, 5'5", Hotel Management படித்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1445

89. Govt. servant in Jaffna, 29 years, 5'3", a graduate, seeks a groom in Sri Lanka or abroad. Ref:1444

90. Jaffna born, in the U.K on student visa, 35years, 5'4", A/L qualified seeks a suitable groom. Ref:1443

91. மட்டக்களப்பில் பிறந்து A/L படித்து ஆசிரியையாக கடமை புரியும் 26 வயது 5'1" தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1442

92. Professional 27 years, 5'5",Ten years in the UK, looking for a Professional groom.Ref:1437

93. இந்தியாவில் Doctorஆக பணிபுரியும், 38 வயது, 5'3", மணமகளுக்கு தகுந்த மணமகனை India/ Sri Lankaவில் தேடுகின்றார். Ref:1430

94. Professional bride, a Canadian citizen 31 years,5'3',with traditional values seeking a suitable groom Ref: 1427

95. இந்திய மருத்துவ கல்லூரியில் பட்டம் பெற்ற 29 வயது, 5'8', கொழும்பில் வசிக்கும், மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref:1426

96. Professional bride, born in France, 24 years, 5'4', seeking a suitable groom. Ref:1425

97. டென்மார்க்கில் வசிக்கும், 24 வயது, 5'5', இறுதியாண்டு பல்கலைக்கழக மணமகளுக்கு தகுந்த மணமகனை ஐரோப்பாவில்/ இலங்கையில் தேடுகின்றார்.Ref: 1424

கவிதை

தமிழின் நிலை

தாயும் சேயும் பேசிடக் கேட்டேன்!
தமிழை விடுத்து வேறொரு பாசை!
ஏன் எனக் கேட்டேன்! எள்ளி நகையாடி
எக்காளமிட்டு ஏளனமாய் சொன்னாள்!

பரங்கியன் பாசை பணம் தரவல்லது!
பைந்தமிழ் படித்தால் பரதேசிதான் என்றாள்!!
பணம் தான் பாரில் எல்லாம் என்றால்
பத்தினியும் பரத்தையும் ஒன்றே என்றேன்!

பதறிப் போனாள்! பதில் வரவில்லை!
பாவம் அவள் என்ன செய்வாள்!
பாரில் பலரின் பரிதாப நிலையிது!
பதவியும் பணமும் படுத்தும் பாடு!!

சரித்திரத்தின் சதிகாரர்களால் சிதைக்கப் பட்ட
சிந்தனை!
சுதந்திரத்தின் சுவாசம் மறந்து சுகமாய் இருக்கிறது!!
சுயமாய் சிந்திக்கும் ஆற்றலிழந்தே!
சூழ நிற்கும் ஆபத்தை அறிய மறுக்கிறது!!

என்று மடியுமிந்த அடிமையின் மோகம் – என்றே
அன்று பாடிய பாரதியின் தாகம்!
இன்றும் இங்கே நீடிக்கின்றது – இது
நின்று நிலைத்திட நாம் விடலாமோ!

– ஆதவன்

அருகுகள்

சிறகடித்துப் பறக்கும் வண்ணத்துப்
பூச்சிகளை
ரசிக்கும் தருணங்களைக் காட்டிலும்
என்றைக்கேனும்
இந்த வண்ணக்கலவை நிறமிழந்து
போகுமோ என்ற அச்சம் மிகுகிறது.
இரவுப் பனியில் குளித்தெழுந்து தலை
துவட்டாத ஈரத்தில்
இதழ் மலரக் காத்திருக்கும்
ரோஜாக்களைப் பார்த்து
புன்னகைக்கவும் மறந்து போய்
இன்று ஒரு நாள் மட்டும்தானே இந்த
அழகு என
கவலை தொற்றிக் கொள்கிறது
ஓயாத உன் பேச்சோடு கலந்து வரும்
புன்னகையில்
அதிக பங்களிப்பு இதழ்களுக்கா
விழிகளுக்கா என
ஆராயவும் மனமின்றி இது
எனக்கானதா என
ஏக்கமே நிலை தடுமாறச் செய்கிறது
எதன் மீதுமான நிச்சயமற்ற
நம்பிக்கைகள்
தொடக்கமறியத ஒரு தேடலில் முடிந்து
போகிறது
தேடுவது எதுவெனத் தெரியாமலே
தேடலின் வீச்சு தொடர்ந்து
கொண்டிருக்கிறது
இருப்பை மறந்த தேடலில்
கரைந்து ஓடும் கால வெளியில்
தொலைந்து போவது
என் சுயம் மட்டுமே

– கண்மணி

வங்கக் கடலில் ஒரு கை

வங்கக் கடலினில் வலம்வரு கையிலே
வாலிபன் கட்டிளம் காளையாம் கிட்டுசேர்
சிங்கக் குருளைகள், சீரிய பண்பினில்
செங்களம் கண்டோர்! செப்பிடும் வித்தைகள்
பங்கமின்றிப் புரிந்தோர்! பாரினில் யாரும்
பன்னுதற் கரிய ஈகைதனை ஈய்ந்தோர்!
தங்கமா மணிகள் சங்கமித்த நாளில்
தாள்கள் பணிந்து சாற்றினேன் மாலை!

வரலாறு போற்றும் வல்வெட்டித் துறைதனில்
வளமார்ந்த குடும்பத்தில் வண்ணமுறத் திகழ்ந்து
தரமிக்க வாழ்வுதனைத் தன்னகத்தே கொண்டு
தூயவளாம் இராசலக் சுமியுடன் இணைந்து
மரபுபேண் மார்க்கத்தில் மானுட தர்மத்தில்
மனமொன்றி வாழ்ந்த சதாசிவப் பெரியார்
வரமெனக் கிடைத்த வளர்பிறை மகனின்
வனப்பினில் மகிழ்ந்து களிப்புறும் வேளை.

கிருஸ்ண குமாரெனப் பெயர்தனைச் சூட்டிக்
கிடைத்தற் கரியநல் பேறென வளர்த்து
அருமருந் தெனவே அவனியில் நினைந்து
அளவிலா வசதிகள் பலவும் அளித்துப்
பருவமாம் பள்ளிசெல் பாலகன் அவனும்
பாடங்கள் அனைத்திலும் முதல்வன் ஆனான்!
இருப்பினும் அரசின் கொடுமைகள் அன்று
இணைந்திட வைத்தது அண்ணன் தன்னுடன்!

நம்பிக்கை மிகுந்து நலமுற பகிர்ந்த
நாயகன் கிட்டுவின் நடத்தைகள் கண்டு
தம்பியும் யாழ்தள பதியென நிறுத்தித்
தக்கவே பொறுப்புக்கள் தம்மையும் அளித்தான்!
எம்முன்னோர் ஆற்றிய இணையிலா அறத்தினால்
இத்தகைப் பேறென யாழ்மக்கள் மகிழ்ந்தனர்!
அம்மண் மடிதவழ் அழகு மழலைகளும்
ஆரத் தழுவுவர் கிட்டு மாமாவென!

அமைதிப் பேச்சினை அரசுடன் தொடுத்த
அருமை நிறைமதி தளபதி இவனே!
இமைக்கும் பொழுதினில் ஏந்தியே ஆயுதம்
எடுத்துச் சுழற்றும் வீரனும் அவனே!
தமையனின் சொல்லிற் தம்பியாய் நடந்து
தானை நடத்திய திறலோன் தீரனே!
சமயத்தில் அறிவுரை பகரும் பலமிகு
சான்றுடை அமைச்சனும் ஆனான் கிட்டுவே!

கைதிப் பரிமாற்றம் தம்மை எமக்குக்
காட்டிச் சென்ற கருணை யாளன்!
கைவண்ணம் தன்னில் கதைகள் படைத்த
காவிய நாயகன் காண்பதற் கெளியோன்!
வையக மெங்கும் தங்கியே நின்று
வானமாய் உயர்ந்த வல்லுரை யாளன்!
தைத்திரு நாளில் தங்கமேனி நீக்கித்
தாயக நினைவுடன் விண்ணகம் அடைந்தனன்!

ஊடகத் துறையை உலகினில் வாழும்
அனைத்துத் தமிழனும் இயக்கிட வைத்தவன்!
பாடலெழுதும் பாவலன், புகைப்படக் கலைஞன்
பன்மொழி பயின்ற பரப்புரை யாளன்!
கூடுகட்டி வாழ்ந்தனன்! கொஞ்சுதமிழன் நெஞ்சத்தில்!
கூடியே மறைந்தனன் குற்றமில் நண்பருடன்!
தேடுகிறோம் சந்தன மேனிகள் தம்மை!
திருப்பா தங்கள் பற்றிட விழைந்தோம்!

– பவித்திரா

எழும் உனக்கேயடா!

எப்படி மாறிவிட்டது உலகம்–
மனிதா
எப்படி மாறிவிட்டது
உரிமை கேட்பவன்
ஒடுக்கப் படுகிறான்
உரிமை மறுப்பவன்
மதிக்கப் படுகிறான்.

தன் இனத்துக்காக
மொழிக்காக
நாட்டுக்காகப்
போராடுபவன் – தெரு
நாயைப் போல்
அடிக்கப்படுகிறான்!
தீவிரவாதி
சமூக விரோதி
அழிவுச் சக்தியென
நிந்திக்கப் படுகிறான்!

நிராயுதப் பாணியாய்
இருப்பவன் பக்கம்
நியாயமும் நிற்பதில்லை!
நீதிகேட்கும் போராளிப்பக்கம்
நித்தம் நித்தம் தொல்லை!
ஆயுதம் தாங்கி
அக்கிரமம் செய்பவரை
எவரும் கேட்பதில்லை!
அவன் ஊரையழித்தாலும்
உயிர்களழித்தாலும் – உலகம்
கண்டு கொள்வதில்லை.
ஈழம் ஆனாலும்
ஈராக் ஆனாலும்
குற்றவாளியாய்க்
கருதப்படுபவன்
மண்ணின் மைந்தனே!
கல்லை எறிந்து
எதிர்ப்பைக் காட்டுபவன்
தீவிர வாதியாம்!
ஆயுதம் ஏந்தி
உயிரை அழிப்பவன்
பாதுகாவலனாம்!

இருளில் மூழ்கி
உறங்கிக் கிடக்குது
உலகம் இப்போதடா!
விழித்துக் கிடந்து
போர் செய்துக் கிடப்பது
வீரர் நீங்களடா!
விடியும் நிச்சயம்
மடியும் பகைமை
வெற்றி உன்னதடா!
விடுதலை கிடைக்கும்
உலகே போற்றும்
தமிழீழம் உனக்கேயடா!!

– இமாம். கவுஸ்.மொய்தீன்

சரணம் சக்தி!

வன்னியைப் பிடித்திடுவோம்
வாற எட்டு மாதமதில்
என்னை நம்பி எல்லோரும்
எனக்குதவி செய்திடென்று
பொன்னை நம்பிப் பொன்சேகா
பொதுச்சபைக்கு அறிக்கை விட
தன்னை நம்பி வாழுகின்ற
தமிழ் மகனோ சிரித்திட்டான்

எத்தனைபேர் சொல்லியிந்த
எதிர் மறையாம் வாசகத்தை
சொத்ததுதான் எம்மதென்று
சொப்பனத்தில் அரசியலார்
பித்தர் எண்ணி சிங்களத்தை
பிசகாமல் நாட்கடத்த
சத்தியத்தின் வழிவந்தோர்
சந்தியிலே சிரிக்கின்றார்.

மண்ணெண்ணை விற்றவனும்
மந்திரியின் செயலாளன்
பெண்ணை விட்டு வந்தவனும்
பெரும் சபையில் வீற்றிருக்க – நல்
எண்ணை தடவுதற்காய்
எம் தமிழன் காத்திருக்கான்
எண்ணை ஏது எள்ளு விலை
எடுத்தவற்றால் தடவிடுவார்

த.சு மணியம்.

ஸ்ரீ துர்க்காதேவி ஜோதிடம்
தேவேந்திரன் சாஸ்திரி அவர்கள்

Mob: 07947 781 197
07857 414 342

Mobile inn
320,London Road, West Croydon
Surrey CR0 2TJ
(opposite Best Food super Market)
(Near Mithus Gold House)

திருமணப் பொருத்தம் சாதகம் குறித்துக் கொடுக்கப்படும்.

23 வருட அனுபவம் நிறைந்த இந்தியாவில் இருந்து முதன் முறை வருகை தந்துள்ள தேவேந்திரன் சாஸ்திரி அவர்கள் துர்க்கா அருள் கொண்டு கைரேகை மூலம் முகநாடி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள், கணவன் மனைவி ஒற்றுமை,கைரேகை, திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், தொழில், வியாபாரம், லட்சுமீகர விடயம்,கண் திருஷ்டி,கோட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பிறந்த பிள்ளைகளின் ஜாதகம் கணித்துக் கொடுக்கப்படும், தமிழ், இந்தி, ஆங்கிலம், தெலுங்கு ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும்.

Devendran Sastry

23 Years expert pandit at service, past, presents and future of your life, will be read over to you from your numerology, face reading, palm reading & horoscope reading prediction in Business, Education, job, Love, Marriage, Family problem, Court problems, Visa requirements, Sickness, Promotion, abroad, Money, Removal all type of black magic and evil things by performing prayers, Devi Upasana, Luxmi pooja also protecting from enemies and jealousy Protection for self, House Business, Spoken Languages: Tamil, Hindi & English.

Call: 07947 781 197 or 07857 414 342

Opening Hours: 9.30am to 8.30pm 7 Days a week

அறுவைப் பக்கம்

அட பாவிப் பயலே!

நம்ம பய் ஒருத்தன் கொஞ்ச நாளா சரியே இல்லங்க. நல்லா கல கலன்னு சிரிச்சுகிட்டே ஜோக் அடிச்சுகிட்டு பாக்குறவுகளையெல்லாம் கதறக் கதற ஓட்டிகிட்டு சும்மா கோயில் காளை கணக்கா துள்ளிகிட்டு சுத்திகிட்டு இருந்த பய இப்போ எல்லாம் ஏதோ மசக்கை வந்த பொண்ணு கணக்கா மூலையிலே போய் ஒக்கார்ந்துகிட்டு முகம் கொடுத்து பேசாம எங்கினயாச்சும் மூலையிலே போய் பதுங்கிகிட்டு மோட்டுவளைய பார்த்துகிட்டு இருக்குறான்.

'அட பாவி பயபுள்ள என்ன ஆச்சுடா உனக்கு?' ன்னு ஒருநாளு பயலுக்கு வேப்பிலை அடிச்சு கேட்டப்போ பய மொகத்துல அப்படி ஒரு வெக்கம்.

'டேய் நான் கூட சொல்லிகிட்டு இருப்பேன்ல என் ஆபீஸ்ல ரெண்டு பொண்ணுங்க ப்ராஜெக்ட் பண்ணுதுங்கன்னு. அதுல ஒரு பொண்ணு மேல எனக்கு ... என்னான்னு சொல்லத் தெரியலை ஆனா ஒரு மாதிரி 'பீலிங்' ன்னு சொல்ல சொல்லவே அப்படியே ட்ரீம் அடிக்கிறான்.

அடப்பாவிப்பயபுள்ள. அதுதானா இதுன்னு நெனச்சுகிட்டு 'டேய் என்ன இப்படி லேசா சூடம் காட்டிட்டு போய்ட்டா என்ன அர்த்தம்? கொஞ்சம் வெளக்கமா சொல்லு ராசான்னு' பயலுக்கு லேசா விபூதியடிசு வுட்டு கேட்டேன். இந்த மாதிரி மேட்டரெல்லாம் தான் நமக்கு அல்வா சாப்புடற மாதிரி ஆச்சே.

'டேய் பாண்டி அந்த பொண்ணுக என் கம்பெனியிலே ப்ராஜெக்ட் பண்ண வந்துதுங்க அதுகளுக்கு நானும் இன்னொரு பையனும் தான் 'கைட்' பண்ணறோம். ரெண்டுமே என்கிட்ட நல்லாதான் பேசுது. நான் எதைய சொன்னாலும் பெரிய ஜோக் கேட்ட கணக்கா வுழுந்து வுழுந்து சிரிக்குதுக. அப்படி சிரிக்குறப்போ அவ ஒரு பார்வை பார்ப்பா பாரு அதைப் பார்த்து நான் வுழுந்துடேண்டா' பயலுக்கு சும்மா காதல் பீலிங் ரெண்டு காலுலையும் சலங்கையக் கட்டிகிட்டு கன்னாபின்னான்னு ஆடுறது தெரியுது.

'சரி சரி அதான் ரெண்டு பேர் அதுகளுக்கு சொல்லி கொடுக்கறீங்களே உன்னையதான் பார்க்குதுன்னு எப்படிடா சொல்லுறே?' ன்னு கேட்டதுக்கு

'அட மாப்ளே அவன் சரியான சொம்புடா! வாயே தொறக்க மாட்டான் என்னமோ இவந்தான் பில்கேட்ஸுக்கே கோடிங் குரு மாதிரி எப்பபாரு கோடிங் தான். எப்ப அதுக கிட்ட பேசுனாலும் சப்ஜெக்ட்டு மட்டும் தான். அவனை வுடுடா. என்னைய மாதிரியே அவளுக்கு இப்படி பீலிங்ஸ் வந்து இருக்கான்னு எப்படியாச்சும் கண்டுபிடிக்கிறேன்னு பய கட்டபொம்மு கணக்கா டயலாக் வுட்டுட்டு கௌம்பிட்டான் !

பய அதுக்கபுறம் பாக்கணுமே! டெய்லி ஆபீஸுக்கு பேஷன் பேரேட் தான். வாயிலே விசில்தான். பய கால் தரையிலயே படரது இல்லை.

'ஏண்டா இந்த ஞாயித்துக்கெழமை லஞ்சுக்கு ஏதாச்சும் பீபே போலாமா?' ன்னு கேட்டா 'சாரி மாப்ளே என் ப்ராஜெக்ட் மேட்ஸோட லஞ்சுக்கு அப்பாய்ண்மெண்ட் பிக்ஸ் ஆய்டுச்சு கோச்சுகாதடா' ன்னு சொல்லிட்டு பிளிறிகிட்டு ஓடுறான். அடப்பாவி இப்படி ஒருத்திக்காக இருக்கறவனுகளை எல்லாம் அத்துவுட்டுட்டு போறியேடான்னு நெனச்சாலும் சரி நம்ம பய எஞ்ஜாய் பண்ணட்டும் மனசு என்னவோ வாழ்த்திகிட்டு தான் இருந்துச்சு. ஒரு பயலோட மனசு இன்னோரு பயலுக்குதானே தெரியும்?

இப்படியே பயலோட வண்டி டாப் கியர்ல ஒரு ரெண்டு மாசத்துக்கு ஓடிகிட்டு இருந்துச்சு. ஒரு ரெண்டு நாளா பயகிட்டே இருந்து மூச்சு பேச்சையே காணோம்.

'என்னடா கண்ணா சும்மா கொம்பு சீவுன சிம்பு கணக்கா வர்றவன் போறவனையெல்லாம் சும்மா பிரிச்சு மேய்ஞ்சுகிட்டு இருந்தே? இப்போ என்னடான்ன டி ராஜேந்தர் கணக்கா தாடியோட சீன் போடுறே என்ன விசயம்' ன்னு கேட்டதுதான் பய கண்ணுல இருந்து சும்மா குத்தால அருவி கணக்கா லிட்டர் லிட்டரா கண்ணீர். அட பாவி என்னடா ஆச்சும் சொல்லித்தொலைன்னு கேட்டா

'மாப்ளே நாலு நாளைக்கு முன்னால அவகிட்டே என் மனசை தொறந்துட்டேண்டா. அவ முடியாதுன்னு சொல்லி இருந்தா கூட பரவாயில்லை! ஆனா அவ அந்த கோடிங் கோயானை விரும்பரதா சொல்லீட்டாடா என்னால தாங்க முடியலைடா. பயபாரேன் எப்பவுமே ஏதோ கோடிங் எழுதர மாதிரியே 'சீனை 'போட்டுகிட்டு இருந்துட்டு 'கேப்'புல கெடா வெட்டீட்டாண்டா ! ஏண்டி எங்கூட தானே சிரிச்சு சிரிச்சு பேசுனே அவன்ந்தான் சரியான உம்மணா மூஞ்சி ன்னு சொல்லுவியேடின்னு கேட்டா அவர் அப்படி இல்லைடான்னு எவ்ளோ கிரேட்ன்னு சொல்லறாடா. பாருடா அந்த நாயி 'அவர்' ஆய்ட்டாரு. அந்தப் பன்னி என்ன பண்ணிக்கவுத்தானோ? இதைய கூட தாங்கிடேண்டா! ஆனா கடைசியா சொல்லறா 'டேய் உன்னைய பார்த்தா செத்துப் போன என் அண்ணன் மாதிரியே இருக்கே'ன்னு சொன்னா பாரு! அதுக்கு மேல என்ன பண்றதுன்னே தெரியலைடா.

நீங்க சொல்லற மொக்கை ஜோக்குக்கெல்லாம் சும்மா கெக்கேபிக்கேன்னு இந்த பொண்ணுங்க சிரிக்குதுன்னு அதுக பின்னாடி காதல் காவடி எடுத்துகிட்டு போய்டாதீங்க மக்களே. உங்கள ஒரு வடிவேலு அண்ணன் மாதிரியோ இல்லை விவேக் தம்பி மாதிரியோ நெனச்சு இருக்கலாம் யாரு கண்டா? அப்படியே எப்ப பாரு மானிடரையே மொறைச்சு மொறைச்சு பார்த்துகிட்டு 'பப்பரக்கா'ன்னு பேக்கு மாதிரி சீன் போட்டுகிட்டுபல மைனர் குஞ்சுக கண்ணாடியோட இருக்குதுக ! பார்த்து சூதானமா 'லவ்'வுங்கப்பூ !!

- ஜொள்ளுபாண்டி

திரைக்கதை எப்படி இருக்க வேண்டும்?

ஒரு திரைப்படத்தின் கதை எப்படி இருக்க வேண்டும் என்று பலரிடம் கேட்ட போது அவர்கள் தங்கள் தொழிலுக்கேற்ற விதத்தில் அளித்த பதில்கள்

டாக்டர்:

'கதையோட கரு கலையாம நிலைச்சு நின்னு முடியும்போது நறுக்னு மனசுல தச்ச மாதிரி இருக்கணும். முடிவு சிறப்பாக இருக்கணும்'

லி.ப்ட் ஆப்பரேட்டர்:

'கதை ஆரம்பிச்சதுலேர்ந்து முடியரவரைக்கும் ஜிவ்னு மேல மேல போய்கிட்டே இருக்கணும். இடையிலை நிக்கக் கூடாது.'

குத்துச்சண்டை வீரர்:

'விறுவிறுப்பா தொடங்கி படிக்கறவங்களை திக்குமுக்காட வைச்சு நெத்தியடியா முடிக்கணும்.'

குடிகாரர்:

'என்னதான் கதை அப்படி இப்படி போனாலும் அதன் மெயின் தீம் ஸ்டெடியா நிக்கணும். தள்ளாடக் கூடாது.

பாத்திரக் கடைக்காரர்:

'கலகலன்னு கதை போய்கிட்டே இருந்து ஒவ்வொரு பாத்திரமும் பளிச் பளிச்னு மின்னிக் கொண்டே இருக்கணும்.'

ஓவியர்:

'கதையோட நுனியும் முடிவும் என்னவென்றே தெரியாம வாசகர்களை குழப்பி அவரவர் எண்ணங்களுக்கு ஏற்ப புரிஞ்சுக்க விட்டுடணும்.'

லாரி டிரைவர்:

'கதை ஸ்பீடா போய்க்கிட்டே இருந்தாலும் பல அதிரடி திருப்பங்கள் வந்துக்கிட்டே இருக்கணும்.'

அரசியல்வாதி:

'எடுத்தோம் கவிழ்த்தோம்னு இல்லாம படிப்படியா இதயத்தில இடம்பிடிச்சு மனசை கொள்ளை கொள்ளணும்'

கிருஷ்ணன் அவதாரத்தில் வந்த சந்தேகம்

ஆசிரியர் மாணவர்களுக்குக் கிருஷ்ண பகவானின் அவதார மகிமையைப் பற்றிய பாடம் நடத்திக்கொண்டிருக்கிறார்.

'கம்சனுடைய தங்கைக்கு எட்டாவதாகப் பிறக்கும் குழந்தை கம்சனைக் கொல்லும். இது விதி என அசரீரி கூறுகிறது. இதைக் கேட்டு ஆத்திரமடைந்த கம்சன் வாசுதேவனையும்இ தேவகியையும் ஒரு சிறையில் அடைக்கிறான்.

முதல் குழந்தை பிறக்கிறது. கம்சன் அதை விஷம் கொடுத்துக் கொல்கிறான். சிறிது காலம் கழித்து இரண்டாவது குழந்தை பிறக்கிறது. கம்சன் அதை மலை உச்சியிலிருந்து தூக்கிப்போட்டுக் கொன்றுவிடுகிறான். மேலும் சில காலம் கழித்து மூன்றாவது குழந்தை பிறக்கிறது. அதை...' ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டே போக, ஒரு மாணவன் எழுந்து கேட்கிறான்.

'சார் கிருஷ்ணாவதாரத்தில ஒரு சந்தேகம்'

'என்னப்பா சந்தேகம்? கிருஷ்ணாவதாரத்தில் மொத்த இந்தியாவுக்கும் வராத சந்தேகம் உனக்கெப்படி வந்தது? சொல்லுப்பா'.

'சார்! தங்கைக்குப் பிறக்கப்போகும் எட்டாவது குழந்தைதான் கம்சனைக் கொல்லும் அப்படிங்கறது கம்சனுக்குத் தெரியும்தானே?'

'ஆமா! அதிலென்ன சந்தேகம்'?

'அப்புறம் எதுக்கு சார் இந்த கம்சன் வாசுதேவனையும், தேவகியையும் ஒரே சிறைக்குள்ள அடைக்கிறான். அவனுக்கு வெவரம் பத்தாதோ?

நன்றி : நிலாச்சாரல்

2020 முக்கிய செய்திகள்

மல்லாக்கப் படுத்து வீட்டின் மோட்டுவளையைப் பார்த்துக்கொண்டிருந்த நான் கால எந்திரத்தில் 2020-க்குப் பயணித்தால் என்ன எனத் திடீரென்று தோன்றியது. மூளையைக் கசக்கி அங்கு பத்திரிகைகளில் நான் படித்த தலைப்புச் செய்திகளே இவை.

தேதி : 24.9.2020

ஸ்பைடர்மேன் பாகம் 15 இன்று வெளியீடு

ஆஸ்திரேலியா எட்டாவது முறையாக உலகக்கோப்பையைக் கைப்பற்றியது.

ஐஸ்வர்யாராயின் ஏழாவது திருமணம் - சல்மான், விவேக், அபிஷேக் பங்கேற்பு

சன் டிவியில் 'கோலங்கள்' 4,450 வது பாகத்தைத் தொட்டது.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் கங்குலி தன் பதவியை ராஜினாமா செய்தார்.

திரிஷாவினுடைய இளைய மகள் ரஜினியின் புதிய படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார். படத்தின் பெயர் எம்.ஜி.ஆர்.

எட்டாவது முறையாக முதல்வராகப் பதவியேற்றார் 95 வயதாகும் கலைஞர் கருணாநிதி.

நடிகர் தனுஷ்க்கும், இயக்குனர் சூர்யாவுக்கும் டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது தனியார் பல்கலைக்கழகம்.

காஷ்மீர் பிரச்சினையில் விரைவில் சுமூகத் தீர்வு காணப்படும் - பிரதமர் ராகுல் காந்தி அறிக்கை.

சச்சின் டெண்டுல்கர் ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப்போவதாகத் தெரிவித்தார். ஆனால் தொடர்ந்து டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவார்.

பின்லேடன் சுற்றி வளைக்கப்பட்டான் - அமெரிக்கா அறிவிப்பு

ஓசோன் படலம் தடவப்பட்ட குடைகள் அமோக விற்பனை. இக்குடைகள் விற்பனையில் ரிலையன்ஸ் முன்னிலை.

பிரேமானந்தாவின் அப்பீல் மனுவை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதி அவர் நிரபராதி எனக் கூறி விடுவித்தார்.

- ரிசிக் குமார்

குடும்ப பாரம் குடும்ப பாரம் எண்டு சொல்லுறாங்களே? அது இதுதானா?

சினிமா

விமர்சனம்

புலி வருது

பஸ்சில் தூங்குகிற ஆசாமிகளை பார்த்து ஒரு சம்பவத்தை உருவாக்கி, அதை கொட்டாவி விடாமல் சுவாரஸ்யமாகபார்க்கவைத்த இயக்குனரின்சாமர்த்தியத்திற்கு ஒரு சபாஷ்.

நண்பனின் திருமணத்திற்கு மற்றொரு நண்பரான கருணாசுடன் பொள்ளாச்சிக்கு கிளம்புகிறார் ரமேஷ். தூக்கத்தில் கனவு வருகிறது. அதில், முகூர்த்த நேரத்தில் தாலி ஹோமகுண்டத்தில் விழுந்து எரிந்து போக, திருமணம் நின்று போகிறது. இந்த பெண்ணே வேண்டாம் என்று முடிவு செய்யும் நண்பனின் குடும்பத்தாரிடம் திருமணத்தை நிறுத்த வேண்டாம் என்று கெஞ்சுகிறார் ரமேஷ்.

ஆனால், அவர்களோ நீயாக இருந்தால் தாலி கட்டுவாயா என்று கேட்க, சம்மதிக்கிறார் ரமேஷ். மற்றொரு தாலி வாங்க டவுனுக்கு போகும் கருணாஸ் லாரியில் அடிபட்டு இறந்துவிட, இரண்டாவது கல்யாணமும் நின்றுபோகிறது. இதனால் மனமுடைகிற மணப்பெண்ணான மல்லிகா கபூர் தீக்குளித்து இறந்து போகிறார். இதெல்லாம் கனவுதானே என்று கல்யாணத்திற்கு போகிற ரமேஸிற்கு அதிர்ச்சி.

அங்கே இவர் கனவில் கண்ட மல்லிகாகபூர்! ஆனால் மணப்பெண்ணாக அல்ல, தோழியாக. அந்த ஒரு விஷயத்தை தவிர மீதி எந்த அசம்பாவிதங்களும் நடக்கவில்லை. ஆனால் அடுத்தடுத்து வருகிற கனவில், மல்லிகாகபூருக்கும் ரமேசிற்குக்கும் காதல் வருகிறது. ரமேசின் அப்பா மணிவண்ணனுக்கு நெஞ்சுவலி வருகிறது. நிஜமாகவே இவருக்கு மல்லிகா மேல் காதல் வருகிறது.

திருமணம் நடக்கப்போகிற நேரத்தில் மேற்படி கனவு பலித்துவிடுமோ என்று ரமேஷ் அஞ்ச, அப்பாவின் உயிர்தான் முக்கியம் என்று கல்யாணத்தையே நிறுத்தி விடுகிறார். பிறகு எப்படி இருவரும் ஒன்றிணைகிறார்கள் என்பது மீதி.

கதாநாயகன் ரமேசைவிட அதிக ஸ்கோர்களை அள்ளிக் கொள்வது கருணாஸ்தான். நன்றாக இருந்த தனக்கு மரண பயத்தை ஏற்படுத்திய நண்பனை அடிக்கடி கடிந்து கொள்வது ரசிக்கும்படி இருக்கிறது. கனவு பலித்துவிடப் போகிறதோ என்று அஞ்சிக் கொண்டிருக்கிற வேளையில் ஒரு பாதிரியாரை பார்க்கிறார்கள். ஆறுதலாக நாலு வார்த்தை சொல்வார் என்ற அவரிடம் ஆசிவாங்க போனால், அவரும் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக, உங்கள் கனவுகள் நிறைவேறட்டும் என்று ஆசிவழங்க, தியேட்டரே அதிர்கிறது. பல படங்களுக்கு பிறகு ரசிக்கும்படியான நடிப்பை வழங்கியிருக்கிறார் கருணாஸ்.

கனவுகாண்பதும் உளறுவதுமாகவேஇருக்கிறார் ரமேஸ். மல்லிகாகபூரை மறக்கவும் முடியாமல், அப்பாவின் உயிரை வாங்கும் அந்த கனவை புறக்கணிக்கவும் முடியாமல் அவஸ்தைப்படுவதை இயற்கையாகவே அவரால் வெளிப்படுத்த முடிகிறது. டயலாக் பேசும்போதுதான் வார்த்தைகளில் வழ வழா!

புதுப்பெண்ணின் வெட்கம், திருமணம் நின்று போன பின் தவிப்பு என்று கிடைத்த வாய்ப்பை சரியாக பயன் படுத்தியிருக்கிறார் மல்லிகாகபூர். கல்யாணத்திற்கு முன் வருங்கால கணவரோடு பைக்கில் போகும் எல்லா பெண்களின் ஏக்கத்தையும் அழகாக வெளிப் படுத்தியிருக்கிறார்.

கனவுகளுக்கு பலன் உண்டா என்று மனோதத்துவ நிபுணர்களிடம்கேட்கபோகிறார்கள். அவர்களோ, நம்பிக்கையை தருவதற்கு பதிலாக கனவில் வந்த சம்பவங்கள் 80 சதவீதம் நிச்சயமாக நடக்கும் என்று அவநம்பிக்கையை தருவது அதிர்ச்சி. திரைக்கதைக்காக டாக்டர்களின் பிரஸ்கிரிப்ஷனையே மாற்ற துணிந்திருப்பது, அநியாயம்.

ஸ்ரீகாந்த் தேவா இசையில் தேர் வருது பாடல் சரியான குத்தாட்டம். இதற்கு ஸ்ரீதரின் நடன அமைப்பும் பிரமாதம். ஒளிப்பதிவில் புரட்சிகள் படைக்கவில்லையென்றாலும் உறுத்தாமல் இருக்கிறது. ராஜசேகருக்கு பாராட்டுகள்.

என்றாலும் வருவது புலியல்ல. பூனையே

நன்றி : விடுப்பு

சினித்துளி

தியாகம் செய்த விக்ரம்



பொங்கலுக்கு 'பீமா' திரைக்கு வருகிறது. இதற்காக ஒருகோடி ரூபாய் தியாகம் செய்துள்ளார் நடிகர் விக்ரம். மூன்று வருடங்களுக்கு முன் தொடங்கப்பட்ட படம் 'பீமா' ஏ.எம்.ரத்னம், கல்லாவில் காசில்லாமல் தொடங்கியதால் இடையில் ஏகப்பட்ட தடைகள். ஒரு வழியாக படத்தை முடித்து நிம்மதி அடைந்தால், எதிரே வரிசையாக கடன்காரர்கள்.

கோர்ட், கேஸ் என நீண்ட அலைச்சலுக்குப் பின் கடன்களை ஓரளவு அடைத்து படத்தை வெளியிடலாம் என்றால் விக்ரம், லிங்குசாமிக்கு சம்பள பாக்கி.விக்ரமுக்கு ஒரு கோடி தர வேண்டும். இந்த நிலையில் விக்ரம் ஒரு கோடியும், லிங்குசாமி 30 லட்சமும் தங்கள் சம்பளத்தில் தள்ளுபடி செய்துள்ளனர். ஆனால் த்ரிஷா மட்டும் பைசா பாக்கியில்லாமல் வசூலித்து விட்டாராம்.

பட்டம் தந்த வினை

பட்டம் என்பது நடிகர்களுக்கு - குறிப்பாக தமிழ் நடிகர்களுக்கு - ஹெட்லைட் மாதிரி.அது இல்லையென்றால், இவர்களின் சினிமா வண்டி முன்னோக்கி போகாது.

இந்த பட்டம் மோகம் காமெடி நடிகர்களையும் விடவில்லை. ஆளுக்கு அரை டஜன் பட்டங்கள் இருந்தாலும் புதிது புதிதாக பெயருக்கு முன் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வகையில் வடிவேலு தன்து வைகைப்புயல் பட்டத்துடன் நகைச்சுவை திலகம் பட்டத்தையும் சேர்த்துக் கொண்டுள்ளார். இதனால் சிவாஜி மற்றும் எம்.ஜியார் ரசிகர்கள் கொதித்துப் போய் போர்க் கொடி தூக்கியிருக்கிறார்கள்.

சீமானின் கோபம்



அடிதடியும் ஆபாசமும் கலந்த படங்களைப் பார்த்து குமுறுபவர்களுக்கிடையே இடைக்கிடையே நல்ல படங்களைத் தந்து ஆறுதலளிப்பவர் இயக்குனர் சீமான்.

இவருடைய வாழ்த்துகள் ரிலீசுக்கு தயாராகி விட்டது. சீமான் அடுத்த படத்துக்கு தயாராகி விட்டார். தான் அடுத்து இயக்கவிருக்கும் படத்துக்கு கோபம் என்று பெயரிட்டுள்ள சீமான்,

இது தம்பி படத்தைப் போல ஒரு புரட்சி கதையை மையமாக வைத்து எடுக்கப்படும் என்றார். படத்தின் கதாநாயகன், கதாநாயகி யார் என்பதை இன்னும் முடிவு செய்யவில்லை.

பாண்டியன் காலமானார்

மண்வாசனை படத்தில் அறிமுகமாகி ஏராளமான தமிழ்ப் படங்களில் நடித்துள்ள பாண்டியன் 47 வயதில் கடந்த 7ம் திகதி காலமானார்.

குடல்வால் அறுவைசிகிச்சை செய்து கொண்ட பாண்டியன், சில காலமாகவே உடல் நலக்குறைவால் அவதிப்பட்டு வந்தார்.

புதுமைப்பெண், கிழக்குச் சீமையிலே, குருசிஷ்யன், நாடோடித் தென்றல் உட்பட 87க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் பாண்டியன் நடித்துள்ளார்.

- Accountancy & Auditing
- Business Start up Advice
- Business Plans & Cash Flow Forecasts
- Personal tax Affairs & Self Assesment
- Company Tax Affairs & Company Tax Return (CT 600)
- Preparing VAT, Payroll for the Sale Trader
- Patrnership & Limited Companies
- Company Formation
- Attending VAT & PAYE visits
- CIS Voucher & Construction
- Industry Services
- Tax Investigations
- Solicitors Accounts & Accounts Reports

அனைத்து தமிழ் உள்ளங்களுக்கும் உளம் நிறைந்த தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

TAMSONS
Accountancy & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

சினிமா

அடக் கடவுளே!

சலனன்
ஒரு பேப்பருக்காக

அடக்கடவுளே, அவ்வளவு பணமான்னுதான் கேட்கத் தோணுது. ரஜனிகாந்ததோட அடுத்த படத்துக்கு செலவு 120 கோடியாமே! மாமே இவ்வளவு செலவாப் போயிரிச்சா?

ரஜனிகாந்த அடுத்ததா நடிக்கப் போற படம் ரோபோ. இது ஷங்கர் டைரக்சனில் வருகிற படம். ரோபோ கதையை ஐந்தாறு வருசங்களுக்கு முன்னாடி கமல்ஹாசனிடம் சொல்லப்பட்டது. கமல்ஹாசனும் ஷங்கரும் செய்வதாக இருந்த படம். வழமைபோல கமல்ஹாசனின் தலையீடு இருந்ததில் கமலும் ஷங்கரும் முட்டிக்கொண்டு பிரிந்தது வேறு கதை.

ரோபோ படத்தைக் கிடப்பில் போட்ட ஷங்கர், விக்ரமை வைத்து அந்நியன் செய்தார். அதன் பிறகு ரஜினியை வைத்து சிவாஜி செய்தார். அது முடிய கிடப்பில் போட்ட ரோபோவை தூசி தட்டி எடுத்தார்.

ரோபோ படத்துக்காக பேச்சுவார்த்தை முதலில் ஹிந்தி நடிகர் ஷாருக்கானுடன் நடைபெற்றது. ரோபோ ஷாருக்கான் என்று பெரிய பேனரில் படம் தொடங்கும் முடிவு எடுக்கப்பட்டது. ஷாருக்கான் என்ன நினைத்தாரோ ரோபோ வில் நடிக்க முடியாது என்று மறுத்துவிட்டார்.

தென்னாட்டுக்குத் திரும்பினார் ஷங்கர். இம்முறை ரோபோ ' அஜித் என்று முடிவெடுக்கப்பட்டது. பில்லா அஜித், ரோபோ அஜித்தாக மாறி அதற்கான போட்டோசெசனும் நடந்தது.

ஆனா இப்போ வருகிற செய்தி ரோபோ அஜித் இல்லையாம், ரஜனிதானாம் என்று. இடையில் என்ன நடந்தது? அது அந்த 'ஷங்கரனுக்கே' வெளிச்சம்.

இனி ரோபோ ரஜனிதான் என்று முடிவான பின் நடந்த விசயங்கள்தான் சுவாரசியமானவை. ஆசியாவின் மிகப் பெரிய நிறுவனம் ஒன்று ரோபோ தயாரிப்பதாக முடிவெடுக்கப்பட்டது. அதற்கான பட்ஜெட் கூட அந்த நிறுவனத்திடம் ஷங்கர் தரப்பு கையளித்திருக்கிறது. இரண்டு நாளில் முடிவு சொல்வதாக அந்த நிறுவனம் வாக்குறுதி கொடுத்தது.

அந்த இரண்டு நாள் கேப்பில் (அதுதான் இடைவெளி) ஐங்கரன் இன்டர்நாசனல் அதிபர் லண்டன் கருணா நுழைந்து விட்டார்) மும்பையை சேர்ந்த EROS என்ற நிறுவனத்தைத் தன்னுடன் சேர்த்து.

உண்மையில் நடந்தது என்னவென்றால் ஷாருக்கான் ரோபோ புரொஜெக்ரை கைவிட்டதும் ஷங்கர் ஓடித்திரிந்து அஜித்தையும் கேட்டுப் பார்த்து இறுதியில் ரஜனியில் மையமிட்டார். ரஜனியும் ஓகே பார்க்கலாம் என்று மையமாகச் சொல்லிவிட்டு, லண்டன் கருணாவிற்கு போன் எடுத்தார்.

ரஜனி கைகாட்டிய திசையெல்லாம் லண்டன் கருணா ஓடித்திரிந்து, இந்த புரொஜெக்ரை கையில் எடுத்தார். இந்த புரொஜெக்ருக்கு செலவு எவ்வளவு தெரியுமா? அடக்கடவுளே, 120 கோடி இந்திய ரூபாய்க்கள்.

சரி, இதை இங்கிலாந்து பவுண்ட்ஸில் கணக்குப் பார்ப்போமா? 15 மில்லியன் பவுண்ட்ஸ் (கணக்கு சரிதானுங்களோ? நான் கணக்குல ரொம்ப வீக்குங்கோ) இந்த 15 மில்லியன் பவுண்ட்ஸை இலண்டன் கருணா செலுத்தப் போகிறார்? எப்படி? எதை நம்பி?

சரி நாங்கள் இனி விசயத்திற்கு வருவோம். ரஜனியின் 'சிவாஜி' படத்தை இலண்டனில் சுமார் அறுபதினாயிரம் ரசிகர்கள் பார்த்ததாகச் சொல்லப்படுகிறது. எப்படித்தான் கூட்டிக் கழித்தாலும் அதில் ஐம்பதினாயிரம்பேர் ஈழத்துத் தமிழர்கள். ஒரு ஆளுக்கு ஐந்து பவுண்ட் ரிக்கெற் என்று வைத்தாலும், இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் பவுண்டுகளை ஈழத்துத்தமிழர்கள் கொடுத்திருக்கின்றனர். அதாவது இலங்கை ரூபாயில் ஐந்து கோடி ரூபாவும், இந்தியப் பணத்தில் இரண்டு கோடி ரூபாவும் ஆகும்.

இது இங்கிலாந்து கணக்கு. இனி கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ் என்று கணக்குப் பார்த்தால்? அத்துடன் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் என்ற கணக்கும் உண்டு.

கணக்குப் பார்த்தார் இலண்டன் கருணா. ரஜனியின் ரோபோ படத்துக்கு 120 கோடி ரூபா செலவு. ஓக்கே முடியும். சிவாஜி படத்துக்கே 25 கோடி ரூபாதான் செலவு. கமலின் தசாவதாரத்துக்கு ஒன்றிரண்டு கோடி ரூபா கூட. அவ்வளவுதான். இது 120 கோடி ரூபா.

ஈழத்துத் தமிழரை நம்பித்தான் இந்த 120 கோடி ரூபா இல்லையா? ஓக்கே. ரோபோ ஒரு வருசத்திலேயோ 20 மாசத்திலேயோ வரப்போகிறது. ஈழத்துத் தமிழரே தயாராகுங்கள். இரண்டு வேலை செய்தவர்கள் மூன்று வேலையும், மூன்று வேலை செய்தவர்கள் நான்கு வேலையும், நான்கு வேலை செய்தவர்கள் ஐந்து வேலையும் செய்யத் தயாராகுங்கள். தொடர்ந்து 72 மணித்தியாலம் வேலை செய்யலாம் என்று கின்னஸ் சாதனை சொல்கிறது. ஈழத்தமிழர்கள் கின்னசுக்கும் மேலானவர்கள் அல்லவா? செய்யுங்கள். ஏனென்றால் ரஜனிகாந்த நம்முடைய கண்கண்ட தெய்வம், குலதெய்வம். இல்லையா? தலைவர் ரஜினிக்கு இதுவும் செய்யாவிட்டால் நாங்கள் தன்மானமுள்ள தமிழர்களா என்ன?

இலண்டனில் 'வெற்றி வீரன்' படத் தொடக்க விழா

இலண்டன் கீத் சினி ஆர்ட்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பான் வெற்றிவீரன் திரைப்படத் தொடக்க விழா தென் கிழக்கு லண்டன் லூசியம் சிவன் கொயில் மண்டபத்தில் 05/02/2008 அன்று நடைபெற்றது.

லண்டன் எழுத்தாளர் கீர்த்தி அவர்களது தயாரிப்பிலும் இயக்கத்திலும் தயாராகும் இந்தப் படத்தின் தொடக்க விழாவில் பல பிரமுகர்களும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்திருந்தனர்.

செலோலைட் சுருள்களில் தயாராகும் இந்தத் திரைப்படம் உலகம் முழுவதிலும் இநத வருடத்தின் கோடைக் காலத்தில் திரைக்கு வரும் என்று தயாரிப்பாளர் கூறினார்.

கோடம்பாக்கத்தில் பாதியும் இலண்டனில் பாதியுமாக படப்பிடிப்புகள் நடைபெற இருப்பதாகவும் தெரிவித்தனர்

ஆச்சி அரவாணியாகிறார்

யாரும் தொட முடியாத கின்னஸ் சாதனையை செய்தவர் மனோரமா. அவர் ஆயிரம் படங்களில் நடித்து இந்தப் பெருமையைப் பெற்றார். அதன் பின்னரும் நடித்துக் கொண்டே அவரது சாதனையை விசாலப் படுத்திக் கொண்டே போகிறார்.

அண்மையில் அவரை ஹ்ஜான்' படப் பிடிப்பில் சந்தித்தபோது... மகிழ்ச்சியாகக் காணப்பட்டார். இதில் அவர் அரவாணியாக நடிக்கிறார். இதுதான் அவரது உற்சாகத்துக்குக் காரணம். இனி ஆச்சியுடன் பேசலாம்...

ஆயிரம் படத்தில் நடித்ததை விட மகிழ்ச்சியாக உணர்வது போல் தெரிகிறதே...?

நான் நிஜமா சந்தோஷமா இருக்கேன். நான் ஆயிரம் படத்துக்கு மேல நடிச்சிருந்தபோதும் அரவாணி கேரக்டர்ல இதுவரைக்கும் நடிச்சது இல்லை. ஆயிரம் வேஷம் போட்டாலும் இதுமாதிரி ஒண்ணு வரலை. எத்தனையோ கதாபாத்திரங்கள் பண்ணிட்டேன். இதுமாதிரி ஒண்ணு ஏன் நமக்கு வரலைன்னு நினைச்சதுண்டு.

அவ்வளவு ஆர்வமா இருந்தீர்களா?

ஆமாம். நான் பத்திரிகைகளில் பலமுறை இதை சொல்லி என் ஆசையை வெளிப்படுத்தியிருக்கேன். எதுக்கு ஆசைப்படறீங்க... என்ன மாதிரி பாத்திரத்தில் நடிக்க ஆசைன்னு கேட்டால் நான் இதைச் சொல்வேன். அப்படி பல காலம் மனசுக்குள் இருந்த ஆசை இப்போ நிறைவேறியிருக்கு. இந்த 'ஜான்' படத்தை இந்திரன் டைரக்ட் பண்ணார். எஸ்.என்.எஸ். மீடியாங்கிற கம்பெனி தயாரிக்கிறாங்க. கதை சொன்னப்போ எனக்குப் பிடிச்சுப் போச்சு.

கதையில் உங்களுக்கு எந்த அளவில் முக்கியத்துவம் உள்ளது..? நகைச்சுவைக்காகவா... அல்லது...?

இதுவரை நிஜவாழ்க்கையிலும் சரி சினிமாவிலும் சரி அரவாணிகளை ஒரு கேலிப் பொருளா வேடிக்கைப் பொருளாத்தான் பார்க்கிறாங்க. அவங்களைக் கிண்டல் பண்ணி எத்தனை படங்கள் வந்திருக்கு. ஆனா இந்தப் படத்தில் அவங்களை ஒரு தாயைப் போல தாய்மை ஸ்தானம் தந்து டைரக்டர் காட்டியிருக்கார். அதுதான் எனக்குப் பிடிச்சி நடிக்கச் சம்மதிச்சேன்.

தனிப்பட்ட முறையில் அரவாணிகள் மேல் உங்களுக்கு அனுதாபம் உண்டா?

நிச்சயமா அவங்க மேல எனக்கு அனுதாபம் உண்டு. அவங்க இந்த சமுதாயத்துல கேலிப் பொருளா பார்க்கப்படறது மட்டுமல்ல இந்தப் பிறவிக்காக பல விஷயங்களில் கஷ்டங்களை அனுபவிக்கிறாங்க. அதை அவங்க யார்கிட்டே சொல்றது. எங்கே போனாலும் பிரச்சினை. பாத்ரூம் போவதில் கூட பிரச்சினை எந்தப் பக்கம் போவதுன்னு. இப்படி பல மனக் கஷ்டங்களை அனுபவிக்கிறாங்க.

நன்றி : எம்.எஸ்.என் தமிழ்

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.

ஒரு பேப்பர்

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ

creative artwork from **concept to design**

Abra Wholesale Ltd

UNIT 9P - H KYNOCH ROAD,
ELEY ESTATE, EDMONTON,
LONDON, N18 3BD.
Tel - 020 8887 9303
Fax - 020 8887 9304
E-mail - sales@abrawholesales.co.uk
Web - www.abrawholesales.co.uk

'We Lead Others Follow'

Today's GROUP

WE ARE OPEN 7 DAYS A WEEK

Monday - Friday 8.00am - 8.00pm,
Saturday & Sunday 9.00am - 3.30pm
Bank holidays 9.00am - 3.30 pm

CUSTOMER ENTRANCE & CAR PARK IN ELEY ROAD.

COMPANY REG. No. 4676700, VAT No. 806036162

TOILETRIES, MEDICINS, HOUSEHOLD, TOOLS, STATIONERY, TOYS, SOFTDRINKS & CONFECTIONERY

PROMOTION DATES
FROM 21ST JAN TO 17TH FEB 2008

FRUIT PASTILLES BLACK CURRANT 48X42.5G £11.49 24p/unit

LION BAR 48x55G £10.49 22p/unit

BOUNTY 24x57G £4.79 20p/unit

GALAXY HAZELNUT 24x120G £17.49 73p/unit

ANDREX TOILET ROLLS PM £1.79 10x4'S V.A.S. £12.79 £1.28/unit

ARIEL WASHING POWDER PM £2.69 8x950G V.A.S. £13.89 £1.74/unit

KIT KAT 48x4'S £10.79 22p/unit

REVELS CHOCOLATES 36x35G £9.99 28p/unit

HARIBO 12X175G V.A.S. £4.99 42p/unit

DOMESTOS BLEACH PM 99p 15x750ML V.A.S. £9.99 67p/unit

LENOR PM £1.48 8X750ML V.A.S. £7.99 £1.00p/unit

MR MUSCLE TRIGGER 6X750ML V.A.S. £5.69 95p/unit

COKE/ C.LIGHT/ FANTA CANS 24x330ML £4.19 17p/unit

COKE 8x2LTR REDTOP BEST PRICE IN DEPOT

7UP CAN 24x330ML £3.19 13p/unit

LUCOZADE 24x330ML V.A.S. BEST PRICE IN DEPOT

PEPSI MAX/LIGHT CAN 24x330ML £3.19 13p/unit

CRISTALINE WATER 6x1.5LTR 99p 17p/unit 24 x500ML £2.29 10p/unit

ACE STAIN REMOVER PM99p 10x1L £6.99 70p/unit

ZOFLORA DISINFECTANT 12X56ML V.A.S. £4.79 40p/unit

TOILET DUCK 6X750ML V.A.S. £3.29 55p/unit

EASY

WASHING UP LIQUID 12X625ML V.A.S. £3.49 29p/unit

BLEACH 12x825ML V.A.S. £3.49 29p/unit 6x2LTR V.A.S. £3.29 55p/unit

WASHING POWDER 6X850G V.A.S. £3.49 58p/unit

1001 AUTO SHAMPOO 6x500ML £3.79 63p/unit

SPRUCE N CLEAN 6x500ML £5.49 92p/unit

TROUBLE SHOOTER 6x500ML £6.79 £1.13/unit

CARPET CLEANER 6x450ML

MONEY BOX 45p

CORDLESS KETTLE 1.8LTR £3.69

STEAM IRON 1200W £3.69

8 DIGIT **CALCULATOR 49p**

NEUTRADOL CARPET DEODORANT 12X525G V.A.S. £5.99 50p/unit

DETTOL 12x125ML £7.99 67p/unit 6x500ML £6.99 £1.17

DOVE BATH RELAXING SHOWER CREAM 6x500ML V.A.S. £7.89 £1.32p/unit

ROLL ON (EU) 6x50ML V.A.S. £3.99 67p/unit

COLGATE TOOTHBRUSH 12PK EXTRA CLEAN £2.99 25p/unit

MASSAGER £4.69 39p/unit

ZIG ZAG PLUS £3.29 27p/unit

COLGATE TOOTHPASTE 12X100ML MAX CAVITY £4.49 37p/unit

ADVANCED WHITENING £5.49 46p/unit

HERBAL £4.49 37p/unit

JOHNSONS COTTON BUDS 6X100'S £3.29 55p/unit 6X200'S £4.89 82p/unit

BABY POWDER 6X200G £3.49 58p/unit

BABY SHAMPOO 6X500ML £6.49 £1.08/unit

FAIRY WASHING UP LIQUID PM 99p 14X500ML LEMON/ORIGINAL £9.49 68p/unit

AQUAFRESH TOOTHPASTE BLUE 12x100ML £4.79 40p/unit

VASELINE LIP THERAPY 12X20G V.A.S. £6.79 57p/unit

ABRA IS THE PLACE TO SHOP FOR THE BEST WEEKEND SPECIALS EVERY WEEKEND

1000'S OF POUND LINES IN STOCK @ ALL TIMES

HEAD & SHOULDERS SHAMPOO 6x400ML V.A.S. £9.99 £1.67/unit 6X200ML V.A.S. £5.99 £1.00/unit

KOTEX P/M99P 4PK VAS £2.69 67p/unit 5% VAT

JEYES BABY CARE WIPES 12X80s £6.49 54p/unit

IMPERIAL LEATHER CREAM BATH 6X500ML V.A.S.

HAND WASH 6x300ML V.A.S.

SHOWER GEL 6X250ML V.A.S. £3.69 62p/unit

GILLETTE SHAVE FOAM 6X200ML V.A.S. £4.29 71.5p/unit

TUSK BODY SPRAY 12 X175ML V.A.S. £3.49 29p/unit

NUROFEN EXPRESS LIQUID CAPS 10'S £9.49 £1.58/unit

SANEX BODY SPRAY 6x150ML V.A.S. £4.89 82p/unit

LYNX BODY SPRAY AFRICA/CLICK 6x150ML V.A.S. £7.99 £1.33/unit

SHOWER GEL 6X400ML V.A.S. £7.29 £1.22/unit

ALL PRODUCTS ARE SUBJECT TO GOVERNMENT SUBSIDY, DUTY CHARGES AND AVAILABILITY.
WE HAVE THE RIGHT TO RESTRICT QUANTITIES IF NECESSARY.
E & O.E.

WHERE TO FIND US

ALL MAJOR CARDS ACCEPTED

SHOP ON LINE @ www.abrawholesales.co.uk

2ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு அனைத்து வைர நகைகளும் 40% விலைக் கழிவில் 27/01/08 வரை)

பழைய நகைகளைக் கொடுத்து புதிய நகைகளை இன்றே பெற்றுக் கொள்ளுங்கள்

அதிரடி மலிவு விற்பனை

27/01/08



சித்திரை முழுநிலா போல்
சிரிக்கும் வதனத்திற்கு
முத்திரை பதிக்கும்
முழுமையான தங்க வைர நகைகள்

இலவசம்.

2வது ஆண்டு நிறைவை ஒட்டி £250க்கு மேல் நகைகள் வாங்குகவோருக்கு ஒரு **Montag Watch** (Swiss Made, 2 years guarntee, 26/01/08 வரை)

ABI DIAMOND

Tel: 020 8423 0055
305 Northolt Road, South Harrow, HA2 8JA